REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2023 டிசம்பர் 12 செவ்வாய்க்கிழமை

வரு. 91 இல. 294 | Tuesday 12, December, 2023 | 12பக்கங்கள் | 50/-




## பல்கலைக்கழகங்களின் கேந்திர நிலையமாக இலங்கை மாற்றப்படும்

### பல்கலைக்கழக, தொழிற்கல்விகளை அபிவிருத்திக்கு பயன்படுத்த திட்டம்



பல்கலைக்கழகக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி கல்வியை நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்தும் வேலைத் திட்டம் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நாட்டை அபிவிருத்திக்கு இட்டுச்

04



### புலம்பெயர் தொழிலாளர்களுக்கான தொழிற்சந்தை, பாதுகாப்பில் கூடிய கவனம்

கொழும்பு அமைப்பின் செயற்குழு கூட்டம் இன்று

03

## குற்றச்செயல்களை புரிந்த பலர் கொழும்பில் தலைமறைவு

# கொழும்பில் சகல இன, மத மக்களுக்கும் பொலிஸ் பதிவு

## தமிழ் மக்களை மட்டும் இலக்கு வைக்கவில்லை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

**மனோ கணேசன் MP யின் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் டிரான் அலஸ் பதில்; பல தடவைகள் விளக்கிக் கூறியும் அவர் குற்றச்சாட்டை முன்வைப்பது கவலை தருவதாகவும் அமைச்சர் தெரிவிப்பு**



தமிழர்களை மாத்திரம் இலக்காகக் கொண்டு கொழும்பு மாவட்டத்தில் தகவல்கள் திரட்டப்படவில்லை எனத் தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு சகலரதும் தகவல்களும் திரட்டப்படுவதாகத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கொழும்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் தகவல் சேகரிப்பு தொடர்பில் தெளிவுபடுத்தலை கோரினார்.

இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கொழும்பு மாவட்டத்தில் வாழ்பவர்களிடமிருந்து தகவல் பெறும் நடவடிக்கை 90 சதவீதமளவில் நிறைவடைந்துள்ளது. இதில் ஒட்டுமொத்த மக்களது தகவல்களும் உள்ளடங்குகின்றன. தகவல்கள் சேகரிக்கும் நடவடிக்கைகளை எந்த விதத்திலும் நிறுத்த முடியாது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தகவல்

04

## சர்வதேச நாணய நிதியத்துடன் இன்று தீர்க்கமான கலந்துரையாடல்



இரண்டாவது கடன் தவணையை பெற்றுக் கொள்வது தொடர்பில், சர்வதேச நாணய நிதியத்துடன் இன்று (12) தீர்க்கமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி தெரிவித்தார்.

கலந்துரையாடலின் பின்னர் இரண்டாவது தவணை நிதியினை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். கடனை மீளச் செலுத்தும் இலங்கையின் செயற்பாடுகளில் கடன் வழங்கும் நாடுகள் வெளியிட்ட நம்பிக்கையின் அடிப்படையிலேயே, இரண்டாம் கட்ட நிதியை வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

## 'வற்' வரி திருத்தச் சட்ட மூலம் 45 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது

### ஆதரவாக 100, எதிராக 55 வாக்குகள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



பெறுமதி சேர் வரி (வற்) திருத்தச் சட்டமூலம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாமல் நேற்று சபையில் நிறைவேற்றப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பு, கூச்சல், குழப்பங்களுக்கு மத்தியில் 45 மேலதிக வாக்குகளினால் மேற்படி திருத்தச் சட்ட மூலம் சபையில் நிறைவேற்றப்பட்டது.

பெறுமதி சேர் வரி (வற்) திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வாசிப்புக்கள் மீதான விவாதத்திற்கு நேற்று இரவு 8 மணிவரைக்குமான

04

## அஸ்வெசும: இரண்டாம் கட்ட விண்ணப்பங்கள் அடுத்த மாதம்

### உதவி பெறுவோர் 20 இலட்சமாக வரையறை



அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் முதலாம் கட்டத்தை முழுமையாக மீளாய்வு செய்யவும், அடுத்த மாதம் இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பங்களை கோருவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கு முன்னர், முதலாம் கட்டம் தொடர்பில் முழுமையான மீளாய்வை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முதலாவது கட்டத்தில் நிலவிய சிக்கல்களுக்கு

04

## தாமரை கோபுரத்தில் சுழலும் உணவகம்

### நேற்று முதல் மக்கள் பாவனைக்கு



சிட்ரஸ் ஹோட்டல் குழுவுடன் இணைந்து இந்த உணவகம் கடந்த சனிக்கிழமை (09) பொதுமக்களுக்காக திறக்கப்பட்டது. இந்த சுழல் உணவகம் நேற்று (11) முதல் பொதுமக்களின் பாவனைக்காக திறக்கப்பட்டது.

இந்த உணவகத்தின் வருவாயில் 80% தாமரை கோபுரத்திற்கும் 20% சிட்ரஸ் ஹோட்டலுக்கும் உரித்தாகுமென தெரியவந்துள்ளது. இதில், ஏழு நாடுகளின் உணவு வகைகள் உள்ளன. மேலும்,

04

## ஊடகத்துறையில் உயர் விருதுபெறும் 'தினகரன்' நிலாம், தில்லைநாதன்



**இன்று வாழ்நாள் சாதனையாளர் விருது பெறுகின்றனர்**

தினகரன் பத்திரிகையுடன் பல தசாப்த காலமாக ஒன்றிணைந்து பணியாற்றி வருகின்ற மூத்த ஊடகவியலாளர்களான எம்.ஏ.எம். நிலாம், கரவெட்டி எஸ். தில்லைநாதன் ஆகிய இருவரும் 'வாழ்நாள் சாதனையாளர்' என்ற அதியுயர் விருது வழங்கி

04

## விவாகரத்தை இலகுவாக்கும் 03 சட்டமூலங்கள் விரைவில்

### வருடக்கணக்கில் வழக்குகள் இழுபறியாவதற்கு முடிவு



விவாகரத்துப் பெறுவதை இலகுவாக்கும் மூன்று புதிய சட்டமூலங்கள் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென, நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன்படி, திருமணக் காரணங்கள் சட்டம், வெளிநாட்டு விவாகரத்து தீர்ப்புகளை அங்கீகரிக்கும் சட்டம் மற்றும் சிவில் நடைமுறை விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளும் சட்டமூலங்களே சமர்ப்பிக்கப்படவுள்ளன. விவாகரத்து பெறுவதற்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கும் காலாவதியான சட்டங்கள்

04



### கல்முனையில் நிலநடுக்கம்; 5.1 ரிக்டர் அளவில் பதிவு

பாதிப்புக்கள் எதுவும் இல்லை

03

## இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினைக்கு இராஜதந்திர பேச்சு, சட்ட நடவடிக்கைகள்

### இதுவே தீர்வென்கிறார் அமைச்சர் டக்ளஸ்



லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினைகளை தீர்த்து வைக்க இரு வகையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் இதுபற்றி விளக்கினார்.

இப்பிரச்சினைகளைத் தீர்க்க முதலாவது இராஜதந்திர ரீதியிலும் இரண்டாவது சட்ட நடவடிக்கை ரீதியிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இராஜதந்திர ரீதியாக பல பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டும் அவை

04

## தமிழக மீனவர்களை விடுவிக்க இலங்கைக்கு அழுத்தம் வழங்கவும்

### இந்திய வெளியுறவு அமைச்சருக்கு தமிழக முதல்வர் கடிதம்

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது





இலங்கை கடற்படையினர் கைது செய்த தமிழக மீனவர்கள் 21 பேர் மற்றும் அவர்களது 133 படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வெளியுறவு துறை அமைச்சர்

04

## சக தமிழ் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவது காலத்தின் கட்டாயம்

### தமிழரசுக்கட்சியின் எதிர்காலம் குறித்து சிறிதரன் எம்.பி



சக கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதும், பயணிப்பதும் காலத்தின் கட்டாயமாக உணரப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இலங்கை தமிழரசுக்கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்களை சந்தித்து அவர் கலந்துரையாடினார். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து

04

## கொழும்பில் தமிழரை இலக்கு வைத்து பொலிஸ் பதிவு

### மனோகணேசன் எம்பி குற்றச்சாட்டு



கொழும்பிலுள்ள தமிழ் மக்களை இலக்கு வைத்து, தகவல் சேகரித்து வரும் பாதுகாப்பு படையினர் அரசியலமைப்பை மீறுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் பாராளுமன்றத்தில் நேற்று (11) குற்றஞ்சாட்டை முன்வைத்துள்ளார்.

இவ்வாறு தகவல்களை கோருவதற்கு சிங்கள மொழியிலான விண்ணப்பங்களை

04

## அமெரிக்காவின் விசேட பிரதிநிதி இன்று வருகை




இன சமத்துவம் மற்றும் நீதிக்கான அமெரிக்காவின் விசேட பிரதிநிதியான டீசிரி கோமியர் ஸ்மித் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாட்டுக்கு வரவுள்ளார்.

இன்றைய தினம் வருகைத்தரும் அவர் ஒருவார காலம் நாட்டில் தங்கியிருப்பார் என தெரிவிக்கப்படுகின்றது. இக்காலப்பகுதியில், கொழும்பு, நுவரெலியா மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களுக்கு அவர் விஜயம் செய்யவுள்ளார்.

04

## 80 ஆயிரத்தை கடந்த டெங்கு நோயாளர்கள்

### இம்மாதத்தில் மட்டும் 3704 பேர்



நாட்டில், இது வரை 80,000 பேருக்கும் அதிகமானோர் டெங்குத் தாக்கத்துக்குள்ளாகி உள்ளனர். தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

04

# நகர்வலம்





# புதிய சகாப்தத்தில் சர்வதேச கலாசார தொடர்புகளின் அவசியம்

## சீனாவில் நடைபெற்ற உலக ஊடக உச்சி மாநாட்டில் லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் உரை

**(தினுலி பிரான்சிஸ்கோ 'உலகளாவிய நம்பிக்கையை அதிகரித்தல், ஊடக வளர்ச்சியை ஊக்குவித்தல்' என்ற தொனிப்பொருளில் ஐந்தாவது உலக ஊடக உச்சி மாநாடு (WMS) சீனாவின் குவாங்சோவில் இம்மாதம் 3ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை நடைபெற்றது.)**

அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிடெட் (ANCL) தலைவர், பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி உச்சி மாநாட்டில் கலந்து கொண்டார். புதிய சகாப்தத்தில் சர்வதேச கலாசார தொடர்புகளின் அவசியத்தை சுட்டிக்காட்டி பேராசிரியர் உரையாற்றினார். அவர் சீனாவையும் இலங்கையையும் இணைக்கும் ஆழமான வரலாற்றுப் பிணைப்புகளை எடுத்துரைத்தார்.

"பழங்காலம் தொட்டே பட்டுப்பாதை நமது நாகரிகங்களுக்கிடையில் கருத்துக்கள் கலை மற்றும் தத்துவ பரிமாற்றத்துக்கான ஒரு பாலமாகச் செயற்பட்டது. கடல்சார் பட்டுப் பாதையானது இந்த இணைப்புகளை மேலும் ஆழப்படுத்தியது. கலாசாரங்களின் வளமான பிணைப்பை உருவாக்கியது.

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட சீன கலைப்பொருட்கள் மற்றும் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட இலங்கை தொல்பொருட்கள் என்பன இந்த வரலாற்று பரிமாற்றத்திற்கு சான்றாகும். இது பரபஸ்பரம் ஒவ்வோர் பாரம்பரியத்துக்கும் இரு நாடுகளிலும் பரபஸ்பரம் நிலவிய கௌரவத்தையும் ஆழமான மதிப்பீட்டை பிரதிபலிக்கிறது. 21 ஆம் நூற்றாண்டில் சர்வதேச கலாசார தொடர்பு மற்றும் ஒத்துழைப்பின் அவசியம் முன்னெப்போதையும் விட அதிகமாக எதிரொலிக்கின்றது. நமது இரு நாடுகளும் ஊடகங்களிடையேயான உலகளாவிய ஒத்துழைப்பின் மூலம் வளர்ச்சியடைவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன" என்று அவர் கூறினார்.

அண்மைய காலங்களில் மனித சமூகத்தில் உலகமயமாக்கலின் போக்கை துரிதப்படுத்தும் முக்கிய சக்தியாக சமூக ஊடகங்களின் விரைவான வளர்ச்சி உள்ளது. சமூக ஊடகங்கள் மக்கள் ஒருவரோடொருவரும் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்துடன் இணைவதையும் எளிதாக்கியுள்ளது. நாம் அனைவரும் ஒன்றை உணர்கிறோம். செய்திகளை உருவாக்குவதும் அதனைப் பரப்புவதும் கட்டுப்படுத்துவதும் இனிமேல் நிறுவனமயப்பட்டதாக இருக்காது. மாறாக அது இப்போது ஒவ்வொரு நபரின் கரங்களிலும் உள்ளது " என்று பேராசிரியர் காரியவசம் மேலும் கூறினார்.

சர்வதேச ஊடக பரிமாற்றம் மற்றும் ஒருங்கிணைப்புக்கான முக்கிய தளமான உச்சிமாநாட்டின் தொடக்க விழாவில் சீன மத்திய அரசு மற்றும் குவாங்டாங் மாகாண அரசாங்கத்தின் அதிகாரிகள் முன்னிலையில் பங்குகொண்டனர். மேலும் சின்ஹுவா செய்தி நிறுவனத் தலைவர் ஃபூ ஹுவா, ஐ.நா.வின் உலகளாவிய தொடர்புகளுக்கான துணைச் செயலர் மெலிசா பிளெமிங் ஆகியோர் உச்சிமாநாட்டில் உரையாற்றினர்.

5வது WMS 101 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இருந்து 450 பங்கேற்பாளர்களை கொண்டிருந்தது. இதில் 197 முக்கிய ஊடகங்கள், சிந்தனையாளர்கள், அரச நிறுவனங்கள் மற்றும் சீனாவிற்கான இராஜதந்திரிகள் மற்றும் ஐ.நா மற்றும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். நவீனமயமாக்கலுக்கான சீனாவின் அணுகுமுறை மக்களை மையமாகக் கொண்ட தத்துவார்த்த செயற்பாடுகள் மற்றும் புதுமைக்கான முக்கியத்துவம் ஆகியவற்றை தனிப்பட்ட முறையில் அனுபவிக்கும் வாய்ப்பை இந்த உச்சிமாநாடு வழங்கியதாக பேராசிரியர் காரியவசம் கூறினார்.

"சீன நவீனமயமாக்கலின் முக்கிய அடையாளம் மக்களை மையமாகக் கொண்ட வளர்ச்சிக்கான அதன் அர்ப்பணிப்பு அதன் குடிமக்களின் நல்வாழ்வுக்காக அதிகாரமளித்தலுக்கும் மற்றும் வாழ்க்கைத் தரத்திற்கும் முன்னுரிமை அளிக்கிறது" என்று அவர் மேலும் கூறினார். "உலகளாவிய நம்பிக்கையை ஊக்குவித்தல் ஊடக மேம்பாட்டை ஊக்குவித்தல்" என்ற கருப்பொருளின் கீழ் பங்கேற்பாளர்கள் நான்கு தலைப்புகளில் விரிவான மற்றும் ஆழமான விவாதங்களை நடத்தினர்.





"நம்பிக்கையை வலுப்படுத்துதல்: மனித வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதில் ஊடகங்களின் பங்கு" "மாற்றங்களைத் தழுவுதல்: ஊடகங்களின் பதில் புதிய தொழில்நுட்ப வாய்ப்புகள் மற்றும் சவால்கள்" "முன்னோடி கண்டுபிடிப்பு: டிஜிட்டல் யுகத்தில் ஊடகத்தின் புதிய சந்தைகள்" மற்றும் "வளர்ச்சியை நாடுதல்: சிறந்த எதிர்காலத்திற்கான ஊடகங்களின் உலகளாவிய ஒத்துழைப்பு" என்பனவே அவையென உலகளாவிய சவால்களை எதிர் கொள்ளும் வகையில் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. Xinhua News Agency, Associated Press, Reuters, TASS மற்றும் Kyodo News உள்ளிட்ட முன்னணி உலகளாவிய ஊடக நிறுவனங்களின் கூட்டமைப்பால் 2009 இல் நிறுவப்பட்ட WMS ஆனது உலகெங்கிலும் உள்ள ஊடக நிறுவனங்களிடையே ஒத்துழைப்பு மற்றும் உரையாடலை வளர்ப்பதற்கான இன்றியமையாத அமைப்பாக உருவெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





கொழும்பு புதுச்செட்டித்தெரு சீரடி சாய் பாபா ஆலயத்தில் குருஸ்த்தான் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு, ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என். உதயநாயகன் தலைமையில் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. இதன்போது, பூஜை மற்றும் ஆகம கிரியைகளை பிரம்மஸ்ரீ ஸ்ரீகாந்த குருக்கள் செய்து வைத்தார்.

(படம்: எஸ்.ராமதாஸ்)

# தர்கா நகரின் முதல் பெண் சட்டத்தரணியாக பாத்திமா நுஸ்ரத்

**(நிந்தவூர் குறூப் நிருபர்)**



தர்கா நகரைச்சேர்ந்த பாத்திமா நுஸ்ரத், தர்கா நகர் முதலாவது முஸ்லிம் பெண் சட்டத்தரணியாக கடந்த 06ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

களு/ அளுத்கம முஸ்லிம் மகளிர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலையின் பழைய மாணவியும், இலங்கை தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட பட்டதாரியுமான இவர், தான் வசிக்கும் தர்கா நகர் பிரதேசத்தின் முதலாவது முஸ்லிம் பெண் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமை பிரதேசத்திற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவர் அக்கரைப்பற்று ஆதம்லெப்பை (குணம் மாஸ்டர்) அவர்களின் மருமகளும், தர்கா நகர் நிஸாம் அமீர் மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியை பாஹிமாவின் புதல்வியும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொடர்பாடல் அதிகாரி ஏ.எல்.ஏ. ஹுபைலின் மனைவியுமாவார்.

# மூத்த எழுத்தாளர் ரஹீமா எழுதிய 'சூல்சோறு' வெளியீட்டு விழா





**கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)**

மூத்த எழுத்தாளர் எம்.ஏ. ரஹீமா எழுதிய 'சூல்சோறு' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு அல்ஹிதாயா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தமிழ் மாமணி அல் அஸுமத்தின் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் எம்.எச். மும்தாஜ் பேகம் பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதிகளாக எழுத்தாளர் திக்குவல்லை கமால், தினகரன் மற்றும் மறைந்த எழுத்தாளர் ஏ. இக்பாலின் புதல்வி எம்.ஜே.பி.மலீஹா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நூலின் முதற்பிரதியை மறைந்த எழுத்தாளர் எம்.எச்.எம் ஷம்ஸின் புதல்வர் சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு ஊடக அதிகாரியுமான ஷம்ஸ் பாஹிம் பெற்றுக்கொண்டார். நூலாசிரியர் பற்றிய அறிமுகத்தை சிரேஷ்ட அறிவிப்பாளர் புர்கான் பீ இப்திகார் நிகழ்த்தியதோடு நூல் திறன் நோக்கு எழுத்தாளர் அஷ்ரப் சிஹாப்தீனினால் நிகழ்த்தப்பட்டது.

திருகோணமலை அஷ்ரபா நூர்தீன் மற்றும் வாழைத்தோட்டம் வஸீர் ஆகியோரின் கவிவாழ்த்தும் இடம் பெற்றது. எழுத்தாளர்கள்,கலைஞர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டதோடு நூலாசிரியருக்கு நிகழ்வின் இறுதியில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செயற்கை நுண்ணறிவு போட்டியில் சவூதிக்கு முதலிடம்

## இலங்கைக்கும் முன்மாதிரியென ஹிக்மா நிறுவனம் பாராட்டு





ஜெனீவாவில் நடைபெற்ற இளைஞர்களுக்கான சர்வதேச செயற்கை நுண்ணறிவுப் போட்டியில் சவூதி அரேபியா முதலிடத்தைப் பெற்றுள்ளமைக்கு இலங்கையின் அல் ஹிக்மா நிறுவனம் பாராட்டுக்களை தெரிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் வளர்ச்சி பெற்றுவரும் செயற்கை நுண்ணறிவு அறிவியலுக்கு இலங்கையிலும் முக்கியத்துவம் அளிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். இதன்நிமித்தம் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் 1.5 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான சூழலில் ஜெனீவாவில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு தொடர்பான சர்வதேசப் போட்டியில் சவூதி முதலிடத்தைப் பெற்றிருப்பது இலங்கையில் இத்துறையின் வளர்ச்சிக்கும் முன்மாதிரியாக அமையும் என்று அந்நிறுவனத்தின் பணிப்பாளர் மௌலவி எம்.எச். சேஹுத்தீன் மதனி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், செயற்கை நுண்ணறிவு அறிவியல் உலகளாவிய ரீதியில் வளர்ச்சி பெற்று வருகின்றது. இந்நிலையில் 2023 ஆம் ஆண்டுக்கான செயற்கை நுண்ணறிவு தொடர்பான சர்வதேசப் போட்டி ஜெனீவாவில் அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் சவுதி அரேபியா, அமெரிக்கா, இந்தியா, கிரீஸ், கனடா, சிங்கப்பூர் உட்பட 40 நாடுகளைச் சேர்ந்த 18 ஆயிரம் இளம் போட்டியாளர்கள் பங்குபற்றினர். அப்போட்டியில் சர்வதேச கண்டுபிடிப்புகள் மற்றும் கண்காட்சியில் பங்கேற்ற சவூதி இளைஞர்கள் ஒரு புதிய அறிவியல் ரீதியில் சாதனை படைத்துள்ளனர். இங்கு நடைபெற்ற கண்காட்சியில் பங்குபற்றிய சவூதி அரேபிய இளைஞர்கள் 7 சிறப்பு பரிசுகளை மாத்திரமல்லாமல் 800 புத்தாக்குனர்களுடன் போட்டியிட்டு 41 பதக்கங்களையும் வென்றெடுத்துள்ளனர். இதன் ஊடாக சவூதி அரேபியாவுக்கு பெருமை சேர்த்துள்ள அவர்கள் செயற்கை நுண்ணறிவு அறிவியலின் மேம்பாட்டுக்கும் பங்களித்தள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெல்தோட்டை எனசல்கொல்ல மத்திய கல்லூரியில் பவள விழா நிகழ்வுகள்

கண்டி, தெல்தோட்டை எனசல்கொல்ல மத்திய கல்லூரி 'ஒன்றிணைவோம் பலம்பெறுவோம்' எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் 16, 17ஆம் திகதிகளில் தனது 75 வருட பூர்த்தி பவள விழாவினை கொண்டாடுகின்றது. மூன்று கட்டங்களாக இந்த விழாவினை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை உறுப்பினர்கள் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

இந்த விழாவில் இரண்டாம் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (17) கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் கல்லூரியில் பணிபுரிந்த முன்னாள் அதிபர்கள், ஆசிரிய, ஆசிரியைகள், தெல்தோட்டை பகுதி மூத்த உலமாக்கள் மற்றும் மூத்த பழைய மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கல்லூரியின் முதல்வர் அல்ஹாஜ் எம்.ஜீ. நயிமுல்லாஹ்வின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரபல தொழிலதிபர் கலாநிதி அல்ஹாஜ் எம்.ஸீ. பஹார்தீன் ஜே.பி. கலந்து சிறப்பிக்கவுள்ளார். நிகழ்வின் கௌரவ அதிதிகளாக கொழும்பு, இப்ராஹிம் குழும நிறுவனங்களின் முகாமைத்துவப் பணிப்பாளர் அல்ஹாஜ் அர்ஷாத் பாரூக் மற்றும் கண்டி பாரூக் பிரதர்ஸ் உரிமையாளர், பிரபல சமூக சேவையாளர் அல்ஹாஜ் ஜே.எம். பாரூக் ஜே.பி. ஆகியோரும் சிறப்பு அதிதியாக கவிஞர், எழுத்தாளர், படித்ததும் பகர்வதும் புகழ் தினகரன், சிரேஷ்ட சட்டத்தரணி கலாபூஷணம் அல்ஹாஜ் ரசீத் எம் இம்தியாஸ் கலந்து கொள்ளவுள்ளதுடன், விசேட அதிதியாக இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட வானிலை அதிகாரி ஏ.எம். மொஹமட் சாலிஹீன் கலந்து கொள்ளவுள்ளார்.

கொழும்பு கிளையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பவள விழா நினைவு மலரும் வெளியிடப்படவுள்ளதுடன் பல்வேறு சிறப்பு கலை நிகழச்சிகளும் இடம் பெறவுள்ளதாக பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் செயலாளர் கொழும்பு மாவட்ட முஸ்லிம் விவாகப்பதிவாளர் அல்ஹாஜ் நாகூர் ரஹீம் ஜே.பி. தெரிவித்தார்.

# இளைஞர் சமுதாயத்தை விவசாயத்தின் பக்கம் ஈர்க்க நடவடிக்கை

(அமைச்சர் மஹிந்த அமரவீர)

இளைஞர் சமூகத்தை விவசாயத்தின் பக்கம் ஈர்ப்பதற்காக,விவசாயத்துறையை நவீன மயப்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வருவதாக கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பயிர்ச்சேதங்களக்காக இரண்டு மாதங்களுக்குள் இழப்பீடு வழங்கியமை வரலாற்றில் இதுவே முதற்தடவை.இதற்காக ஜனாதிபதியையும் மற்றும் நிதியமைச்சையும் பாராட்ட வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே,அமைச்சர் மஹிந்த அமரவீர இவ்வாறு தெரிவித்தார்.



இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர,

"அண்மையில் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் இடம்பெற்றது. ஏனைய அமைச்சுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த குற்றச்சாட்டுகளுடன் இது நிறைவேற்றப்பட்டது. இவை அனைத்தும் கடந்த காலங்களில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பானவையே. தற்போது அனைத்து துறைகளினதும் ஒத்துழைப்புடன் எமது அமைச்சு முன்னெடுத்த வேலைத் திட்டங்கள் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை கண்டுள்ளன .

மிகவும் சவால்மிக்க சந்தர்ப்பத்திலேயே, நான் இந்த அமைச்சை ஏற்றுக்கொண்டேன். வயல்களுக்கு சென்று பயிரிடுமாறு நான் முதல் முதலாக விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தினேன். அன்று 212,000 ஹெக்டெயார்களில் நெல் பயிரிடப்பட்டது. ஆனால், இந்த விளைச்சலை அதிகரிக்க ஆர்வத்துடன் செயற்படுமாறு நான் மிகவும் தாழ்மையுடன் விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்தேன். உரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலே பயிரிடுமாறு நான் கூறினேன். அதன் பிறகு 512,000 ஹெக்டெயார்களில் நெல் பயிரிடப்பட்டது. இதுவே அண்மைக்காலத்தில் கிடைத்த அதிக விளைச்சலாகும்.

## மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்றவர் கைது

(யாழ். விசேட நிருபர்)



யாழ்ப்பாண நகரில் பெருமளவான "மாவா" போதைப்பொருளுடன் ஒருவர் கைதாகியுள்ளார்.

இந்நபர்,பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்காகக் கொண்டு போதைப் பொருட்களை விற்பனை செய்து வந்தவரென தெரிய வருகிறது. யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியிலுள்ள தனியார் கல்வி நிறுவனமொன்றுக்கு அருகில்

நேற்று திங்கட்கிழமை இந்நபர் கைதானார்.

இவருடமிருந்து 3 கிலோ 686 கிராம் நிறை கொண்ட "மாவா" போதைப்பொருள், சிறிய பைகளில் பொதி செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன .33 வயதான இந்நபர் யாழ்ப்பாண பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# வெளிநாட்டு சிகரட்டுகளை கடத்தியவர் அதிரடிக் கைது

### விமான நிலையத்திலிருந்து வெளியேறுகையில் சம்பவம்

(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)



சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 22 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை விமான நிலைய பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இரண்டு பயணப்பொதிகளில் அடைக்கப்பட்டு இவை, நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.இச்சம்பவத்துடன் தொடர்புடைய கம்பளை, புஸ்ஸல்லாவ பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய வர்த்தகர் ஒருவரையும் நேற்று (11) பொலிஸார் கைது செய்தனர்.

விமான நிலையத்தில் அனைத்து சோதனைகளையும் முடித்துக் கொண்டு கட்டுநாயக்க விமான நிலையத்தை விட்டு வெளியேறுகையில், இச்சந்தேக நபர் கைதானார்.

இந்நபர் அடிக்கடி வெளிநாட்டு பயணம் மேற்கொள்பவரென விசாரணையில் தெரியவந்துள்ளது.

டுபாயிலிருந்து ஓமானின் தலைநகர் மஸ்கடுக்கு வந்த இவர், நேற்று (11) அதிகாலை 03.30 மணியளவில் சலாம் எயார் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

2,800 "மென்செஸ்டர்" வகையைச் சேர்ந்த வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 114 சிகரெட் அட்டைகள் இவரிடமிருந்து மீட்கப்பட்டன.

# புலம்பெயர் தொழிலாளர்களுக்கான தொழிற்சந்தை, பாதுகாப்பில் கூடிய கவனம்

### கொழும்பு அமைப்பின் செயற்குழு கூட்டம் இன்று

புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை மேம்படுத்துதல், சர்வதேச தொழில் சந்தையில் வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களின் பணத்தை சரியான முறைகளில் நாட்டிற்குள் கொண்டுவருவது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இது தொடரல்பான கொழும்பு அமைப்பின் செயற்குழு கூட்டம் இன்று (12) ஆரம்பமாகவுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் இன்று (12) ஆரம்பமாகவுள்ள கொழும்பு செயல்பாடு (Colombo Process) அமைப்பின் செயற்குழு கூட்டம் தொடர்பாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் நேற்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்புடன் International Organization for Migration இணைந்து இலங்கை இதனை ஏற்பாடு செய்துள்ளது. இந்த செயற்குழு கூட்டத்தின் கலந்துரையாடல் எதிர்வரும் (14) வரை நடைபெறவுள்ளது.



ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், சீனா, இந்தியா, இந்தோனேசியா, நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், இலங்கை, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் இதில் இடம்பெற்றுள்ளன. இந்த அமைப்புக்கு இலங்கை, பங்காள தேஷ், பாகிஷ்தான் ஆகிய நாடுகள் தலைமை தாங்குகின்றன.

புலம் பெயர் தொழிலாளர்களுக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கான பிராந்திய ஆலோசனை செயல்முறை, புலம்பெயர்ந்தோரின் குடும்பங்கள், அவர்களுக்கான பாதுகாப்பு, தொழிலாளர்களை முறையாக மற்றும் கண்ணியமான முறையில் நிர்வகிப்பதற்கான விடயங்கள் குறித்து இதன் போது கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்

இவ்விடயங்கள் தொடர்பில் நாடுகளுக்குள்ள அனுபவங்கள் மற்றும் திட்ட நலன்கள் குறித்த கருத்துகள் இதில் பரிமாறப்படவுள்ளன.

இதனை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ள அனைத்து தரப்பினருக்கும் நன்றி தெரிவிப்பதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாயணயக்கார தெரிவித்தார்.

# போலி வீசாவில் கனடா செல்ல முயன்றவர் கைது

**மேலதிக விசாரணைக்கு புலனாய்வு பிரிவினரிடம் கையளிப்பு**

போலிக்கடவுச் சீட்டில் கனடா செல்ல முயன்ற தமிழ் இளைஞரை,விமான நிலைய அதிகாரிகள் கைது செய்தனர். கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லை அமலாக்க பிரிவு அதிகாரிகளால் தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவ்விளைஞர் நேற்றிரவு 07.10 மணியளவில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் UL 217 விமானத்தில் தோஹா செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளார்.இவர் சமர்ப்பித்த வீசா போலியானதென தெரிய வந்ததும் அதிகாரிகள் இவரைக் கைது செய்தனர்.

சந்தேக நபரைக் கைது செய்த குடிவரவு குடியகல்வு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள்,மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் அவரை ஒப்படைத்தனர்.

# ரணிலும் -சஜித்தும் இணைவது சாத்தியமே இல்லை

(லோரன்ஸ் செல்வநாயகம்)



ரணிலும் சஜித்தும் ஒருபோதும் இணையப் போவதில்லை.இது தொடர்பில் ஊடகங்கள் மேற்கொண்டு வரும் பிரசாரங்கள் உண்மைக்குப் புறம்பானவை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று சபையில் தெரிவித்த அவர்,

ஊடகங்கள் என கூறிக்கொள்ளும் சில அமைப்புகள் ஒன்றிணைந்து ரணிலும் சஜித்தும் ஒன்று சேரப்போவதாக பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன. ரணிலும், சஜித்தும் ஒருபோதும் இணையப் போவதில்லை.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

ஒரு சில பொய் தகவல்களை பிரசாரப்படுத்திவரும் நிறுவனங்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்திடமிருந்து 04

# கல்முனையில் நிலநடுக்கம்

கல்முனைக்கு அருகில் நேற்று 5.1ரிச்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டது.

நேற்று அதிகாலை 3:41 மணியளவில் கல்முனையிலிருந்து 51 கிலோ மீற்றர் தொலைவில் 366.2 கிலோ மீற்றர் கடல் ஆழத்தில் இந்நில நடுக்கம் ஏற்பட்டது. இது 5.1 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது.கடலுக்கடியில், அதிக ஆழத்தில் இந்நிலநடுக்கம் ஏற்பட்டதால், மேற்பரப்பில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.


## சேல் சேல் சேல்

**கையிருப்பை விற்றுத் தீர்த்தல்**

| | | | |
|---|---|---|---|
| 60' பொலியெஸ்டர் துணி | | | |
| Printed & Plain | 05 மீற்றர் | ரூபா | 2,000.00 |
| 60' லேஸ் | 05 மீற்றர் | ரூபா | 2,000.00 |
| வெள்ளை சேர்ட் பட்டன் | 01 கி.கி. | ரூபா | 250.00 |
| புளொட்டர் பேப்பர் | 01 கி.கி. | ரூபா | 1,000.00 |
| பேப்பர் இன்டர்லைனிங் | | | |
| கறுப்பு வெள்ளை | 01 யார் | ரூபா | 100.00 |
| Boys Shirt | 01 துண்டு | ரூபா | 250.00 |

சில்லறை மற்றும் மொத்த விற்பனை அனைத்து வாடிக்கையாளர்களும் வரவேற்கப்படுகின்றனர்.

2023 டிசம்பர் 11ஆம் திகதி முதல் 2023 டிசம்பர் 21ஆம் திகதி வரை

**எமது தொழிற்சாலை:**
**ஜனதா கார்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிடெட்,**
**இல. 17,**
**விவேகானந்த மேடு, கொழும்பு-13.**


# "உறங்கும் உண்மைகள்" நூல் வெளியீட்டு விழா

### ஞாயிறுக்கிழமை கொழும்பு தமிழ் சங்கத்தில்

வாழ்வின் அனுபவங்களிலிருந்து கனடா எஸ்.ரி. நாதன் எழுதிய ஆக்கங்களின் தொகுப்பான "உறங்கும் உண்மைகள்" (பாகம் I & II) நூல் வெளியீட்டு விழா 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.31 மணிக்கு வெள்ளவத்தை, உருத்திரா மாவத்தையிலுள்ள கொழும்பு தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். தில்லைநடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், நூலாசிரியர் எஸ்.ரி. நாதன், வேல் விவேகானந்தன், எஸ். பத்மநாதன், துவாரகன், சஞ்ஜீவன், செல்வி மனுஜா, திருமதி கோதை அமுதன், திருமதி ஆத்தி தனுஷன், திருமதி யோக பத்மநாதன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

மேலும் பலர் சிறப்பு விருந்தினர்களாக இவ்விழாவில் பங்குபற்றவுள்ளனர்.


**டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கோப்பு முகாமை நிகழ்ச்சித்திட்ட முன்மொழிவுகளுக்கான அழைப்பு**

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் (NIPO) 'ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கோப்பு முகாமை நிகழ்ச்சித் திட்டத்திற்கான' சர்வதேச போட்டி விலை மனுக்கோரல் செயல்முறையொன்றின் (ICBP) கீழ் முன்மொழிவுகளுக்கு அழைப்பு விடுக்கும் கேள்விப் பத்திர ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ள இணைப்புக்களில் பதிவேற்றப்பட்டுள்ளன என்பதை பொது மக்களுக்கு அறியத் தருகிறோம்.

விபரங்களை கீழ்வரும் இணைப்புக்களில் பெற்றுக் கொள்ளுங்கள்:

WIPO - https://www.ungm.org/public/notice/220550
NIPO - https://www.nipo.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=193

முன்மொழிவுகளை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி: 2023 டிசம்பர் 15ஆம் திகதி

**இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்,**
**3வது மாடி, 'சமாகம் மெதுர', இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு -10.**




# மக்களின் சுகாதார மேம்பாட்டுக்காக சகல தரப்பினரும் முன்வர வேண்டும்

(பாலமுனை விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையினை வழங்குவதற்கும் அப்பிராந்திய மக்களின் சுகாதார மேம்பாட்டுக்காக உழைப்பதற்கும் சகல தரப்பினரும் தன்னுடன் கைகோர்த்து செயற்பட வேண்டும் என, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சஹிலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையேற்ற வைத்திய கலாநிதி திருமதி சஹிலா இஸ்ஸடீன் நேற்று (11) உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## கொழும்பில் தமிழரை இலக்கு...

மாத்திரமே வழங்கப்படுவதால், மக்கள் அச்சமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். காவல்துறை கட்டளைச் சட்டத்துக்கமைய, இந்த தகவல்கள் கோரப்படுகின்றன.

அரச கரும மொழியாக தமிழ் உள்ளபோதிலும், சிங்களத்தில் மாத்திரம் தகவல் கோரப்படுகிறது. இது, அரசியலமைப்பை மீறுவதாக உள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பாதுகாப்பு கருதியே இத்தகைய தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. இதில் தமிழ் மக்கள் மாத்திரம் இலக்கு வைக்கப்படுவதாக கூறப்படுவது உண்மைக்கு புறம்பானது என்றார்.

அத்துடன், சிங்கள மொழியிலான விண்ணப்பங்கள் மாத்திரம் வழங்கப்படுவதாக கூறப்படும் விடயம் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அனுமதிக்கப்பட்ட முறைகளின் கீழ் தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டிருந்தார்.

## வற்... வரி திருத்தச் சட்ட மூலம்...

நேரத்தை சபாநாயகர் அறிவித்தார். இந்நிலையில் மாலை 4.30 மணிக்கே வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதனால்,சபையில் பெரும் குழப்பநிலை ஏற்பட்டது.

பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம், நிதிச் சட்டமூலம் ஆகியவை தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்திற்கு ஞாயிற்றுக்கிழமை முழு நாள் ஒதுக்கப்பட்டிருந்தது.இந்நிலையில் வற் வரியில் புதிதாக இணைக்கப்படும் 97 பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான பட்டியலை சபைக்கு சமர்ப்பிக்குமாறு அரசிடம் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. ஆளும் கட்சி அதனை சமர்ப்பிக்காது வற் வரி சட்டமூல விவாதத்தை தொடர்ந்து முன்னெடுத்து சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு முயற்சித்த நிலையில் எதிர்க்கட்சிகள் " கூட்ட நடப்பெண்" கோரினர்.

இந்நிலையில், இதற்கு தேவையான கோரமாக 20 எம்.பிக்கள் சபையில் இல்லாத நிலையில், பிரதி சபாநாயகர் சபையை ஒத்தி வைத்தார். இதனால்,பெறுமதிசேர் வரி திருத்தச்சட்டமூலம் (வற்)மீதான விவாதம் இடை நடுவில் கைவிடப்பட்டது.

இந்நிலையில் இந்த விவாதத்தை நேற்று நடத்தி அவற்றை நிறைவேற்றுவது தொடர்பில் சபைமுதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது. வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு (2024) சட்டமூலம் மீதான திங்கட்கிழமை தினத்துக்குரிய குழுநிலை விவாதம் நிறைவுற்றதைத் தொடர்ந்து ஒழுங்குப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் மற்றும் நிதிச் சட்டமூலம் மீதான இரண்டாம் மதிப்பீட்டை விவாதித்து திங்கட்கிழமையே நிறைவேற்றுவதற்கான பிரேரணையை சபை முதல்வர் முன்வைத்தார்.

அத்துடன், குறைநிரப்புத் தொகை செலவீனத் தலைப்பையும் நேற்றைய தினமே அங்கீகரிப்பதற்கும் அவர் முன்மொழிந்தார்.

அதற்கமைய, இந்தப் பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்தது. அதற்கிணங்க நேற்றுக் காலை 10 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் நிதிச் சட்டமூலம் மீதான இரண்டாம் மதிப்பீட்டை விவாதித்து நேற்றைய தினமே நிறைவேற்றுவதற்கு ஆதரவாக 92 வாக்குகளும், எதிராக 41 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வாக்களிப்பதிலிருந்து விலகியிருந்ததுடன், அதற்கமைய ஆளும் கட்சியால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் 51 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் நேற்று 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் கடற்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதம் இடம்பெற்ற நிலையில் அதனுடன் இணைந்ததாக இந்த பிரேரணை மீதான விவாதத்தையும் முன்னெடுக்க சபாநாயகர் முயற்சித்தார்.

எனினும் இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தவே வரவு செலவுத்திட்ட இன்றைய (நேற்றைய )விவாதம் முடிந்தவுடன் தனியாக விவாதத்திற்கு எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

எனினும் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் கடற்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதம்

மாலை 4.30 மணிக்கு நிறைவுற்றது

அதனையடுத்து உடனடியாகவே பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம், நிதிச் சட்டமூலம் ஆகியவை தொடர்பான இரண்டாவது மதிப்பீடு விவாதத்திற்கு எடுக்கப்பட்டு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.அவரின் உரை முடிந்தவுடன் ஆளும் கட்சி பிரேரணையை நிறைவேற்ற முற்பட்டது.

இந்நிலையில் பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டமூலம், இரண்டாம் மதிப்பீடு வாக்களிப்புக்கு விடப்பட்ட நிலையில் ஆதரவாக 98 வாக்குகளும் எதிராக 41 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 57 மேலதிக வாக்குகளினால் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டது.

## இலங்கை, இந்திய மீனவர்...

பயனளிக்கவில்லை. சட்ட ரீதியான நடவடிக்கைகளாக கைதுகளைக் குறிப்பிட முடியும்.சில தினங்களுக்கு முன்னதாகவும்

இந்திய மீனவர்கள்அத்து மீறி எமது கடற்பரப்பு பிரதேசத்திற்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.இது தொடர்பில் எமது மீனவர்கள் கடற்படையினரிடம் முறைப்பாடு செய்துள்ளார்கள். கடற்படையினரும் வேண்டா வெறுப்பாக இந்திய மீனவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இத்தகைய கைதுகள் பற்றி தமிழ் நாட்டில் பரப்பப்படும்போது அது பிரச்சினையாகிறது.

தமிழ்நாட்டிலுள்ள மீனவர்கள் பாரம்பரியமாக மேற்கொண்டு வரும் தொழில் இது. இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை முறையற்ற விதத்தில் கைது செய்வதாக அங்குள்ளவர்கள் குற்றச்சாட்டுகின்றனர்.

இதற்கிணங்க ஒரு புதிய வேலைத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் நான் சிந்தித்துள்ளேன். அந்த வகையில் வடக்கிலுள்ள கடற்றொழிலாளர்கள் ஒரு குழுவாக தமிழ்நாட்டுக்குச் சென்று அங்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது. அங்குள்ள ஊடகங்களுக்கும் இங்குள்ள உண்மை நிலையை தெளிவுபடுத்த முடியும்.

இந்திய மீனவர்கள் அத்துமீறியே இலங்கை கடற்பரப்பில் பிரவேசித்து வளங்களை அழிப்பதாகவும் இதனால் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்க வேண்டும். இதன் காரணமாகவே கடற்படையினர் அவர்களை கைது செய்வதையும் அவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

அது மட்டுமன்றி வட மாகாணத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்நாட்டுக்குச் சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களிடம் இந்த பிரச்சனைகள் தொடர்பில் பேச முடியும். அத்துடன் அங்குள்ள ஊடகங்களுக்கும் அது தொடர்பில் தெளிவுபடுத்த முடியும்.

இந்த செயற்பாட்டிற்கு வடக்கிலுள்ள எம்பிக்கள் சிலர் இணக்கம் தெரிவித்துள்ளார்கள். எனினும் சார்ள்ஸ் எம்பி அதற்கு இணக்கம் தெரிவிக்காமல்

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரை அழைத்து பேசலாம் என்று கூறுகிறார். அது ஒரு பிரச்சனை இல்லை. எனினும் அடிக்கடி இந்தியத் தூதுவர்கள் மாறுவதால், அதில் ஒரு சிக்கல் காணப்படுகிறது. எனினும் இந்திய தூதுவர்களுக்கு இந்த விவகாரம் அத்துப்படி. அவர்கள் ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் முழுமையாக அறிந்துள்ளார்கள்.

அதற்கிணங்க சார்ள்ஸ் எம்பி இதனை புரிந்து கொண்டு தமிழ் நாட்டிற்கு சென்று இந்த பிரச்சனை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தினால் நிரந்தர தீர்வு கிடைக்கும் என நான் நம்புகின்றேன் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன் போது குறுக்கிட்ட சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்பி , இலங்கையில் உள்ள இந்திய தூதுவர்கள் மாறினாலும் தமிழ் நாடு போன்ற மாநில அரசாங்கத்துடன் நாம் பேச்சு வார்த்தை நடத்தாமல் இந்தியா என்ற பாரிய அரசாங்கத்துடன் பேசினால் தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்ள முடியும் என்பதே எமது எதிர்பார்ப்பு என்றார்.

## இன்றைய பலன்கள்


**( 12. 12. 2023 )**




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)


**மேஷம்:**
சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். ஓய்வு நேரம் குறைவதால் ஆரோக்கியம் பாதிப்படையலாம்.




**ரிஷபம்:**
பதட்டத்தில் பேசும் பேச்சுக்கள் உறவுகளிடையே மனக்கசப்பை உண்டாக்கும். சொந்த தொழில் செய்பவர்களுக்கு பழைய வாடிக்கையாளர்கள் மூலம் அதிக வேலை வந்து சேரும்.



**மிதுனம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு கடின முயற்சிகள் மூலம் எதிர்பார்க்கும் காரியம் வெற்றி அளிக்கும்.



**கடகம்:**
சக ஊழியர்கள் ஆதரவாக இருப்பார்கள். சொந்த தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்ததை விட அதிக வருமானம் கிடைக்கலாம்.




**சிம்மம்:**
உயர் அதிகாரிகளின் ஆதரவோடு சில சலுகைகளை பெறுவீர்கள் எதிர்பார்க்கும் விடையங்கள் சாதகமாக அமையும்.



**கன்னி:**
எதிர்பார்ப்பு தள்ளி போகும். அவசர வேலைகளால் ஓய்வு நேரம் குறையும். எதிர்பார்த்த கடன் உதவி கிடைக்க சில நாட்கள் ஆகலாம்.



**துலாம்:**
கூட்டுத் தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகமாகும். பங்குதாரர்களின் ஆலோசனைகளோடு புதிய தொழில் தொடங்கும் முயற்சிகளில் இறங்குவீர்கள்.



**விருச்சிகம்:**
முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும் போது பரிவர்த்தனை செய்யும் போதும் கவனமாக கையாள வேண்டும்.




**தனுசு:**
வரவேண்டிய பணத்தை வசூலிக்க முயற்சி செய்வீர்கள். வேலையில் கவனம் இல்லாவிட்டால் உயர் அதிகாரியின் கோப பார்வைக்கு ஆளாக நேரிடும்.



**மகரம்:**
சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர்கள் உருவாக்கும். வாடிக்கையாளர்களிடம் சுமூகமாக நடந்து கொள்ளுங்கள்.



**கும்பம்:**
சொந்த தொழில் செய்பவர்கள் வாடிக்கையாளர்களின் அவசரத்தை உணர்ந்து பணிகளை விரைவாக செய்து கொடுப்பார்கள்.



**மீனம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் சில அதிக ஆதாயம் உள்ள புதிய வேலைக்கு செல்வர். பண பொறுப்பில் உள்ளவர்கள் அதிக கவனமாக செயல்படுங்கள்.



## பல்கலைக்கழகங்களின் கேந்திர...

செல்வதற்கு அறிவாற்றல் மிக்க மனித வளம் தேவை. இலங்கையில் பல்கலைக்கழகத் துறை மற்றும் தொழில் பயிற்சித் துறையின் மீது அந்த பொறுப்பு சார்ந்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தொழிற்பயிற்சி கல்வித்துறையின் புதிய மாற்றத்திற்கு தனியார் துறையினரின் ஆதரவு வழங்கப்பட்டுள்ளதாகவும், நாட்டின் முழு கல்வி முறையையும் மறுசீரமைப்பதற்கு தேவையான சட்டங்கள் விரைவில் கொண்டு வரப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் 176 பேருக்கு பட்டம் வழங்கப்பட்டதோடு, சிறப்பு திறன்களை வெளிப்படுத்திய 06 பேருக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விருதுகளையும் வழங்கினார். (NSBM) பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஈ.ஏ.வீரசிங்கவினால் ஜனாதிபதிக்கு விஷேட நினைவுப் பரிசொன்றும் வழங்கப்பட்டது.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க :

பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறும் அனைவருக்கும் தொழில் கிடைக்கும் வகையில் பல்கலைக்கழக கல்வி முறை மாற்றியமைக்கப்பட வேண்டும். இன்று அரச பல்கலைக்கழகங்களில் இணையும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. நிதி ஒதுக்குவதில் உள்ள சிக்கல்தான் இதற்குக் காரணம். ஆனால் மற்ற நாடுகள் இந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளன. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பிரகடனமும், “அனைவருக்கும் கல்வியை பெறும் உரிமை வழங்கப்பட வேண்டும்” என்று கூறுகிறது. அதன்படி, ஒவ்வொரு நாட்டிலும் இதற்காக அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இலங்கை என்ற வகையில் நாம் இப்போது அந்த பணிக்கு செல்ல தயாராக உள்ளது.

இதற்கமைய இந்நாட்டு பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையை இரண்டு அல்லது மூன்று மடங்கினால் அதிகரிக்க நாம் எதிர்பார்க்கிறோம். அதனால் புதிய தொழில்நுட்ப கல்வியுடன் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் பட்டங்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு மாணவர்களுக்கு கிடைக்கும்.

இலங்கையை பல்கலைக்கழங்களுக்கான கேந்திர நிலையமாக மாற்றியமைக்க வேண்டும். 2030 ஆம் ஆண்டளவில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆங்கில அறிவை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம். அதேபோல் ஏனைய மொழி அறிவிலும் தன்னிறைவான மாணவச் சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்றார்.

## அஸ்வெசும: இரண்டாம் கட்ட...

தீர்வு கண்டு, இரண்டாம் கட்டத்தை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தின் பின்னர், இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் கோரப்படவுள்ளன. அஸ்வெசும கொடுப்பனவு 14 இலட்சத்து 6932 பேருக்கு வழங்கப்படவுள்ளது.இதற்கமைய, ஒக்டோபர் மாதத்துக்கான கொடுப்பனவுகளை பயனாளிகளின் வங்கி கணக்குகளில் வைப்பிடும் பணிகள் நிறைவு ற்றுள்ளன.செப்டெம்பரில் 13 இலட்சத்து 77,000 பயனாளர்கள் நலன்புரி உதவிகளைப் பெற்றுக் கொண்டனர்.இந்நிலையில்,ஒக்டோபரில் 29,932 பயனாளர்கள் புதிதாக தங்களது பெயர்களை பதிவு செய்துள்ளனர்.இதையடுத்து, நலன்புரி கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் பயனாளர்களின் எண்ணிக்கையை 20 இலட்சமாக வரையறை செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளது. 2024 ஆம் ஆண்டு நலன்புரி கொடுப்பனவுகளுக்காக மாத்திரம் 205 பில்லியன் ரூபா வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

## தாமரை கோபுரத்தில்...

இருநூறு பேர் சாப்பிடும் வகையில் இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரையும் மற்றும் மாலை 6.30 மணி முதல் இரவு 11.30 மணி வரையும் இந்த உணவகம் திறந்திருக்கும். இங்கு உணவருந்த, தொலைபேசி அல்லது ஒன்லைன் மூலம் முன்பதிவு செய்ய வேண்டும். தெற்காசியாவின் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள முதலாவது சுழலும் உணவகம் இதுவாகும்.

## கொழும்பில் சகல இன, மத...

தரவு கட்டமைப்பு பேணப்பட வேண்டும். இதற்காகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழ் மக்களை மாத்திரம் இலக்காகக் கொண்டு தகவல்கள் திரட்டப்படுவதாக மனோ கணேசன் எம்.பி சபையில் தவறான கூற்றை முன்வைத்துள்ளார்.கடந்த முறையும் அவர் இதே பிரச்சினையை முன்வைத்த போது, தனிப்பட்ட முறையில் அவரைச் சந்தித்து விளக்கியுள்ளேன்.

கொழும்பு மாவட்டத்தில் வாழ்பவர்களின் விபரங்களை பதிவு செய்யும் நடவடிக்கை 90 வீதமளவில் நிறைவு பெற்றுள்ளன. சிங்களம்,தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் என அனைத்து மக்களும் இந்த தகவல் பதிவுக்குள் உள்ளடங்குகின்றார்கள்.

இது புதிதாக ஆரம்பிக்கப்படவில்லை. யுத்த காலத்தில் இருந்தே இவ்வாறு பொதுமக்களின் தனிப்பட்ட தகவல்கள் பெறப்பட்டு வருகின்றன. அந்தந்த பகுதி பொலிஸ் நிலையங்கள் ஊடாக அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இதில் தவறொன்றும் கிடையாது.

பெயர் உள்ளிட்ட விபரங்கள் மாத்திரமே கோரப்படுகிறது.நாட்டில் யுத்தம் இல்லாவிட்டாலும் சமூக விரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

## சக தமிழ் கட்சிகளுடன் இணைந்து...

தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணைந்த வடக்கு கிழக்கில் பிராந்திய ரீதியாகச் செயற்படும் மிகப்பெரும் பேரியக்கமாக எமது தமிழரசுக் கட்சி காணப்படுகிறது.காலச்சூழற்சிக்கேற்ப இக்கட்சி புதிய தலைவர்களை அறிமுகம் செய்திருக்கிறது.

இயற்கையும், காலமுமே தலைவர்களை கொண்டு வருகிறது. எனவேதான்,இது விவேகமான ஒரு உள்ளக தேர்தலாக காணப்படுகிறது.

எனது ஆளுமைக்கும் எனக்குள்ள ஆற்றலுக்கும் ஏற்றாற்போல் ஏனைய எல்லோரையும் கூட்டாக அரவணைத்து, தமிழரசுக் கட்சியை கட்டி வளர்க்க வேண்டும். ஏனைய கட்சிகளோடு நல்லுறவைப் பேணி தமிழ் தேசிய விடுதலைக்கான பயணத்தை முன்னெடுப்போம்.

ஏனைய சக கட்சிகளுடன் இணைந்து பயணிப்ப தானது, தற்போதைய காலத்தின் கட்டாயமாக உணரப்படுகிறது.இதனை,நாங்கள் நிராகரிக்கவில்லை.தமிழ் மக்களுக்கான தேவையாகவும் இது இருக்கிறது. இந்த ஒற்றுமைக்காக என்னென்ன விட்டுக்கொடுப்புகளைச் செய்ய முடியுமோ, அதைச் செய்யலாம்.சேர்ந்து செயற்படும் விடயங்கள் தொடர்பில் பேசி, இதற்கான முயற்சிகளை முன்னெடுக்க தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்காவின் விசேட...

மனித உரிமைகள் மற்றும் சமத்துவத்தை மேம்படுத்துவதற்காகவும் அமெரிக்க அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதற்காகவும், அவர் இலங்கையின் பல்வேறு சமூகங்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

மலையக தமிழர்கள், சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் முக்கியமான சந்திப்புக்களிலும் அவர் ஈடுபடவுள்ளார்.

## விவாகரத்தை இலகுவாக்கும்...

தற்போதுள்ள நடைமுறையில் விவாகரத்து கோரும் நபர், மூன்றாம் தரப்பினருடன் தொடர்பு , தீங்கிழைக்கும் விலகல் அல்லது ஆண்மைக் குறைவு ஆகிய மூன்று உண்மைகளில் ஒன்றை நீதிமன்றத்தில் முன்வைக்க வேண்டும். இந்த உண்மைகளை நிரூபிக்கும் பொறுப்பு விவாகரத்து கோருபவர் மீது உள்ளது. இதுபோன்ற காரணங்களை நிரூபிப்பது மிகவும் கடினம். இதனால், சில விவாகரத்து வழக்குகள் 10 முதல் 20 ஆண்டுகள் வரை இழுபறியாக உள்ளன. விவாகரத்து சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதில் இந்த உண்மைகள் பரிசீலிக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஊடகத்துறையில் உயர் விருதுபெறும்...

இன்று கௌரவிக்கப்படுகின்றனர்.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும், இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஊடகவியலாளர்களுக்கான அதியுயர் விருது வழங்கும் விழாவிலேயே இவ்விருவரும் இன்று அதியுயர் விருது( வாழ்நாள் சாதனையாளர்) பெறுகின்றனர். ஆரம்ப காலம் தொட்டு தினகரன் வாயிலாக தமிழ்பேசும் வாசகர்கள் மத்தியில் நன்கு அறியப்பட்ட எம்.ஏ.எம். நிலாம், எஸ். தில்லைநாதன் ஆகிய இவ்விருவரும் தினகரன் குடும்பத்தின் முக்கிய பாத்திரங்களாவர். ஆரம்ப காலத்தில் தினகரன் வழங்கிய ஊடகக் களத்தில் கால்பதித்த இவ்விருவரும், செய்திகள் மற்றும் கட்டுரைகள் ஊடாக தமிழ்பேசும் வாசகர்கள் மத்தியில் நன்கு பிரபலமானவர்களாவர்.

மூத்த ஊடகவியலாளர் எம்.ஏ.எம். நிலாம் ஆரம்ப காலத்தில் சிறுகதை, கவிதை வாயிலாக தினகரன் ஊடாக இலக்கியக்களத்தினுள் கால்பதித்தவர். அதன் பின்னர் தினகரனில் செய்திகள், கட்டுரைகள் என்றெல்லாம் ஏராளமான ஆக்கங்களை எழுதிக் குவித்தவர். லேக்ஹவுஸ் தமிழ் வெளியீடுகளின் ஆலோசகராக பல வருடங்கள் பணிபுரிந்த எம்.ஏ.எம். நிலாம், தினகரன் வாரமஞ்சரிக்கு இன்றும் இலக்கியப் பங்களிப்பு வழங்கி வருகின்றார்.

வாழ்நாள் சாதனையாளர் விருது பெறுகின்ற மற்றைய மூத்த ஊடகவியலாளரான கரவெட்டி எஸ். தில்லைநாதனும் எமது தினகரன் குடும்பத்தின் பிரதான உறுப்பினர்களில் ஒருவராவார்.

யுத்தம் உச்சத்தில் நிலவிய அன்றைய நெருக்கடி காலகட்டத்திலும் கூட, தினகரன் பத்திரிகையின் முக்கியத்துவத்தை வடபகுதி இளைய சமுதாயத்தினர் மத்தியில் எடுத்துச் சென்ற பாராட்டுக்குரியவர் தில்லைநாதன்.

பல தசாப்த காலமாகவே தினகரனின் கரவெட்டி நிருபராகப் பணியாற்றி வரும் ஊடகவியலாளர் தில்லைநாதன், தினகரனுக்கு நாள் தவறாமல் செய்திப் பங்களிப்பு நல்கி வருகின்றார். அதுமாத்திரமன்றி, தினகரனுக்கென்று வடபகுதியில் பெரும் வாசகர் குழாமொன்றை உருவாக்கிய பெருமையும் அவரையே சாரும்.

தினகரன் ஆசிரியபீடத்துடன் அடிக்கடி தொடர்பு கொண்டு தனது நீண்டகால அனுபவத்தின் பேரில் பயனுள்ள ஆலோசனைகளையும் தில்லைநாதன் வழங்கத் தவறுவதில்லை.

தினகரனின் பிரதான பாத்திரங்களாகக் கருதப்படுகின்ற எம்.ஏ.எம். நிலாம் மற்றும் எஸ். தில்லைநாதன் ஆகிய இருவரும் வாழ்நாள் சாதனையாளர் விருது பெறுவதை முன்னிட்டு எமது தினகரன் ஆசிரியபீடம் பெருமை கொள்வதுடன், அவ்விருவருக்கும் பாராட்டும் தெரிவிக்கின்றது.

## தமிழக மீனவர்களை விடுவிக்க...

ஜெயசங்கருக்கு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து மத்திய வெளியுறவு துறை அமைச்சர் ஜெயசங்கருக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை இலங்கை அரசாங்கம் விடுவிக்க இந்திய அரசு அழுத்தம் வழங்க வேண்டும்.

மீன்பிடித் தொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி கைதாவது அவர்களது வாழ்வாதாரத்தை பாதித்துள்ளது.

எனவே,இவ்வாறான கைதுகளை நிறுத்தவும் தமிழக மீனவர்களின் பாதுகாப்பான தொழில் முயற்சிகளுக்கு உத்தரவாதம் வழங்குமாறும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 80 ஆயிரத்தை கடந்த...

இவர்களில், இம்மாதத்தில் மாத்திரம் 3,704 பேர் டெங்குத் தொற்குள்ளாகியுள்ளதாக தகவல்களில் தெரிய வந்துள்ளது. தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை மற்றும் விழிப்புணர்வின்மை போன்ற காரணங்களாலே டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது. இந்நிலையில், இவ்வருடத்தில் நேற்று வரை 80,192 டெங்கு தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

## ரணிலும் சஜித்தும்... 03ஆம் பக்கத் தொடர்

தரகுப்பணத்தைப் பெற்றுக் கொண்டு ரணிலும் சஜித்தும் இணையப்போவதாக பிரசாரம் செய்து வருகின்றன. இது உண்மைக்கு புறம்பானது. அரசாங்கத்திடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு இவ்வாறான அப்பட்டமான பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டாம் என, சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## திருவருகைக் காலத்தின் இரண்டாம் வாரம்

# நாமும் நற்செய்தியாகுவோம்

திருவருகைக் காலத்தின் இரண்டாம் வாரத்தில் அடியெடுத்து வைக்கின்றோம்.

நற்செய்தியாளர் மாற்கு அவர்கள் இந்த ஞாயிறன்று "கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியின் தொடக்கம்" (மாற்கு 1:1) என்ற வார்த்தைகளுடன் தன் நற்செய்தியை அறிமுகம் செய்கிறார்.

'நற்செய்தி' என்ற வார்த்தைக்கு, 'euanglion' என்ற கிரேக்கச் சொல்லை மாற்கு பயன்படுத்தியுள்ளார். இந்தச் சொல், 'நல்ல செய்தியைச் சொல்பவர்' என்பதாகும்.

மாற்கு, 'நற்செய்தி' என்ற சொல்லால் குறிப்பிடுவது, ஒரு கருத்தை, அல்லது, ஏதோ ஒரு காலத்தில், எங்கோ ஓரிடத்தில் நிகழ்ந்த ஒரு வரலாற்றை அல்ல, அது ஒரு தலைசிறந்த மனிதரை, கடவுளின் தூதரைப் பற்றியது என்பதைச் சொல்கிறார்.

எனவே, நற்செய்தியாளர் மாற்கு அவர்கள், ஒரு 'நற்செய்தி'யை அறிமுகம் செய்கிறார் என்பதை விட, 'நல்ல செய்தியாக வாழ்ந்த ஒருவரை' அறிமுகம் செய்கிறார் என்று சொல்வதே பொருத்தமாகத் தெரிகிறது.

நல்ல செய்தியாக வாழ்ந்தவர் இயேசு. அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்திலும், நம்மைப் போலவே, தன்னைச் சுற்றிலும் ஒவ்வொரு நாளும் மோசமானச் செய்திகளைக் கேட்டும், பார்த்தும் வளர்ந்தவர். பாலஸ்தீனம், உக்ரைன், சிரியா, ஆகிய நாடுகளைப்பற்றி நாம் இன்று பேச ஆரம்பித்தால், அங்கிருந்து நல்ல செய்தி எதுவும் வராது என்ற அளவு, மோசமானவற்றையே கேட்டு நாம் அலுத்துப் போய்விட்டோம். நமக்கே இந்த நிலை என்றால், அங்கு வாழ்பவர்களை எண்ணிப் பார்க்கவேண்டும். அங்கு வாழ்பவர்கள் தங்கள் நம்பிக்கையை எல்லாம் இழந்து, நொறுங்கிப் போயுள்ளனர் என்று அப்பகுதியில் பணியாற்றும் திருஅவைத் தலைவர்கள் சொல்லிவருகின்றனர்.

இயேசு வாழ்ந்த காலத்திலும், பாலஸ்தீனம் உரோமைய ஆக்கிரமிப்பில் நொறுங்கிவந்த காலம். ஒவ்வொரு நாளும் அங்கு நிகழ்ந்த அக்கிரமங்களைக் கண்ட இயேசு, அச்செய்திகளின் பாரத்தால் நசுங்கிப்போகாமல், அச்செய்திகளுக்கு மாற்றாக, நம்பிக்கை தரும் செய்திகளை, தன் சொல்லாலும், செயலாலும் உருவாக்கினார்.

நல்ல செய்திகளே நிரந்தரமானவை, ஏனைய மோசமான செய்திகள் நிரந்தரமற்றவை என்பதை மக்கள் மனதில் ஆழப்பதிக்க, தன் உயிரையேப் பணயம் வைத்து உழைத்தார்.

இறுதியில், தன் உயிரைப் பலியாகத் தந்து, இறந்து, உயிர்த்ததால், நல்ல செய்தி என்றும் வாழும் என்ற நம்பிக்கையைத் தந்தார் இயேசு.

இயேசு என்ற நற்செய்தி வாழ்ந்ததால் புண்ணியம் பெற்ற அந்தப் புனிதப் பூமியில், அவரைப் போலவே இன்றும், நற்செய்திகளாக வாழ்ந்துவரும் பலர் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களில் ஒருவர், மருத்துவரான, Izzeldin Abuelaish அவர்கள்.

போர் என்ற பெயரால் வரைமுறையற்ற வன்முறையை வளர்த்துவரும் மனிதர்கள் நடுவில், "இவ்வுலகம் அவ்வளவு மோசமில்லை" என்ற நம்பிக்கையை வளர்ப்பவர்களில் ஒருவர், மருத்துவர் Izzeldin Abuelaish. அவர் எழுதிய "I Shall Not Hate: A Gaza Doctor's Journey" அதாவது, "நான் வெறுப்பு கொள்ளமாட்டேன்: காசாப் பகுதி மருத்துவரின் பயணம்" என்ற நூல், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2014ம் ஆண்டு, புனித பூமியில் பயணம் மேற்கொண்ட வேளையில், அவருக்குப் பரிசாக அளிக்கப்பட்டது. அந்நூலில் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள், நமக்குப் பல பாடங்களைச் சொல்லித் தருகின்றன.



ஒவ்வோர் ஆண்டும், டிசம்பர் 10ம் திகதி, மனித உரிமைகள் நாளை நினைவுகூருகிறோம். 1948ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் கூடிய ஐக்கிய நாடுகளின் பொது அவை, மனித உரிமைகளின் உலகளாவிய அறிக்கையை (UDHR) டிசம்பர் 10ம் நாள் வெளியிட்டது. அதன் நினைவாக, ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 10ம் திகதி, மனித உரிமைகள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இவ்வாண்டு, 10 டிசம்பர் 2023, மனித உரிமைகளின் உலகளாவிய அறிக்கை வெளியிடப்பட்டதன் 75ஆவது ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கின்றோம். இனம், நிறம், மதம், பாலினம், மொழி, ஆகிய எந்த பாகுபாடும் இன்றி, தனி மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமைகளை இந்த அறிக்கை பறைசாற்றி வருகிறது. இந்த அறிக்கை மட்டுமே, உலகில் 500க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

"அனைவருக்கும் சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதி" என்பது இவ்வாண்டு மனித உரிமைகள் நாளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கருப்பொருளாகும். மனித உரிமைகள் அறிக்கையில் கூறபட்டுள்ள மனித மாண்பு மற்றும் சமத்துவம், அண்மைய சில ஆண்டுகளாக, பல நாடுகளில் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதை நாம் அறிவோம். தொற்று நோய்கள், மோதல்கள், முன்னெப்போதும் இல்லாத அளவு வளர்க்கப்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகள், இனவெறி, காலநிலை மாற்றம் என்ற சவால்களை எதிர்கொள்ளும்போது, சுதந்திரம், சமத்துவம், நீதி மற்றும் பிற அடிப்படை உரிமைகள், கோடிக்கணக்கான ஏழை மக்களுக்கு மறுக்கப்படுகின்றன. பாலஸ்தீனின் காசா பகுதி, உக்ரைன், சிரியா, ஏமன், போன்ற இடங்களில், மனசாட்சியற்ற முறையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. குறிப்பாக, உலகின் வருங்காலக் குடிமக்களான குழந்தைகள், இளைஞர்கள், ஆகியோரின் உரிமைகள், எவ்வித தயக்கமும் இன்றி மீறப்படுகின்றன.

உலகெங்கிலும் தற்போது நடந்துவரும் மோதல்களில், குழந்தைகளும், இளம் தலைமுறையினரும் மிக அதிகமான சவால்களை எதிர்கொள்கின்றனர். தங்களுடைய பெற்றோர், உடன்பிறந்தோர் கொல்லப்படுதல், மற்றும் தங்கள் இல்லங்கள், பள்ளிகள் ஆகியவை தகர்க்கப்படுதல் போன்ற அழிவுகள், இந்த இளம் உள்ளங்களில் வேதனை, கோபம், விரக்தி ஆகிய உணர்வுகளை வளர்க்கின்றன. இந்த உணர்வுகள் சரியாக குணமடையாதபோது, அவர்கள் வாழ்நாள் முழுவதும், காயமடைந்த உள்ளத்துடன் வாழவேண்டியுள்ளது. அவர்களது கோபத்தையும், விரக்தியையும் பயன்படுத்திக் கொண்டு, சில போராளிக் குழுக்கள், இந்தக் குழந்தைகளையும் இளைஞர்களையும் எளிதாகக் கவர்ந்து, அவர்களை, இராணுவ வீரர்களாகவும், தற்கொலைப் படை வீரர்களாகவும் மாற்றுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும்.

இதற்கு மாறாக, வேறு சில இளைஞர்கள் தங்கள் கோபத்தையும் வேதனையையும் ஆக்கபூர்வமான வழிகளில் வெளிப்படுத்துகிறார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

உஸ்பெகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த 18 வயதுடைய ஹுசைன் மிர்சா ஹபிபோவ் (Husan Mirza Habibov) என்ற ஓர் இளம் கலைஞர், 'ரூபிக்' எனப்படும் கனசதுர வடிவங்களைப் பயன்படுத்தி, காசா மக்களுடன் ஒற்றுமையை வெளிப்படுத்தும் தனித்துவமான ஓர் ஓவியத்தை வரைந்துள்ளார். இவரது கலைப்படைப்பு, அவ்விளைஞரின் கலைத் திறமைகளுக்குச் சான்றாக மட்டுமல்லாமல், காசா மோதலில் பாதிக்கப்பட்டவர்களை, குறிப்பாக, குழந்தைகளையும், பெண்களையும் குறித்து அவர் கொண்டிருக்கும் பரிவை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

அமைதியை உருவாக்கும் முயற்சிகளுக்கு, என்னுடைய மூன்று மகள்களின் உயிர்கள், இறுதிப் பலிகளாக அமைந்தன என்பதை அறிந்தால், என் மனம் அமைதிபெறும்" என்று தெரிவிக்கும் மருத்துவர் Abuelaish அவர்கள், "நான் வெறுப்பு கொள்ளமாட்டேன்" என்ற தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பாலஸ்தீனம், இஸ்ரேல் நாடுகளுக்கிடையே நடப்பதெல்லாம் அழிவு மட்டுமே என்பதைச் செய்திகளாக வெளியிட்டு வரும் ஊடகங்களை நம்புவதைக் காட்டிலும், அப்பகுதிகளிலும் 'நற்செய்தி'களாக வாழ்பவர்கள் உள்ளனர் என்பதை, அங்கு வாழ்ந்த இயேசு, மற்றும், மருத்துவர் Abuelaish போன்று, அங்கு தொடர்ந்து வாழும் நல்லவர்கள் வழியே அறிய முயல்வோம்.

இந்த நற்செய்திகளை பரப்புவதற்கு ஊடகங்கள் முன்வராது. இருப்பினும், நல்லவை இவ்வுலகில் நடக்கத்தான் செய்கின்றன என்ற நம்பிக்கையை வளர்ப்பது, நாம் ஆற்றக்கூடிய முதல் 'நற்செய்தி'ப்பணி. அமைதியின் இளவரசராம் இயேசுவின் வருகையை வருவதை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இந்தத் திருவருகைக் காலத்தில், அமைதியின் தூதர்களாக ஆயிரமாயிரம் உள்ளங்கள் நம்மைச் சுற்றி வாழ்கின்றனர் என்ற 'நற்செய்தி'யை, நம்மால் முடிந்த வரை இவ்வுலகில் பரப்ப முயற்சிகள் மேற்கொள்வோம்.

வாழ்வில் நாம் நல்லவை சிலவற்றை அனுபவிக்கும் போது, அதை மற்றவர்களுக்குச் சொல்வதில்லையா? நாம் படித்த ஒரு நல்ல நூல், நாம் சுவைத்த ஒரு நல்ல உணவு, நாம் பயன்பெற்ற ஒரு நல்ல மருந்து, அல்லது, நாம் கண்டு இரசித்த ஓர் இடம், ஒரு திரைப்படம்.. என்று, நாம் பெற்ற இன்பத்தை மற்றவரும் பெறவேண்டும் என்ற முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோமே! நாம் பெற்ற நல்ல அனுபவத்தை மற்றவர்களும் பெறுவதற்கு பரிந்துரைக்கிறோம். அழைப்பு விடுக்கிறோம். அல்லது, குறைந்தபட்சம், நம் அனுபவத்தை ஒரு 'நல்ல செய்தி'யாக அவர்களுடன் பகிர்ந்துகொள்கிறோம்.

கிறிஸ்தவ மறையின் ஆணிவேராக விளங்கும் இயேசுவையும், அவர் வாழ்வையும் ஒரு 'நற்செய்தி'யாக நாம் மற்றவர்களுடன் பகிர்ந்துள்ளோமா? அந்த நற்செய்தியாக நாம் வாழ முற்படுகிறோமா? அல்லது, அந்த 'நற்செய்தி', எப்போதாவது ஒருநாள் தூசி துடைத்துப் புரட்டப்படும் ஒரு நூலாக, நம் வாழ்வில் தேடவேண்டிய ஓர் ஆன்மீக அகராதியாக மட்டும் நம் வாழ்வின் ஏதோ ஒரு மூலையில் முடங்கிக் கிடக்கிறதா?

விடைகள் தேடுவோம்! .... பயன்கள் பெறுவோம்!

**அருட்பணி எப்.எக்ஸ். ஜெரோம்**




## பேசாலை புனித வெற்றி நாயகி திருவிழா






மன்னார் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய திருவிழா அண்மையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது. பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய திருவிழா கடந்த நவம்பர் 29ஆம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து நவநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. கடந்த 7ஆம் திகதி வியாழக்கிழமை மாலை வெஸ்பர்ஸ் ஆராதனையும் அதனையடுத்து வெள்ளிக்கிழமை காலை திருவிழா கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் புனித வெற்றி நாயகி ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் உட்பட அருட்தந்தையர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் அதனைத்தொடர்ந்து இறுதி ஆசீரும் மன்னார் மறைமாவட்ட ஆயரினால் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. திருவிழாவில் வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள், தகவல்: மன்னார் குறூப் நிருபர் எஸ்.றொசேரியன் லெம்பேட்)

# திருவருகைக்கால மெழுகுவர்த்திகள்

## அர்த்தங்களும் படிப்பினைகளும்



திருவருகைக் காலம் இறை மகனின் வருகைக்காக நம்மை தயாரிக்கின்ற காலம். விழித்திருந்து நம் மீட்பரை சந்திக்க நம்மை அழைக்கின்ற காலம்.

இருளின் பிடியில் இருந்தும் அடிமையின் பிடியில் இருந்தும் அழிவில் இருந்தும் துன்பத்தில் இருந்தும் காத்துக் கொள்ள மானிட மகனை சந்திப்பதற்காக அவரை நம் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ள அழைக்கும் அன்பின் காலம். இஸ்ராயேல் மக்கள் மெசியாவின் வருகைக்காக காத்திருந்ததுபோல நாமும் இந்த திருவருகை காலத்தில் காத்திருப்போம்.

விளக்குகளுடன் அன்று இயேசு மொழிந்த பத்து தோழியர் உவமையில் அக்கன்னியர் காத்திருந்தனர். அவர்களை போல நாமும் விளக்குகள் ஏற்றி மணமகனின் வருகைக்காக நம்மையே தயார் செய்யும் காலம் இது.

**முதல் வாரம்: எதிர்நோக்கு**
**எதிர்நோக்கின் மெழுகுவர்த்தி**

இது மீட்பரின் வருகைக்காக காத்திருந்த நம் முதுபெரும் தந்தையர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரை குறிக்கின்றது.

"கவனமாய் இருங்கள், விழிப்பாய் இருங்கள். ஏனெனில் அந்நேரம் எப்போது வருமென உங்களுக்கு தெரியாது"

*மாற்கு 13:33,*

ஆண்டவர் நம்மை விழிப்புடன் காத்திருக்கும்படி கேட்கின்றார். ஆனால் நாமோ உலக கவலைகளிலும், உலக கவர்ச்சிகளிலும் நம் மனங்களை செலுத்தி வாழ்ந்து வருகிறோம். இனியாவது "ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கின்றேன்" என்று கூறி அவரின் வருகைக்காக நம்மையே ஆயத்தப்படுத்துவோம்.

**இரண்டாம் வாரம்: அமைதி**
**அமைதியின் மெழுகுவர்த்தி**

மீட்பரின் வருகை, வரும் காலம்,அவரின் இயல்புகள் போன்ற அனைத்து செய்திகளையும் தந்த இறைவாக்கினர்களான எசாயா, எரேமியா, தானியேல் போன்றோரை குறிக்கின்றது.

"மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது" மத்தேயு: 3:1

இறைவாக்கினர்கள் அனைவரும் மீட்பரின் வருகைக்காக நாம் எவ்வகை தயாரிப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என எடுத்துரைத்துள்ளனர். நாம் அனைத்தையும் அறிந்திருந்தும் நம் வலுவின்மையாலும், விசுவாச குறைவாலும் மீண்டும் மீண்டும் ஆண்டவரை விட்டு விலகி செல்கிறோம். இனியாவது அவரில் நம்பிக்கை கொண்டு அவரை நாடி தேடுவோம்.

**மூன்றாம் வாரம்: மகிழ்ச்சி**
**மகிழ்ச்சியின் மெழுகுவர்த்தி**

இது மீட்பரின் முன்னோடியான புனித திருமுழுக்கு யோவானை குறிக்கின்றது.

"பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது. ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாகுங்கள்; அவருக்காக பாதையை செம்மையாக்குங்கள், பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பபடும்; மலை, குன்று யாவும் தாழ்த்தப்படும்; கோணலானவை நேராக்கப்படும்; கரடுமுரடானவை சமதளமாக்கப்படும். மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பை காண்பர்"

*லூக்கா: 3: 46*

நாம் மீட்பின் காலத்தை நெருங்கிவிட்டோம். திருமகன் கிறிஸ்துவை அறச்செயல்கள் நிறைந்த வாழ்வினால் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கின்றோமா? அவர் வரும்போது அவரது வலப்பக்கம் நிற்கவும், விண்ணரசை அடையவும் ஏற்புடையவர்களாவோம்.

**நான்காம் வாரம்: அன்பு**
**அன்பின் மெழுகுவர்த்தி**

அன்னை மரியாளையும் அவர் கணவர் புனித யோசேப்பையும் இது குறிக்கின்றது.

அவர் பெரியவராய் இருப்பார். உன்னத கடவுளின் மகன் எனப்படுவார்.

*லூக்கா 1:3233*

மீட்பரை சந்திக்க அன்னை மரியாளும் புனித யோசேப்பும் எவ்வாறு ஆயத்தமாய் இருந்தனரோ அவர்களைப்போல் நம்மை மீட்க வந்த பாலகனை வரவேற்க நம்மை தயார்படுத்த இதுவே வாய்ப்பு. அன்னையின் எதிர்நோக்கையும், புனித யோசேப்பின் நேர்மைத்தனத்தையும் கொண்டு வாழ முயல்வோம்.

**எல்.எஸ்**

# "துன்புறுவோரின் கண்ணீரை துடைத்தருளும்"

## மாதா முன் மலர்களை காணிக்கையாக்கி திருத்தந்தை வேண்டுதல்



வன்றையில் இருந்து மக்களை விடுவித்து, பெண்கள் மற்றும் அன்னையர்களின் கண்ணீரைத் துடைத்தருளும் என்றும் வறுமை போர் மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பைத் தந்தருளும் என்றும் அமல அன்னையிடம் தன் மன்றாட்டை முன்வைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

டிசம்பர் 8 வெள்ளிக்கிழமை அமல உற்பவ அன்னை திருவிழாவன்று உரோம் நகரில் உள்ள அன்னைமரியா திருவுருவச் சிலைக்கு மாலையிட்டு செபித்த போது அவர் இவ்வாறு செபித்தார்.

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள், மோதல் மற்றும் வன்முறையினால் கொல்லப்பட்ட தங்கள் குழந்தைகளுக்காக துன்புறும் அன்னையர்கள், அவர்களை அத்துன்பத்தில் இருந்து மீட்டுக் கொண்டு வர முயற்சிப்பவர்கள், உரோம் மற்றும் இத்தாலிய மக்கள், உக்ரேன், பாலஸ்தீனம், இஸ்ரயேல் மக்கள், ஒடுக்கப்பட்டவர்கள் என பலர் Spagna ஆலய வளாகத்தில் கூடியிருக்க திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அன்னை மரியாளின் திருச்சுரூபத்திற்கு வெள்ளை நிற ரோஜா மலர்க்கொத்தைக் காணிக்கையாக வைத்து செபித்தார்.

துன்புறும் ஒவ்வொரு மக்களையும் நினைவுகூர்ந்து வெள்ளை நிற ரோஜா மலர்க் கொத்துக்களைக் காணிக்கையாக்கிய திருத்தந்தை அன்னை மரியாள் எல்லா தீமைகளையும் துன்பங்களையும் வென்றதற்கான அடையாளம் என்றும் கூறினார்.

அன்னை மரியே நீரும் உமது இருப்பும், தீமை என்பது முதலான மற்றும் கடைசியான வார்த்தை அல்ல என்பதை எங்களுக்கு நினைவூட்டுகின்றது என்றும், நாங்கள் அடைய வேண்டிய இலக்கு, இறப்பு அல்ல வாழ்வு, வெறுப்பு அல்ல சகோதரத்துவம், மோதல் அல்ல இணக்கம், போர் அல்ல அமைதி என்று உணர்த்துகின்றது என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

கடந்த வாரங்களில் நுரையீரல் தொற்று அலற்சி மற்றும் காய்ச்சலால் உடல்நலமற்று மருத்துவர்களின் ஆலோசனையின்படி ஓய்வெடுத்து வரும் திருத்தந்தை,உரோம் நகர் பாரம்பரிய வழிபாட்டுமுறைகளில் ஒன்றான அமல அன்னை திருஉருவத்திற்கு மாலை அணிவித்து செபிப்பதை தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் செய்து வருகின்றார்.

2020 ஆம் ஆண்டு கொவிட் தொற்றினால் உலக மக்கள் அனைவரும் வீடுகளில் முடங்கிக் கிடந்த போதும் திருத்தந்தை டிசம்பர் 8 அமல அன்னைத் திருவிழாவின் போது வைகறையில் அன்னையின் திருவுருவத்திற்கு முன் நின்று உலக மக்களுக்காக செபித்தது குறிப்பிடத்தக்கது.

தனது தலைமைத்துவப் பணியின் பத்தாண்டுகளில் 115ஆவது முறையாக டிசம்பர் 8 வெள்ளிக்கிழமை உரோம் புனித மேரி மேஜர் பெருங்கோவிலுக்கு சென்று திருத்தந்தை பிரான்சிஸ் செபித்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 26ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 26

## குறள் தரும் சிந்தனை



இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு

இருக்கும்போது இல்லையென்று கைவிரிப்பதைக் கனவிலும் நினைக்காதவரிடத்தில், இல்லாதார் இரந்து கேட்பது பிறருக்கு ஈவது போன்ற பெருமையுடையதாகும்.

# நாடு அபிவிருத்தியடைவதற்கு அறிவியல், ஆராய்ச்சி அவசியம்

இலங்கை சுதந்திரமடைந்து ஏழு தசாப்த காலம் கடந்து விட்டது. இருந்தும் இன்னும் வளர்முக நாடாகவும் மூன்றாம் மண்டல நாடாகவுமே அடையாளப்படுத்தப்படுகிறது இந்நாடு. 1505 முதல் 1948 வரையான 443 வருடங்கள் வரை இந்நாடு ஐரோப்பியரின் ஏகாதிபத்தியத்திற்கு உள்ளாகி இருந்தது. அதற்கு முன்னரான காலப் பகுதியில் இந்நாட்டுக்குத் தேவையான அனைத்தும் இங்கேயே உற்பத்தி செய்து கொள்ளப்பட்டன. வாசனைத் திரவியங்கள், அரிசி என்பன கூட சில நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உணவு உற்பத்தி விவசாயத்துறையில் முன்னணியில் திகழ்ந்துள்ள இந்நாடு, ஒரு காலத்தில் தெற்காசியாவின் தானியக் களஞ்சியமாகவும் விளங்கியுள்ளது. நாடொன்றின் சுயபொருளாதார மேம்பாட்டுக்குத் தேவையான வளங்களை இந்நாடு இயற்கையாகவே பெற்றுக் கொண்டிருக்கிறது.

பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றுக் கொள்ளும் போது பொருளாதார ரீதியில் ஜப்பானுக்கு அடுத்த இ டத்தில் இருந்தது இலங்கை. ஆனால் அன்று இந்நாட்டை விடவும் பொருளாதார ரீதியில் பின் தங்கி இருந்த பல நாடுகள் இலங்கையை விட வும் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்துள்ளன. அவற்றில் மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகள் குறிப்பிடத்தக்கன. ஆனால் இலங்கை தொ டர்ந்தும் மூன்றாம் மண்டல நாடாகவும் வளர்முக நாடாகவும்தான் இருந்து வருகிறது.

இந்நிலையில் கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் இந்நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்தது. இவ்வாறானதொரு நெருக்கடியை அண்மைக்கால வரலாற்றில் இந்நாடு சந்திக்கவில்லை. இப்பொருளாதார நெருக்கடியின் விளைவாக நாடும் மக்களும் பலவிதமான அசௌகரியங்களையும் பாதிப்புக்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதன் விளைவாக உருவான பொருளாதார மற்றும் அரசியல் கொதிநிலையானது ஆட்சியை மாற்றியமைத்தது. நாட்டின் தலைமைப் பதவியை இழக்கும் நிலைக்கு அன்றைய ஆட்சியாளர்களைத் தள்ளியது. இந்நிலையில் நாட்டின் தலைமையை ஏற்க எவரும் முன்வராத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

அவ்வேளையில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை துணிந்து ஏற்றார். பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமை அளித்தார். அதனை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டங்களை அவர் ஆரம்பித்தார். அவ்வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதி முதல் பிரதிபலன்களை அளிக்கத் தொடங்கியதோடு, பொருளாதார நெருக்கடி காலத்தில் நிலவிய அசௌகரியங்களும் நீங்கி நாடு மறுமலர்ச்சி பாதையில் பிரவேசிக்க வழிவகுத்திருக்கிறது.

நாடு பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடைய வேண்டும். தொடர்ந்தும் மூன்றாம் மண்டல நாடாகவும் வளர்முக நாடாகவும் இருக்க முடியாது. அதுவே இந்நாட்டை உண்மையாக நேசிக்கும் அனைத்துத் தரப்பினரதும் கருத்தாகும். ஜனாதிபதியின் விருப்பமும் எதிர்பார்ப்பும் அதுதான். அதற்கு ஏற்பவே வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த வகையில் நவீன டிஜிட்டல் யுகத்திற்கு ஏற்ப நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை பரவலாக எழுந்துள்ளது. குறிப்பாக விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில் முன்னேற்றமடைவதன் ஊடாகவே உணமையான பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்ள முடியும். அதுவே பொருளாதார நிபுணர்களின் கருத்துமாகும்.

இன்றைய காலகட்டத்தில் உலகின் பல நாடுகளது முன்னேற்றத்திற்கும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாரிய பங்களிப்பை நல்கியுள்ளன. இந்நிலையில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் என்ற வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சித் துறைகளுக்கென முதன்முறையாக அதிகூடிய நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்.

இது தொடர்பில் பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தரவின் ஜனனதின நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, 'விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக மேலும் 08 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இத்துறைகளுக்கு இதுவரை இந்தளவு தொகை நிதி ஒதுக்கப்படவில்லை. நாம் முன்னேற வேண்டுமானால், அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் கவனம் செலுத்த வேண்டும்' என்றுள்ளார்.

அதேநேரம் 'செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உலகளாவிய ரீதியில் வளர்ச்சி பெற்று வருகிறது. இத்துறையை இலங்கையில் மேம்படுத்தும் வகையில் 1.5 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது' எனவும் குறிப்பிட்டிருக்கிறார் ஜனாதிபதி.

உண்மையில் நாடென்ற வகையில் முன்னேற்றமடைவதற்கு அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அத்துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நாடுகள் பெரிதும் முன்னேற்றமடைந்து வருகின்றன.

ஆகவே நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற உண்மையான நோக்குடன் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அது பொருளாதார சுபீட்சத்துக்கும் மக்களின் வளமான வாழ்வுக்கும் அளிக்கப்படும் பாரிய சேவையாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# தினகரன் குடும்பத்தில் இருவருக்கு 'வாழ்நாள் சாதனையாளர் விருது'

தினகரன் பத்திரிகைக்கு பல தசாப்த காலமாக பெரும் பங்களிப்பு நல்கி வருகின்ற சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் இருவர் இன்று சிறப்பு உயர்விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர்.

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆலோசகராகப் பணியாற்றிய எம்.ஏ.எம். நிலாம், தினகரன் பத்திரிகையின் கரவெட்டி பிரதேச ஊடகவியலாளராகக் கடமையாற்றி வருகின்ற எஸ். தில்லைநாதன் ஆகியோர் இன்று ஊடகத்துறைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர்.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும், இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஊடகவியலாளர்களுக்கான அதியுயர் விருது வழங்கும் விழா_2022 இன்று செவ்வாய்க்கிழமை மாலை ஆறு மணிக்கு கல்கிசையிலுள்ள மவுண்ட்லவினியா ஹோட்டலில் நடைபெறவிருக்கின்றது. இவ்விழாவில் சிறந்த ஊடகவியலாளர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

இவ்விருதுகளில் வாழ்நாள் முழுவதும் ஊடகத்துறைக்கு பெரும் பணியாற்றிய சிரேஷ் ஊடகவியலாளர்கள் ஐந்து பேருக்கு 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கப்படுகின்றது. ஊடகவியலாளர்களுக்கு உயர்விருதுகள் வழங்கும் இந்த வருடாந்த விழா இம்முறை 24 ஆவது தடவையாக நடைபெறுகின்றது. இன்றைய விழாவில் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கி கௌரவிக்கப்படுகின்ற ஐந்து சிரேஷ்ட ஊடகவியலாளர்களில் இருவர் தினகரன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இருவரில் ஒருவரான யாழ் கரவெட்டியைச் சேர்ந்த எஸ். தில்லைநாதன் தமிழ் ஊடகத்துறையில் பிரபல்யம் மிக்க ஒருவராவார். தினகரன் பத்திரிகையில் பல தசாப்த காலமாக அவர் பிரதேச ஊடகவியலாளராகப் பணியாற்றி வருகின்றார். செய்தி மற்றும் கட்டுரைகள் வாயிலாக தினகரனுடன் எக்காலத்திலும் மிக நெருக்கமாகவிருந்து பங்களிப்பு செய்து வருகின்ற தில்லைநாதன், பல்வேறு ஊடகங்களுக்கும் ஆக்கங்களை எழுதி வருபவராவார். அவர் பல்வேறு சிறப்பு விருதுகளைப் பெற்ற ஒருவராவார்.



எஸ். தில்லைநாதன்

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும், இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து இன்று நடத்துகின்ற ஊடகவியலாளர்களுக்கான அதியுயர் விருது வழங்கும் விழாவில் எம்.ஏ.எம். நிலாம், எஸ். தில்லைநாதன் ஆகிய இருவருக்கும் விருதுகள்



எம்.ஏ.எம். நிலாம்

அது மாத்திரமன்றி மூத்த ஊடகவியலாளரான தில்லைநாதன், தமிழ்மொழியில் பணியாற்றும் ஏனைய கனிஷ்ட ஊடகவியலாளர்களுக்கு ஆலோசனை வழங்கக்கூடிய ஊடக ஆசானாகவும் இருந்து வருகின்றார். ஊடக அமைப்புகளில் அங்கம் வகித்து ஊடகவியலாளர்களுக்கான உரிமைகளுக்கு பாடுபடும் ஒருவராகவும் அவர் உள்ளார். அதன் காரணமாக ஊடகத்துறையில் ஏராளமான நண்பர்கள் அவருக்கு உள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது. தினகரன் பத்திரிகைக்கு அவர் பன்னெடும் காலமாக பங்களிப்பு செய்து வருகின்றார். அவ்வப்போது சிறந்த ஆலோசனைகளையும் அவர் வழங்கி வருகின்றார்.

வாழ்நாள் சாதனையாளர் விருது பெறுகின்ற எம்.ஏ.எம். நிலாம் தமிழ் ஊடகப் பரப்பில் மிகப் பிரபல்யம் வாய்ந்தவராவார். தினகரனின் பிரதம ஆசிரியராக அமரர் ஆர். சிவகுருநாதன் நீண்ட காலமாகப் பணியாற்றிய காலத்தில் அவருடன் நெருங்கிய நட்புறவைப் பேணி ஆக்கங்கள் வாயிலாக பங்களிப்பு வழங்கி வந்தவர் நிலாம்.

ஆரம்ப காலத்தில் சிறுகதை எழுத்தாளராகவும், கவிஞராகவும் தினகரனில் தடம் பதித்தவர் நிலாம். தினகரன் பத்திரிகையில் அவர் ஏராளமான ஆக்கங்களைப் படைத்துள்ளார். அவர் தினகரன் குடும்பத்தில் ஒருவராக தன்னை எப்போதும் அடையாளப்படுத்தி வந்துள்ளார். அவர் பல்வேறு சிறப்பு விருதுகளையும் பெற்றுள்ளார்.

இலங்கையின் பல்வேறு ஊடகங்களிலும் பணியாற்றிய அனுபவம் கொண்ட எம்.ஏ.எம். நிலாம், லேக்ஹவுஸ் தமிழ் வெளியீடுகளின் ஆலோசகராகவும் பணியாற்றியவராவார். இலங்கையின் தமிழ், முஸ்லிம் பத்திரிகையாளர்களுடன் மாத்திரமன்றி சிங்களப் பத்திரிகையாளர்களுடனும் நெருக்கம் பேணி வருபவர் நிலாம். பத்திரிகையாளர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வருபவர் அவர்.

தினகரன் குடும்பத்தைச் சேர்ந்த எஸ். தில்லைநாதன், எம்.ஏ.எம்.நிலாம் ஆகிய இருவரும் வாழ்நாள் சாதனையாளர் விருது பெறுவதையிட்டு தினகரன் பத்திரிகை அவ்விருவரையும் வாழ்த்துவதுடன், பெருமிதமும் கொள்கின்றது.

எஸ்.பி

# ஐக்கியத்துடன் முயன்றால் அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கையை மாற்றியமைக்க முடியும்

## உலகத் தமிழ் பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரன் நம்பிக்கை

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை தேர்தலின் போது பொதுமக்களிடம் முன்வைத்து சகலதரப்பினரின் அங்கீகாரத்துடன் அதனை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒப்புதல் அளித்துள்ளதாக உலகத் தமிழ் பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்தார். இலங்கையிலுள்ள பல்வேறு சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வு மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் உலகத் தமிழ் பேரவையும் சில முக்கிய பௌத்த பிக்குகளும் இணைந்து 'சிறந்த இலங்கைக்கான சங்கம்' என்ற அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.





இந்த அமைப்பின் குழுவினர் கண்டி அஸ்கிரிய ஸ்ரீ தம்மகீர்த்தி மகாநாயக்க தேரர் அவர்களை சந்தித்து, இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் கௌரவத்துடனும் நம்பிக்கையுடனும் அச்சம், சந்தேகமின்றி நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்கான கொள்கைப் பிரகடனத்தை கையளித்திருந்தனர்.

இச்சந்திப்பின் பின்னர் கண்டி குயின்ஸ் ஹோட்டலில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது உலகத் தமிழ் பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடந்தும் தெரிவித்ததாவது:

"இந்நிகழ்வை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாகப் பார்க்கின்றேன். கடந்த 75 வருடகாலத்தில் பௌத்தசமயத் தலைவர்களைப் பார்த்து நாங்கள் இது வரையிலும் அவர்கள் மீது குறைகளைக் கூறி இருக்கின்றோம். ஆனால் அவர்களுடன் பேசி தமிழ் மக்களுக்குரிய உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் ஏன் மறுக்கின்றார்கள் என்பதை நாங்கள் ஆராய்ந்து பார்த்தோமா? நாம் அறிந்தவரையிலும் அவ்வாறான வரலாறு இல்லை. இத்தனை காலம் கடந்த பின்னர் நேபாளத்தின் நாகர்கோயிலில் சந்தித்துக் கொண்ட நாம், ஏப்ரல் மாதத்தில் நான்குநாட்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தினோம். வெளிப்படையாக மனம் விட்டுப் பேசினோம். சிக்கல்களுக்கான தீர்வுகள் குறித்து கலந்துரையாடி 'இமாலயாவின் பிரகடனம்' என்ற ஒன்றை ஏற்படுத்தினோம்.

அவற்றில் ஆறு முக்கிய விடயங்களைக் கருத்திற் கொண்டு இருக்கின்றோம். அக்கருத்தினைக் கொண்ட அறிக்கையினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாகக் கையளித்துள்ளோம். அதன் போது ஜனாதிபதி எம்மிடம் தெரிவித்த விடயங்களில் அதிகாரப் பகிர்வு என்பது முக்கியமான விடயம். 'இலங்கையின் ஆட்சிமுறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அதிகாரப் பகிர்விலும் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும். அதற்கான அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டும். அதேபோன்று சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை கொஞ்சம் கொஞ்சமாக விடுவித்து வருகின்றோம். அவர்களில் சிலர்தான் இருக்கின்றனர். அவர்களில் ஒரிரு நபர்களை விடுவிப்பது கடினமாக இருக்கும். ஏனையவர்களை விடுதலை செய்யவுள்ளோம்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதில் நான் உறுதியாக இருக்கின்றேன். காணி விடயங்களில் பல தீர்மானங்களை கவனத்தில் கொண்டு, 1985 ஆம் ஆண்டு எல்லை நிர்ணய அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளும்படி வனபரிபாலனத் திணைக்களத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளேன்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் தெரிவித்தார்" என்று சுரேன் சுரேந்திரன் அந்த ஊடக சந்திப்பில் கூறினார்.

அதேபோன்று வடக்கு, கிழக்கு மாகாணங்கள் போரால் பாதிக்கப்பட்டு இருப்பதனால் அப்பிரதேச அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்வதில் கரிசனை கொண்டிருப்பதாகவும், திருகோணமலை மாவட்டத்தை அடிப்படை அபிவிருத்தித் தளமாக உருவாக்குவதற்கு இந்திய அரசாங்கத்தின் ஆதரவைப் பெற விருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்ததாக சுரேன் சுரேந்திரன் குறிப்பிட்டார்.

"பொருளாதார ரீதியாக அடுத்த கட்டத்திற்கு நாட்டை முன்கொண்டு செல்வதற்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் இருக்கின்றோம். உலகிலேயே தனித்துவமான அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கையை மாற்றமுடியும். ஐக்கியமான முயற்சியின் ஊடாக மாற்றம் செய்யலாம்" என்று சுரேன் சுரேந்திரன் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகச் சந்திப்பின் போது அமெரிக்கா, கனடா,அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தஉலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளான வேலுப்பிள்ளை கருணாகரன் (இங்கிலாந்து), டொக்டர் சாந்தினி ஜயராஜா (அமெரி க்கா), தனபாலசிங்கம் சுரேந்திரன் (இங்கிலாந்து), டொக்டர் கண்ணப்பா முகுந்தன் (அவுஸ்திரேலியா), ஸ்ரீகாந்தபவகுகன், (இங்கிலாந்து), பிரகாஷ் ராஜசுந்தரம் (அவுஸ்ரேலியா), ராஜ் தேவரட்ணசிங்கம் (கனடா), டொக்டர் எலியஸ் ஜயராஜா (அமெரிக்கா) ஆகிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அத்துடன் இச்சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பௌத்த தேரர்களான மாதம்பகைம அஸ்ஸஜி திஸ்ஸ் தேரோ, அம்பேபிடிட்டி அனுநாக தேரோ,வடக்கு_கிழக்கு பிரதான சங்கநாயக்க தேரர் சியம்பலகஸ்வெவ விமலசார தேரர்,கிதுல்கல ஹேமசாரநாயகதேரர், பேராசிரியர் பல்லேகந்தரத்தனசாரதேரர், கலுபஹனபியரட்ன தேரர், நாரம்பன வதம்மலோகதேரர், வெலத்தர சோபித அனுநாயக்க தேரர், வெத்துவதம்பவன்ச தேரர்ஆகியோர் இந்த ஊடக மாநாட்டில் கலந்து கொண்டனர்.





இக்பால் அலி

# மலையகத்திலிருந்து கல்வித்தகைமையுள்ள பெண்கள் பாராளுமன்றம் செல்வதற்கு வழியமைக்க வேண்டும்

அரசியல் மற்றும் சமூக ஆய்வுகளின் விபரிப்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய பெண்ணியல்வாதம், 1970 ஆம் ஆண்டுகளில் கற்கைத் துறையில் இணைக்கப்பட்டு அரசியல் என்ற எண்ணக்கருவின் விளக்கத்தையும் விருத்தி செய்தது. பெண்ணியல்வாதத்தின் தலையீடு வலுப்பெற்று அரசியல்துறையில் பெண்களின் பங்கு குறித்து எழுப்பப்பட்ட வினாக்கள் பாரம்பரிய அரசியலின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைந்தது.

இதற்கு உதாரணமாக, அரசியல் என்ற துறையில் பெண்கள் ஏன் புறந்தள்ளப் பட்டுள்ளனர்? அரசியல் துறையை ஆண்களின் துறையாக தொடர்ந்தும் நடைமுறையில் வைப்பதன் நோக்கம்? மற்றும் சமூக வரலாற்றின் ஊடாக பெண்கள் இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது ஏன்? போன்ற வினாக்களை ஆராய்வதன் மூலம் அரசியல் விபரிப்புக்கு பால்நிலை, ஆணாதிக்கம், பெண்துன்புறுத்தல், பெண் விடுதலை போன்ற பெண்ணியல்சார் எண்ணக்கருக்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன.

வகுப்பு, இனம், சமூகம், பிரஜை, போன்ற அரசியலின் அதிமுக்கிய அடையாளங்களில் ஆண் பெண் பால்நிலை இணைத்ததன் மூலம் அரசியலானது ஆய்வு, விமர்சன ரீதியில் பெண்ணியல் வாதத்தினால் மாற்றமடைந்த முறையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அரசியல் கருத்தியலில் பெண்ணியல்வாதத்தின் தலையீடு ஆரம்பமானது முதல் பெண்ணியல்சார் கோட்பாடு மற்றும் பெண்ணியல் சார் கருத்தியல்கள் ஒரு கற்கை துறையாக ஊடுருவி உள்ளது பெண் விடுதலைக்கு வித்திட்டுள்ளது.



இந்த வகையில், எவ்வித பால்நிலை வேறுப்பாடுகளுமின்றி வயது வந்த அனைவருக்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப் பட்டது என்ற பெருமையை குடியேற்ற நாட்டாட்சி நாடுகளுள் முதலாவது நாடாக இலங்கைப் பெற்றுக் கொண்டது மேலும், பெண்ணியல்சார் கோட்பாடுகளுக்கு வலுச் சேர்க்கின்றது.

இவ்வாறான சிறப்பம்சங்களை தன்னகத்தேக் கொண்ட இலங்கையில் பெண்ணியல்சார்வாதங்களின் தலையீடு குறித்து ஆராய்ந்தோமானால், இலங்கையைப் பொறுத்தவரை கல்வி, கைத்தொழில், விவசாயம் போன்ற பல்வேறான துறைகளில் பெண்களின் பங்களிப்பு மேலோங்கி உயர்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதிலும் பார்க்க இலங்கை அரசியலிலும் பெண்கள் வலுப்பெற்றவர்களாகவே திகழ்கின்றனர். பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழிருந்த நாடுகளில் முதன் முதலில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய நாடு என்ற பெருமை இலங்கையையே சாரும்.

வளர்ச்சியடைந்த பல நாடுகளில் கூட அப்போது பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்படவில்லை. இந்நிலையில், இலங்கைக்கு இத்தகைய வரலாற்றுப் பெருமைகள் இருந்தும் கூட உலக நாடுகளின் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை ஒப்பிடுகையில் குறைந்த பெண் பிரதிநிதித்துவம் கொண்ட நாடாக இலங்கையே முன்னிலை நாடாக திகழ்கிறது. அத்துடன் தென்னாசியாவிலே குறைந்தளவு பிரதிநிதித்துவம் கொண்ட நாடாகவும் இலங்கை விளங்குகிறது.

மலையக பெண் சமூகத்தின் அரசியல் நிலை தொடர்பில் ஆராய்ந்தோமானால் அவர்கள் அரசியல் துறைசார் விளக்கங்கள், எண்ணக்கருக்கள் தொடர்பில் புரிந்துணர்வின்மையற்று இருப்பது பின்தங்கிய நிலையை உறுதிச் செய்கின்றது. மலையகத்தின் வரலாற்றுக் காலம் முதலே அரசியலில் பெண்களின் ஈடுபாடு என்பது மிகவும் குறைவாகவே காணப்பட்டு வந்தது. இந்நிலையானது, உண்மையாகவே பெண்களின் அரசியல் ஈடுபாடானது குறைந்து காணப்பட்டதா அல்லது ஆணாதிக்க சமூகத்தினால் பெண்களின் அரசியல் ஈடுபாடனது குறைக்கப்பட்டதா என்பது விவாதிக்கப்பட வேண்டிய ஒன்றாகிறது.

மலையக பெண் தொழிலாளர்கள் தற்சமயம் அரசியலில் ஈடுபடுவது மகிழ்ச்சியளிக்கின்றது. மலையகத்திற்கு அரசியல்துறைசார் நலன்களை பெற சிறந்த கல்வித் தகைமையுடைய பெண் கல்விமான்களை தெரிவு செய்து பாராளுமன்றத்திற்கு செல்ல வழி செய்தால் ஆண்களுக்கு நிகராக பெண்களும் அரசியல் துறையில் முதன்மைப்படுத்தப்படுவதோடு பெண்ணியல்சார் புதிய கோட்பாடுகளும் வலுப் பெறும்.

இராசையா பிருந்தாவதனி
நுவரெலியா

# கிழக்கின் குரல்





அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகா வித்தியாலயத்தின் 2003 உயர்தர மாணவர்களின் பங்களிப்புடன் ஒலுவில் பள்ளக்காட்டிற்கு செல்லும் பிரதான வீதியில் அமைக்கப்பட்ட 13 மின்கம்பத்துடன் இணைந்த தெருவிளக்கு பொதுமக்கள் பாவனைக்காக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அஸ்ஸிராஜ் 2003 கல்வி கற்ற மாணவர்கள் சார்பாக பிரதம ஒருங்கிணைப்பாளராக ஏ.எச்.எம் சிபாஸ் கலந்துகொண்டார். (படம்: திராய்க்கேணி தினகரன் நிருபர்)

## கிண்ணியா, தம்பலகாமம் தபால் ஊழியர்களும் பணிப்பகிஷ்கரிப்பு

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

கிண்ணியா, தம்பலகாமம் தபால் நிலைய ஊழியர்கள் நேற்று (11) காலை முதல் அடையாள வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் தபால் நிலையத்துக்கு வந்த பலர் தமது தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது வீடு திரும்பிச் சென்றனர். பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அஞ்சல் திணைக்கள ஊழியர்கள் நேற்று நள்ளிரவு 12.00 மணி முதல் 48 மணித்தியாலய பணிப் பகிஷ்கரிப்பில் நாடு முழுவதிலும் ஈடுபடவுள்ளனர். அந்தவகையில் அஞ்சல் அலுவலக ஊழியர்களும் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தம்பலகாமம், கல்மெடியாவ, சிராஜ் நகர், முள்ளிப்பொத்தானை, கிண்ணியாபிரதானதபாலகம் உள்ளிட்ட பல உப தபாலகங்கள் மூடப்பட்டிருந்தன.

## கவிதைநூல் வெளியீட்டு விழா

(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

திருகோணமலை நகராட்சி மன்ற பொதுநூலக கேட்போர் கூடத்தில் நீங்களும் எழுதலாம் எஸ்.ஆர்.தனபாலசிங்கத்தின் "ஆடுகளும் ஓநாய்களும்" கவிதை நூல் வெளியீட்டு விழா கவிஞர் க.யோகானந்தன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

## மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மேலும் 4 திடீர் மரண விசாரணை அதிகாரிகள்

(புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு விசேட நிருபர்கள்)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மேலும் 04 புதிய திடீர் மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீதியமைச்சினால் இலங்கையிலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களுக்குமான திடீர் மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மேலும் 04 புதிய திடீர் மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் 40 புதிய திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கான நியமனங்கள் அண்மையில் நீதியமைச்சின் கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுக்கு முன்னாள் தவிசாளர் மகேந்திரன், காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவுக்கு ஓய்வு பெற்ற பொதுச் சுகாதார பரிசோதகர் புஹாரி, மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்கு மன்சூர் மற்றும் கோரளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகப் பிரிவுக்கு பவளகேஸன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 06 மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



தோப்பூர் கோட்டத்துக்குட்பட்ட பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியிலிருந்து இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஏழு மாணவிகள் சித்தியடைந்துள்ளனர். இவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (படம்: தோப்பூர் குறூப் நிருபர்)

## சுகாதார மேம்பாட்டுக்காக உழைப்பதற்கு சகல தரப்பினரும் முன்வரவேண்டும்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சஹிலா இஸ்ஸடீன்

(பாலமுனை விசேட, நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்கள்)

கல்முனை பிராந்திய மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்குவதற்கும் அப்பிராந்திய மக்களின் சுகாதார மேம்பாட்டுக்காக உழைப்பதற்கும் சகல தரப்பினரும் தன்னுடன் கைகோர்த்து செயற்பட வேண்டுமென கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சஹிலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையேற்ற வைத்திய கலாநிதி திருமதி சஹிலா இஸ்ஸடீன் நேற்று உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிகழ்வின்போது உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் உரையாற்றுகையில்,

50க்கும் மேற்பட்ட சுகாதார நிறுவனங்களையும், ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான மக்களை உள்ளடக்கிய ஒரு பொறுப்பு மிக்க நிறுவனமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை காணப்படுகிறது. இப்பிராந்தியத்துக்கான சுகாதார சேவை பணிப்பாளரினால் மாத்திரம் அதை வழங்கிவிட முடியாது. இது ஒரு குழு வேலைத் திட்டமாகும். இக்குழுவிலுள்ள அத்தனை அங்கத்தவர்களும் தங்களுக்குரிய பணிகளை சிறப்பாக செய்வதன் ஊடாகவே சிறந்த சுகாதார சேவையை வழங்க முடியும்.

இது ஒரு சுகாதாரம் சார்ந்த நிறுவனம் என்பதனால் இந்த நிறுவனத்தினுடைய பொறுப்பு, பணி மற்றும் குறிக்கோள் ஆகியன மிகத்தீவிரமாக கண்காணிக்கப்பட வேண்டியதாகவுள்ளது. சிறந்த சேவையினை வழங்குகின்ற இவ்வாறான நிறுவனத்தில் வேலை செய்யும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் முக்கியமான குணாதிசயங்களை கொண்டிருக்க வேண்டும். சுகாதார சேவையானது தியாக மனப்பாங்குடன் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு விடயமாகும்.

சில வேளைகளில் கடமைக்கு மேலதிகமாகவும் பணி செய்ய வேண்டும். யாவற்றையும் புன்முறுவலோடும், தன்னம்பிக்கையுடனும் ஏற்றுக்கொண்டு மிகச்சிறப்பாக செயலாற்றுகின்ற மனப்பக்குவம் சுகாதார துறையினரிடம் காணப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

சம்மாந்துறையில்

## மாணவிகளை வீதிகளில் தொந்தரவு செய்தால் நடவடிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பாடசாலை செல்லும் மாணவிகளை தொந்தரவு செய்பவர்களை கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயலத்தின் ஆலோசனைக்கமைய பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி விஜயவர்த்தன தலைமையிலான விசேட பொலிஸ் குழுக்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பெண் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகள் ஆரம்பமாகும் மற்றும் முடிவடையும் நேரங்களில் இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் மாணவிகளுக்குப் பின்னால் கூட்டமாகச் சென்று தொந்தரவு செய்வதோடு, தொலைபேசியில் புகைப்படம் எடுப்பதாகவும் பெற்றோர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

பெண் பாடசாலைகள் அமையப்பெற்றுள்ள பிரதேசங்களில் குறிப்பாக உள் வீதிகளில், பாடசாலை ஆரம்பிக்கும் முடியும் நேரங்களில் விசேட போக்குவரத்து பொலிஸார் சிவில் உடையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இளைஞர்கள் போக்குவரத்து நடைமுறைகளை மீறி உள் வீதிகளில் மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் பாதுகாப்பு தலைக்கவசம் அணிந்து, சாரதி மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்களை தன் வசம் வைத்திருக்குமாறும் கேட்டுள்ளனர்.

## மனித உரிமைகள் மீறல்களை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் போராட்டம்

(யாழ். விசேட நிருபர் )

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு மாகாண பெண்கள் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் மீறல்களை எதிர்த்து யாழ்ப்பாணத்தில், நேற்றைய தினம் திங்கட்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் ஆகியோருக்கு மகஜரொன்றையும் கையளித்தனர்.

இலங்கையில் மனித உரிமை பாதுகாப்பு இன்மையே இங்கு வாழ்கின்ற மக்கள் என்ற ரீதியில் தொடர்ச்சியாக நாங்கள் எதிர்நோக்கி வருகின்றோம் குறிப்பாக நீரியல்வளங்கள், நிலவளங்கள், சுற்றாடல் போன்ற வள பகிர்வுகளில் அரசாங்கம் மற்றும் மக்களுக்கு இடையிலே உள்ள சமூக ஒப்பந்தம் மீறப்படுவதுடன் அதன் மூலம் மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றது.

அதிலும் வட பகுதியில் தேசிய பாதுகாப்பு என்ற ரீதியில் மக்களின் காணிகள் விடுவிக்கப்படாமை மற்றும் காணி அபகரிப்பு, இராணுவமயமாக்கல், இராணுவ சோதனை தடுப்பு அரண்கள், மக்கள் மீள்குடியேற்றப்படாமை போன்றவற்றால் இங்கு வாழ்கின்ற மக்களாகிய நாம் பெரும் சவாலையே எதிர்நோக்குகின்றோம். தற்காலத்தில் பொருட்களின் விலை அதிகரிப்பு, எரிபொருட்களின் விலை அதிகரிப்பு, சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கை, இந்திய இழுவை மடி எமது கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுகின்றமை, பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரம், போதைப்பொருள் பாவனை, சமூர்த்தி கொடுப்பனவுகள் சரியான முறையில் கிடைக்கப் பெறாமை போன்ற சாவால்களையும் மக்களாகிய நாம் எதிர்நோக்குவதுடன் நாட்டின் பொருளாதார கொள்கை, நாட்டின் புதிய சட்ட மற்றும் சட்ட மூலங்கள் சர்தேச உடன்படிக்கைகள் மூலம் வட பகுதி மக்களாகிய நாம் பல இன்னல்களை எதிர் நோக்குவதாக மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒன்லைன் மூலம் பணத் திருட்டு

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

கிளிநொச்சியில் வசித்துவரும் நபரொருவரின் வங்கி கணக்கிலிருந்து பணம் திருடப்பட்டுள்ளதாக வங்கியிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

தனியார் வங்கியொன்றில் கணக்கு வைத்திருந்ததாக தெரியவருகின்றது.

இந்நிலையில் நீண்டகாலமாக தனது வங்கிக்கணக்கை பராமரிப்பு செய்யாமல் வைத்திருந்துள்ளார்.

இதேவேளை வங்கியால் கொடுத்த ஏ.ரி.எம்.காட்டைக்கூட அவர் பயன்படுத்தவில்லையென தெரியவருகின்றது. அண்மையில் வங்கி கணக்கை சரிபார்த்தபோது அதில் தனது வைப்பிலிருந்த 80 ஆயிரம் ரூபா பணம் ஒன்லைன் மூலம் திருடப்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கின் உதயம்

## மன்னார் 'நியோ ஐஸ் கிறீம்' நிறுவனத்துக்கு சிறந்த உணவு உற்பத்தி சான்றிதழ்

(மன்னார் குறூப் நிருபர்)




வடமாகாண உணவு உற்பத்தி நிறுவனங்களில் சிறந்த உணவு உற்பத்தி சான்றிதழ் (GMP)வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதன்போது மன்னார் மாவட்டம் சார்பாக 'நியோ ஐஸ் கிறீம் நிறுவனம்' மட்டுமே இச்சான்றிதழைப் பெற்றுக் கொண்டுள்ளது.

'நியோ ஐஸ் கிறீம்' நிறுவனத்தின் நிறுவுனர் இம்மானுவேல் கோட்வின் விமல்றாஜ் மற்றும் ஊழியர்களும் கலந்து கொண்டு இச்சான்றிதழை பெற்றுக்கொண்டனர். 'சிறந்த உணவு உற்பத்தி சான்றிதழ்' வடமாகாணத்திலுள்ள 40 உணவு உற்பத்தி நிறுவனங்கள் பெற்றுக் கொண்டுள்ள போதும் மன்னார் மாவட்டத்திலுள்ள எந்த உணவு உற்பத்தியாளர்களும் பெற்றுக்கொள்ளாத இந்த GMP சான்றிதழ் நியோ ஐஸ் கிறீம் நிறுவனத்திற்கு மாத்திரம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரோட்டரி கழக பிரமுகர்கள் வடக்கு விஜயம்

(சாவகச்சேரி விசேட நிருபர்)




ரோட்டரிக் கழக பிரமுகர்கள் அண்மையில் வடக்கு மாகாணத்துக்கு மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தனர். இதன்போது இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான ரோட்டரி மாவட்ட ஆளுநர் ரோட்டரியன் ஜெரோம் ராஜேந்திரம், இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான உதவி மாவட்ட ஆளுநர் ஜோய் பிஜசீலன் மற்றும் ரோட்டரி மாவட்டத்தின் செயலாளர் ரோட்டரியன் ரமணா ஆகியோர் வடக்குக்கான விஜயத்தில் பங்கேற்றிருந்தனர். உத்தியோகபூர்வ விஜயத்தின் போது சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம், யாழ்ப்பாணம், நல்லூர், மன்னார் மற்றும் கிளிநொச்சி நகர் ரோட்டரிக் கழகங்களுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

## யாழ்.நகர பகுதிகளில் அதிகரிக்கும் வழிப்பறிக் கொள்ளை சம்பவங்கள்

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் இரவு வேளைகளில் வழிப்பறி சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.நகரை அண்டிய முட்டாஸ் கடை சந்தி பகுதியில் இரவு வேளைகளில், வீதியில் பயணிப்போரை வழிமறிக்கும் போதை ஆசாமிகள், அவர்களை மிரட்டி, பணப்பையில் (பேர்ஸில்) இருக்கும் பணத்தை கொள்ளையிட்டு செல்கின்றனர்.

காங்கேசன்துறை வீதி, ஸ்ரான்லி வீதி ஆகிய இரு பிரதான வீதிகளும் சந்திக்கும் இப்பகுதியில் மின் விளக்குகள் பொருத்தப்படாமையால், இருளில் மறைந்து இருக்கும் போதை ஆசாமிகள், வீதியில் தனியாக மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் நபர்களை இலக்கு வைத்து வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பணப்பைகளிலிருக்கும் சிறு தொகை பணத்தை மட்டுமே கொள்ளையடித்து வருவதனால், பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்ய பின்னடிக்கின்றனர். இதனால் போதை ஆசாமிகளின் வழிப்பறிக் கொள்ளை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது.

## மன்னாரில் தபால் ஊழியர்கள் இருநாட்கள் பணிப்புறக்கணிப்பு

(மன்னார் குறூப் நிருபர்)



ஒன்றிணைந்த தபால் தொழிற் சங்க முன்னணி 48 மணித்தியால பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளது.

அந்தவகையில் மன்னார் மாவட்டத்திலுள்ள தபாலக ஊழியர்கள் நேற்று காலை முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் இப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர்.

பல்வேறு தேவைகள் நிமிர்த்தம் தபாலகங்களுக்கு வந்த பொதுமக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதை காணமுடிந்தது. நேற்றும் இன்றும் (12) தபாலகங்கள் மூடப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

## கண்டியில் கலை, இலக்கிய, சமூகவியல் ஆளுமைகள் கௌரவிப்பு

# குருத்துவப் பணியில் நீண்டகாலம் சேவையாற்றிய வைத்தியலிங்கம் ஐயருக்கு பல கௌரவ விருது



சங்கவி சினிமா மற்றும் தியேட்டர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மற்றும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் ஊடக அனுசரணையுடன் கலை இலக்கியம் சமூகவியல் சார்ந்த ஆளுமை விருது வழங்கும் வைபவம் கண்டி கெப்பட்டிப் பொல ஞாபகார்த்த மண்டபத்தில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் மத்திய மாகாண சபையின் முதல்வர் சரத் ஏக்கநாயக கலந்து சிறப்பித்தார். இதில் சிறப்பு விருந்தினர்களாக பேராதனை துரை மனோகரன், தேசமானிய பெ. பழனியப்பன், கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் பொருளாளர் மக்கள் மாமணி ஏ. சிவசுப்ரமணியம், மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன், முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் நாடகக் கலைஞர்கள், பாடகர்கள், இசையமைப்பாளர்கள், அறிவிப்பாளர்கள், சமூகப் பணியாளர்கள் என பலர் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் கண்டியைச் சேர்ந்த சமூகத்திற்காகப் பங்காற்றி வருகின்ற திருமதி சந்தர வதனா ரட்ணராஜ குருக்கள் மற்றும் வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். ஏனைய மாவட்டங்களை சேர்ந்தவர்களும் இதில் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் விசேட அம்சமாக குருத்துவப் பணியாளர், சமூகச் செயற்பாட்டாளர், நல்ல சமயக் கிரியைகளை செய் நேர்த்தியுடனும் கடவுள் இறைபக்தியோடும் திறன் படச் செய்யக் கூடியவர். இவர் இத்தகைய பணிகளை நீண்ட காலமாக அயராமல் செய்து வருவதன் காரணமாக கொழும்பிலுள்ள சங்கவி சினிமா மற்றும் தியேட்டர் நிறுவனத்தினர் கண்டியில் நடத்திய ஆளுமை விருது வழங்கும் விழாவில் குருத்துவப் பணியாளர் வைத்தியலிங்கம் ஐயர் ராஜேஸ்வரக்குருக்கள் ஆளுமை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கலாநிதி வைத்தியலிங்கம் ஐயர் ராஜேஸ்வர குருக்கள் இந்தியாவிலுள்ள உலக பல்கலைக்கழகத்தினால் கடந்த ஏப்ரல் 1ஆம் திகதி 2023 கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். பண்டாரநாயக சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற அஹச ஊடக குழுமத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான ஸ்ரீலங்கா டொப் 100 விருது , அப்துல் கலாம் ஞாபகார்த்த அறக்கட்டளை விருது, யூஎன்எச்ஆர்ஓவின் வட மாகாண இந்து கலாசாரப் பணிப்பாளர் விருது பல தரப்பட்ட விருதுகள், பட்டங்கள், சான்றுகள் என்று உயர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறார் என்றால் அவரது சேவையின் அடையாளம் ஆகும்.

தனது சமயச் சடங்கை மிக நேர்த்தியாகச் செய்து வருபவர். தம் குருத்தவ சேவையை தம் பிரதேசத்தில் மட்டுமல்ல நாடு பூராகவும் செய்து வருகின்றார். அதற்காக பல நிறுவனங்கள் அவருடைய உன்னதமான சேவைகளைக் கருத்திற் கொண்டு விருதுகளையும் பட்டங்களையும் வழங்கி அவரை கௌரவப்படுத்தி அவருடைய ஆளுமையின் சிறப்புக்களை பெருமைப்படுத்தி வருகின்றனர்.

சமய சமூகப் பணிகளில் ஈடுபடுவோர் அன்பும் பண்பும், நல்ல உள்ளமும், கருணையும், மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற நல்ல உயர்ந்த மனமும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அதை குருத்துவப் பணியாளர் வைத்தியலிங்கம் ஐயர் ராஜேஸ்வரக்குருக்களிடம் காணலாம்.

ஒரு சமயப் பணியாளின் வரலாறு சாதனைகள், அவன் மனித சமூகத்திற்கு ஆற்றிய, ஆற்றி வருகின்ற பங்களிப்புக்கள் என்பன மறக்கப்படவோ மறைக்கப்படவோ கூடாத தடங்களாகும். அந்த வகையிலேயே எமது சமய குருத்துவப் பணியாளர் வைத்தியலிங்கம் ஐயர் ராஜேஸ்வர குருக்களின் சமயப் பணியின் பெறுமதியினை மதித்து அவருக்கு பெருமை சேர்க்கும் வகையில் அவருக்கு வழங்கப்பட்ட ஆளுமை விருது எமக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.

சமய கிரிகைகளின் மேம்பாட்டுக்கும், பொதுவாக சமூகப் பணிகளுக்கும் இவர் ஆற்றும் பங்களிப்பு அளப்பரியவை. இத்தகைய சிறப்புமிக்க சமய குருத்துவப் பணியாளர் வைத்தியலிங்கம் ஐயர் கண்டியில் சங்கவி சினிமா மற்றும் தியேட்டர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மற்றும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் ஊடக அனுசரணையுடன ஆளுமை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை வரவேற்கத்தக்கதாகும்.

அவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி....

(நேர்காணல் ஜீவராஜ்)

**உங்களுடைய குடும்ப வாழ்க்கை பற்றி கூறுவீர்களா?**

அப்பா வைத்தியலிங்கம் ஐயர். அம்மா காமாட்சியம்மா. பருத்தித்துறை,நெல்லந்தை தும்பளை என்ற இடத்தில் பிறந்தேன். வடமராட்சி கிழக்கு குடத்தனை நாலாம்பனை பிள்ளையார் கோயிலை ஐந்து தலைமுறையாக நாங்கள் நடத்தி வந்தோம். நான் சிவப்பிரகாசம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியினையும் ஆறாம் ஆண்டு முதல் க. பொ. த சாதாரண தரம் வரையிலும் வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்றேன்.

நான் முதன் முதலில் வீட்டுக்கு அருகாமையிலுள்ள கோயிலில் 11 வயதில் பூசைகளைத் செய்யத் தொடங்கினேன். பூசை வழிபாடுகளை குடும்ப ரீதியாகக் கற்றுக் கொண்டு சுமார் பத்து வருடமாகச் செய்தேன். அதே வேளையில் திருநெல்வேலியில் அமைந்துள்ள குருகுலத்தில் கோயில் பணியினைக் கற்றேன். பல கோயில்களில் பூசை செய்துள்ளேன். கொடியேற்றங்கள், கன கோயில்களில் கும்பாபிஷேகங்கள், சமய கிரியைகளைச் செய்து வந்தேன். இதனைக் குறிப்பாக 2008 இல் இருந்து குருத்துவப் பணியினைச் செய்து வருகின்றேன்.

2018 இல் இருந்து கீரிமலையில் அந்தியேட்டி கிரியைகளை இற்றைவரையிலும் செய்து வருகின்றேன். ஒருவர் மரணம் எய்தவுடன் 31 அந்தியேட்டி கிரிகைகளைச் செய்வது வழக்கம். அத்துடன் 2020 களில் இருந்து மரண கிரியைகளும் , செய்து வருகின்றேன். இவை கீரிமலையில் மட்டுமல்ல




இலங்கையிலுள்ள எல்லா மாவட்டங்களுக்கும் சென்று மரணச் சடங்குகளைச் செய்து வருகின்றேன்.

**உங்கள் திருமணம் பற்றிக் கூற முடியுமா?**

2005 இல். நான் திருமணம் செய்தது சொந்த மாமாவின் மகளை. சொந்த மச்சாள். அவர் நடன ஆசிரியை. அவர் பெயர் சாந்தி மதி. வடமராட்சி புலோலி புத்தள மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கின்றார். மூன்று பிள்ளைகள் உள்ளன. மூத்த மகன் விதுரன். இவர் இம்முறை க. பொ. த. சாதாரண தரத்தில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார். அடுத்தது மதுரன். அவருக்கு 13 வயது. அடுத்தது முகிலன். அவருக்கு 9 வயது. மூவரும் கல்வி கற்கின்றார்கள்.

**கொரோனா காலத்தில் எப்படியான சவால்களை எதிர்கொண்டீர்கள்?**

கொரோனா தொற்றுக் காலத்தில் மரண கிரியைகளைச் செய்யும் போது பல்வேறு வகையிலான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மரணம் எய்திய ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர் என்று கூறி சமயக் கிரியைகளில் ஈடுபட்ட என்னையும் எனது குடும்பத்தவர்கள் அனைவரும் சேர்த்து கோப்பாய் கல்வியியல் கல்லூரியில் சுய தனிமைப்படுத்தல் முகாமில் கொண்டு சென்று வைத்து விட்டார்கள். 15 நாள் வரையிலும் அங்கும் இருந்தோம். இதுதான் நான் எதிர் நோக்கிய பிரச்சினை எனக் குறிப்பிடலாம்.

**உங்கள் சமூகப் பணிகள் குறித்து கூறுவீர்களா?**

குருத்துவம் என்பது கூட ஒரு சமூக வேலையாகும். அநாதை ஆசிரமங்களுக்குச் சென்றால் பணம் அறவிடமாட்டேன். சமூகம் எல்லோரும் சேர்ந்து கஷ்டப்பட்டு ஒருவருக்கு கிரியைகள் செய்வார்கள் என்றால் அதற்கு குறைந்த பணம் அறவிடுவேன். போக்குவரத்துச் செலவுக்குரிய பணத்தைத் தவிர மேலதிகமான பணம் எவையும் அறவிடுவதில்லை.

எமது பகுதியிலுள்ள பிள்ளைகளுக்கு ஒவ்வொரு வருடமும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வருகின்றேன். இது எங்கள் பிரதேசத்திலுள்ள எங்களைச் சார்ந்தவர்களுக்கு வழங்கி வருகின்றேன். அவ்வப் போது உதவிகள் கேட்டு வருபவர்களுக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றேன். இத்தகைய குருத்துவப் பணிகளில் ஈடுபடும் போது கட்டாயம் கோயில்களுக்கு உதவி வழங்க வேண்டும். அந்த வகையில் நான் தொடர்ந்து உதவிகள் வழங்கி வருகின்றேன்.


பிள்ளைகளின் கல்விப் பணிக்காக பிரத்தியேகமான நிதி உதவிகளையும் செய்து வருகின்றேன். அவர்களை தனியாகக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் கேட்டதன் காரணமாக இந்த உதவிகளைச் செய்து வருகின்றேன் என்பதற்காக மட்டும் சொல்லுகின்றேன். வெளிப்படையாகச் செய்யும் போது சமூகத்தின் பார்வையில் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது. அதற்காக தனிப்பட்ட ரீதியில் மறைமுகமான முறையில் கொடுத்து வருகின்றேன்.


**இவை தவிர வேறு என்ன பணிகளில் ஈடுபட்டு வருகின்றீர்கள்?**

திருமணத் தரகராக ஈடுபட்டு வருகின்றேன். இவை மூலம் பல திருமணங்களை செய்து வைத்துள்ளேன். இதனைக் கூட ஒரு தொண்டாகச் செய்து வருகின்றேன். இதற்காகப் பணம் அறவிடுவதில்லை. நான் திருமணம் செய்து வைத்த திருமணத் தம்பதிகள் அனைவரும் மிக்க மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் சமூகத்தில் குருத்துவத்தை இருவேறு பிரிவுகளாகப் பார்க்கின்றனர். குறிப்பாக இரண்டு சமயக் கிரியைகளையும் ஒரே குருக்கள் செய்யலாம். இது ஒரு முக்கியமான விடயம். திருமணச் சடங்குகள், ஆலயம் கும்பாவிஷேகங்கள் மகோற்சவம் போன்ற கிரியைகளைச் செய்கின்ற குருவே , அமரக்கிரியையான மரணச் சடங்குகளையும் அந்தியேட்டி கிரிகைகளையும் செய்யலாம். இது சில மக்களுக்குத் தெரியாது. இன்பத்திலும் துன்பத்திலும் மதக் குருக்கள் கலந்து கொள்ளலாம். இதை ஒரு சிலர் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்றனர். இது பற்றிய விழிப்புணர்வு எங்கள் சமூகத்தினர் அறிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது.

அதாவது ஆலய வழிபாடுகளை பூர்வ கிரியை என்பார்கள். இறந்த வீடு அந்தியேட்டி அமர கிரியை என்பார்கள். அமர கிரியை செய்பவர்கள் பூர்வ கிரியைகளைச் செய்யலாம். பூர்வ கிரியைகளைச் செய்பவர்கள் அமர கிரியை செய்யலாம் . இதற்கான விளக்கங்களும் விழிப்புணர்வும் சமூகத்திற்கு மத்தியில் அவசியம் தேவை. எல்லோரும் எல்லாம் செய்யலாம் என்பதுதான் உண்மையும் சரியானதுமாகும். கிரியையில் ஏற்றத் தாழ்வுகள் இல்லை. இன்பத்திலும் கலந்து கொள்ள வேண்டும் துன்பத்திலும் கலந்து கொள்ள வேண்டும். இதுதான் பிரதானமாகும் என்று குருக்கள் தெரிவித்தார்.












# சிறந்த பெறுபேறுகளைப் பெற்று தாருள் உலூம் வித்தியாலயம் சாதனை

## 10 ஆம் வகுப்பு மாணவன் உட்பட மூவருக்கு '9A'





நடந்து முடிந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் மாத்தறை தாருள் உலூம் மகா வித்தியாலய மாணவர்கள் மூவர் 9 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர். பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக ஒரே தடவையில் மூவர் 9ஏ சித்திபெற்றுள்ளமை இதுவே முதற்தடவையாகும்.

முஹம்மத் ஜெஸீர் பாத்திமா சுமையா, ரோஷான் பாத்திமா ரிமாஷா மற்றும் முஹம்மத் ராஸி ரஸீன் அஹமத் ஆகியோரே 9 ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர். இதில் எம்.ஆர். ரஸீன் அஹமட் குறைந்த வயதில் (10 ஆம் வகுப்பு) 9 ஏ சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தவிர எம்.எஸ்.சப்ரா 8 ஏ பெற்றுள்ளதோடு எப்.என்.எப். ஹப்சா, எம்.எப்.எப். நிம்சா ஆகியோர் 6 பாடங்களில் ஏ சித்திபெற்றுள்ளனர்.

இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் உயர் தரம் கற்க தகுதி பெற்றிருப்பதாகவும் இது பாடசாலை கல்வித் துறையில் அடைந்துள்ள முன்னேற்றத்தை காட்டுவதாகவும் பாடசாலை அதிபர் எம்.ரீ.எம். மிப்தாஹ் தெரிவித்தார். இதற்குப் பங்களித்த பிரதி அதிபர் எம். எஸ்.எம். றிஸா, வகுப்பாசிரிய ர்களான ராஜிதீன், எம்.எம்.எப். ஸஹ்லா மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் மற்றும் நலன்விரும்பிகளுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

குறைந்த வயதில் 9 ஏ சித்தி பெற்ற எம்.ஆர். ரஸீன் அஹமட், பிரதி அதிபர் எம்.எஸ்.எம். றிஸாவின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

(பாஹிம்)



கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு மதவாச்சி அல் மதீனா மகா வித்தியாலயத்திலிருந்து தோற்றிய மாணவர்களினுள் '9ஏ' சித்திகளைப்பெற்ற எம்.ஏ.எம். ஆகிப், ஜே.ஜே. சிஹ்னாஸ் ஆகியோருக்கு பாடசாலை அதிபர் எம்.கே. உவைஸ் மாலை அணிவித்து கௌரவித்த போது எடுத்துக்கொண்ட படம்.
(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# அநுராதபுரம் போதனா வைத்தியசாலை கட்டடத்தில் தீ; எவருக்கும் பாதிப்பில்லை

## பொலிஸார் விசாரணைகள் முன்னெடுப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் போதனா வைத்தியசாலை மெத்சிறி செவன கட்டடத்தின் மூன்றாவது மாடியில் நேற்று (11) மதியம் 01 மணியளவில் தீ பரவியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த மாடியில் வதிவிட சிகிச்சை பெற்று வந்த நோயாளர்கள் உடடியாக எவ்வித பாதிப்புக்களுமின்றி பாதுகாப்பாக அகற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் துலான் சமரசிங்க தெரிவித்தார்.

தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு அநுராதபுரம் தீயணைப்பு பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து செயல்பட்டிருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

107
**டொயோட்டா கார்கள் விற்பனைக்கு**

64-6392 TOYOTA COROLLA 1991, CAR அதியுயர் வி லைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 081559

119
**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

DAA-4165 TATA ACE 2014, அதி யுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎ ல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 081561

122
**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

QO-7305 BAJAJ 2008, QF-1668 BAJAJ 2006, THREE WHEELER அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 081560

### வேலைவாய்ப்பு

325
**தொழில்துறை பொது**

சாதாரண பராமரிப்பு நிலையத்திற்கு நோயாளர்களை பார்த்துக் கொள்வதற்கு பயிற்சி பெற்ற/ பெறாத ஆண்/ பெண் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். தினச் சம்பளம் ஒரு நாளைக்கு ரூ. 2000/ = தேவைப்படும் ஆவணங்கள் கிராம அலுவலர் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையுடன் இன்றே அழையுங்கள். 0776315983, 07 66542999, 07 52306797, 0117604526. 080704

**Repeat Your Ad For Better Offers**

தினகரன் வாரமஞ்சரி

# சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு
**330/- ரூபா**

* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) **000000377**

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk


## ரிதியகம சமூக நலன்புரி நிறுவனத்திற்கு காணி சுவீகரித்தல் காணி சுவீகரிப்புச் சட்டம் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

தொடர் இல. DSAM/LAN/08/AQ/20(COM-IV) தடமறிதல் இல: H/AMB/22023/671 இல் அமைந்துள்ள துண்டு அரிச்சுவடி A,B,C,D என்ற காணித் துண்டுகள் அரசிற்கு சுவீகரிக்கப்பட்டுள்ளன. அத்தகவல்கள் 1650/45ம் இலக்கம் மற்றும் 2010.04.23ம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் 1685/22ம் இலக்க மற்றும் 2010.12.23ம் திகதிய உறுதிப்படுத்தப்பட்ட பத்திரத்தின் (Proof) மூலம் திருத்தப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் (பிரசுரிக்கப்பட்ட) 2218/18ம் இலக்க மற்றும் 2021.03.08ம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் iiiம் பிரிவின் உறுதிப்படுத்தப்பட்ட (proof) பத்திரத்தைப் பார்க்கவும்.

**பிரதேச செயலாளர்,**
**அம்பலந்தொட்ட.**

2023 நவம்பர் 22ம் திகதி அம்பலந்தொட்ட பிரதேச செயலகத்தில்....

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

**2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.**

### விலக்களித்தலுக்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) (திருத்தப்பட்ட) பிரிவிற்கமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது இத்தால் அறியச்செய்வது யாதெனில், சக்தி விநியோக அளவுக் குறைவு மற்றும் அவற்றின் வளாகங்களுள் ஓர் எல்லைக்குட்பட்ட விநியோக வலையமைப்பு காணப்படுதல் ஆகியவற்றால், குறித்துரைக்கப்பட்ட/ முறையான வளாகங்களில் மட்டும் மின்சாரத்தை விநியோகித்தல் மற்றும் வழங்கல் ஆகிய நோக்கங்களிற்காக, ஆணைக்குழு கீழ்வரும் அடையாளங்காணப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு விலக்களிக்க உத்தேசித்து உள்ளது என்பதாகும்.

| விண்ணப்ப இல | விண்ணப்பதாரர் | வளாகம் | நுகர்வோரின் இயல்பு |
|---|---|---|---|
| E/AE-D/23/17 | ஓரியன் டவர்ஸ் லிமிடெட் | இல:736, கலாநிதி டானிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09 | வணிகம் |
| E/AE-D/23/23 | இலங்கை நில அபிவிருத்தி கூட்டுத்தாபனம் | லெஷர் பார்க், கெஸ்பேவ வீதி, பொரலஸ்கமுவ | வணிகம் |
| E/AE-D/23/24 | கூட்டு ஆதன முகாமைத்துவ திட்ட இல : 15320 | இல:171/50, ஃபேர்வே காலி, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, நுகடுவ, காலி | குடியிருப்பு |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்ப இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03

திகதி: 2023.12.12

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2023 (2024)

க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை 2024 ஜனவரி மாதம் 04 ஆம் திகதி தொடங்கி 2024 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரையும், நடைபெறும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

இப்பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகளும் நேர அட்டவணைகளும் உரிய பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகளும் நேர அட்டவணைகளும் அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகள் உடனடியாக அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். எக்காரணத்திற்காகவும் தாமதிக்கக்கூடாது என்பதை அறியத் தருகின்றோம்.

இதுவரையும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் www.doenets.lk உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து தமது அனுமதி அட்டைகளை பதிவிறக்கம் செய்துகொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இதுவரையில் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத அல்லது அனுமதி அட்டையை தரவிறக்கம் செய்ய முடியாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தங்களால் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் நிழற்பிரதி அல்லது பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்காக அஞ்சல் அதிபரினால் உறுதிப்படுத்திப் பெற்றுக்கொண்ட கடிதத்துடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு வருகைதரல் வேண்டும்.

அதிபர்கள், தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி அட்டையில் பாடம், மொழிமூலம், பெயர் ஆகியவற்றில் திருத்தங்கள் இருப்பின்,

- ➢ **இம்முறை சகல திருத்தங்களும் நிகழ்நிலை முறைமையூடாக மேற்கொள்வதுடன் அதற்காக https://onlineexams.gov.lk/eic இணையதளத்தினுள் பிரவேசிக்க வேண்டும்.**
- ➢ **ஒரு விண்ணப்பதாரிக்கு இத்திருத்தங்களை ஒரு தடவை மாத்திரமே மேற்கொள்ள முடியும்.**
- ➢ **முறைப்படி பரீட்சித்து உறுதிசெய்யப்பட்ட பெயர் மாற்றங்கள், தேசிய ஆளடையாள அட்டை எண் திருத்தங்கள் மட்டும் தரவுத்தொகுதிகள் இற்றைப்படுத்துவதுடன் உறுதி செய்யப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.**
- ➢ **இப்பரீட்சைக்குரிய பரீட்சை நிலையங்களை மாற்றம் செய்ய முடியாது.**
- ➢ **திருத்தங்களை மேற்கொள்ளும் செயற்பாடுகள் 19.12.2023 நள்ளிரவு 12.00 மணியுடன் நிறைவடைகிறது.**

பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் இப்பரீட்சைக்குச் செல்லுபடியான ஆளடையாள அட்டையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

1. ஒரு பரீட்சார்த்திக்குப் பதிலாக வேறொருவர் தோற்றுதல், குறிப்புக்களை தம்வசம் வைத்துக்கொண்டு விடையளித்தல், மற்றைய பரீட்சார்த்திகளின் உதவியைப் பெறுதல், உதவியளித்தல், பரீட்சை மண்டபத்திலும் அதற்கு வெளியிலும் முறைகேடாக நடந்து கொள்ளல் என்பன பொதுப் பரீட்சைகள் சட்டத்துக்கமைய தண்டனைக்குரிய குற்றமாகும்.
2 இப்பரீட்சையில் கணித்தற் பொறிகள், அழிமை (Correction Fluid) என்பவற்றை உபயோகிப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. எனினும் 33,65,66,67 ஆகிய இலக்கங்களுக்குரிய பாடங்களுக்கு மாத்திரம் நிரற்படுத்தப்படாத சாதாரண கணித்தற் பொறிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
3. தற்போது ஏதாவது அரசாங்கப் பாடசாலையில் கல்வி கற்கும் ஒருவர் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்றுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.
4. பரீட்சை மண்டபத்திற்குள் கையடக்கத் தொலைபேசி, ஸ்மார்ட் கைக்கடிகாரம், இலத்திரனியல் உபகரணங்களை எடுத்துச்செல்லுதல், தம்வசம் வைத்திருத்தல், பயன்படுத்துதல் என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் அவ்வாறான விதிகளை மீறிச்செல்வோர் 1968ஆம் ஆண்டு 25ஆம் இலக்க பொதுப் பரீட்சை சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் கடுமையாக தண்டனை வழங்கப்படும்.

**விசாரணைகள் :**

| | |
|---|---|
| தொலைபேசி எண் | : 011-2784208, 2784537,2785211,2786616 |
| மின்னஞ்சல் முகவரி | : gcealexam@gmail.com |
| தொலைநகல் இலக்கம் | : 011-2784422 |
| தபால் முகவரி | : பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, த.பெ. இல. 1503, கொழும்பு |

**பரீட்சைக் காலம் முழுவதும் 24 மணித்தியாலயங்களும் செயற்படும் அலகு இலக்கங்கள்:**
**0112785211, 0112785212, 0112784208, 0112784537, 0112786616**
**உடனடி அழைப்பு இலக்கம் 1911**

**எச்.ஜே.எம்.சீ. அமீத் ஜயசுந்தர**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்.**

6/3/AL/2023
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பெலவத்த, பத்தரமுல்ல**
2023.12.12ஆம் திகதி

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

**2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.**

### அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் (திருத்தப்பட்ட) இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12(1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") நுகர்வோருக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு பின்வரும் நபர்களுக்கு மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை மேம்படுத்த உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | மின் நிலையம்/ வசதியின் பெயர் | இடம் | திறன் (MW) | தொழினுட்பம் |
|---|---|---|---|---|---|
| E/AL/N/23/38 | எனர்ஜி ரிக்லேமே'ன் பிரைவேட் லிமிடெட் | சிதாகல மினிஹைட்ரோ மின் திட்டம் | உடபலாத, கண்டி | 0.8 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/23/45 | ஹைட்ரோடைனமிக்ஸ் பிரைவேட் லிமிடெட் | கலத ஓயா மினிஹைட்ரோ மின் திட்டம் | வெலேகுபுர, சிதாகல, பலாங்கொட | 1.2 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/23/46 | அக்சஸ் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் | சொரநதோட்டை மினிஹைட்ரோ மின் திட்டம் | சொரநதோட்டை, பதுளை | 2.5 | மினி ஹைட்ரோ |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும்போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03

திகதி: 2023.12.12

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

# பெறுகை அறிவித்தல்

**போதனா வைத்தியசாலை – இரத்தினபுரி**

## 2024/2025ம் ஆண்டிற்கு வைத்தியசாலை உணவகத்தை நடத்திச் செல்வதற்கான கேள்வி கோரல்

மேற்படி சேவையை 2024.03.01 முதல் 2025.02.28 வரை ஒரு வருட காலத்திற்கு நடத்திச் செல்வதற்காக 2024.01.10 மு.ப. 10.30 வரை இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பெறுகை குழுவின் தலைவரால் அனுபவமுள்ள உணவக உரிமையாளர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

02. ரூபா பத்துலட்சம் (ரூ. 1,000,000.00) பெறுமதிக்கு பொது 170 மாதிரியின் செல்லுபடியாகும் சொத்து சான்றிதழின் பிரதியொன்றை மற்றும் ரூபா மூவாயிரம் (ரூ. 3000.00) மீளளிக்கப்படாத கட்டணத்தை இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் காசாளர் அலுவலகத்திற்கு வழங்கிப் பெற்றுக் கொண்ட பொது 172 பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் 2023.12.13ம் திகதி முதல் 2024.01.09 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் தலைமையகத்தில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்த பின்னர் ஒரு கேள்வி ஆவணத்தை மாத்திரம் ஒரு நபருக்கு பெற்றுக் கொள்ளலாம். கேள்விகளை சமர்ப்பிக்கும் போது மீளளிக்கப்படும் ரூ. 50,000.00 கேள்விப் பிணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. சகல கேள்விப் பத்திரங்களும் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படுவதுடன் கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் 2024/2025ம் ஆண்டிற்காக உணவகத்தை நடத்திச் செல்வதற்கான விலைமனுக்கள்"** என்று குறிப்பிட்டு,

தலைவர், பெறுகைக்குழு, போதனா வைத்தியசாலை, இரத்தினபுரி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது வைத்தியசாலையின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம்.

04. 2024.01.10 மு.ப. 10.30 இற்கு இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதி அளிக்கப்படும்.

05. அரச ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

06. குறித்த கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் இல. 045 - 2222261 என்ற தொலைபேசி இலக்கத்தில் விசாரிக்கலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**இரத்தினபுரி.**

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

# கேள்வி அறிவித்தல்

## அகற்றப்படாத கப்பற்சரக்கின் விற்பனை

**கேள்வித் திகதி: 2023.12.20 ஆம் திகதியன்று**
**கேள்வி இலக்கங்கள்.: 455 மற்றும் 455-ஏ**

கொழும்புத் துறைமுகத்திலுள்ள களஞ்சியசாலைகள் மற்றும் திறந்தவெளிகளிலுள்ள பின்வரும் கப்பற் சரக்கை கொள்வனவு செய்து மற்றும் அகற்றுவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் அழைக்கப்படுகின்றன.

**கேள்வி இல.: 455**

| Vehicles | Used Wood Planning | Non-woven Cloth |
|---|---|---|
| Canola Oil | Wheat Flour | Nutmeg Powder, Cinnamon Powder, Black Pepper Powder |
| Gas Stove | Stand Fan | Toughened Glass |
| Secondary Interior Doors | Empty Tin | Solar & Wind Powder System |
| Polypropylene moplen | Bicycles | Ivory Board |
| Tyres (Bra Dow Ice) | Lithium Batteries | Kerosene stove |
| Chocolate | Betel Nut | Other Merchandise etc |

**கேள்வி இல.: 455-ஏ**

| Electrical Accessories | Household Items | Garment |
|---|---|---|
| Fish Oil, Multi Vitamin, Hair Skin & Nails | Covered Yarn | Electric Motor Cycles |
| Power Generator | Horse Feeds | Used MachineryFabric |
| Tile Grout | Wall putty | Fabric |
| Motor Spare Parts | Food Items | Wall Socket |
| Real Blend | Tripods Camera Caps | Other Merchandise etc., |

2023.12.12 ஆம் திகதியன்று மு.ப. 10 மணியிலிருந்து 2023.12.19 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் வேலை நாட்களில் 455 ஆம் இலக்க கேள்வியின் கீழுள்ள அம்சங்களுக்காக 5,000 ரூபா (மற்றும் பெசேவ மற்றும் SSCL) மற்றும் 1,000 ரூபா மீளளிக்கப்படும் வைப்புத் தொகையையும் 455 ஆம் இலக்க கேள்வியின் கீழுள்ள அம்சங்களுக்காக மீளளிக்கப்படும் கட்டணமாக 1000 ரூபா (மற்றும் பெசேவ மற்றும் SSCL) மற்றும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக முறையே 50,000 ரூபா, 200,000 ரூபா அல்லது 500,000 ரூபா ஆகியவற்றை உங்கள் முன்வைப்புக்களுக்கமைவாக ஏற்புடையதாகவாறு செலுத்திய பின்னர், கொழும்பு-01, லோட்டஸ் வீதி, 15 ஆம் இலக்கத்திலுள்ள கெனல் திறந்தவெளியின் One-Stop ஆவணமாக்கல் நிலையத்தின் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் லொஜிஸ்டிக்ஸ் பிரிவு, விற்பனை பிரிவின் அலுவலகத்திலிருந்து கேள்விப் பட்டியல்களை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு **www.slpa.lk** என்ற இணையத்தை பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்),**
12.12.2023

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல. 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**

# அரசாங்க அச்சுத் திணைக்களம்

## விற்பனைக்கான விலைமனுக் கோரல்

N-111 **பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட அஸ்கொன் காகிதம் (வெள்ளை மற்றும் கலவை) மற்றும் அட்டைத்தாள் மற்றும் மற்றைய நீக்கப்பட்ட தாள்களின் விற்பனை**

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட அஸ்கொன் காகிதம் (வெள்ளை மற்றும் கலவை) மற்றும் அட்டைத்தாள் மற்றும் மற்றைய நீக்கப்பட்ட தாள்களின் விற்பனைக்காக பகிரங்க விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இதற்காக 2023.12.12 ஆம் திகதி தொடக்கம் 2024.01.01 ஆம் திகதி வரை விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும். இதற்காக விலைமனுக்களை சமர்ப்பிக்க முடிவது காகித நேரடி ஏற்றுமதியாளர் ஒருவராக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மற்றும் இலங்கைக்குள் காகித உற்பத்தியாளர்களுக்கு மாத்திரமாகும்.

குறித்த விண்ணப்பங்களை 2023.12.12 ஆம் திகதி தொடக்கம் 2024.01.01 ஆம் திகதி வரை பி.ப. 2.00 வரை வார நாட்களில் கடமை நேரத்தில் ஒரு விண்ணப்பப் படிவத்திற்கு 250.00 ரூபா கட்டணம் வீதம் செலுத்தி அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வேறு வழங்கல் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

அனைத்து விண்ணப்பங்களும் 2024.01.02ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது திணைக்களத்தின் வேறு வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும் என்பதோடு, 2024.01.02 ஆம் திகதி பி.ப. 2.00க்கு மேற்கூறிய அலுவலகத்தில் குறித்த விலைமனுக்கள் திறக்கப்படும்.

விண்ணப்பங்களை இடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுதாரர்கள் மூலம் ''நீக்கப்பட்ட அஸ்கொன் காகிதம் (வெள்ளை மற்றும் கலவை) மற்றும் அட்டைத்தாள் மற்றும் மற்றைய நீக்கப்பட்ட தாள்களின் கொள்வனவு 2024'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

மேலுள்ள வேலைக்காக வைப்புச் செய்ய வேண்டிய விலைமனுப் பிணையின் பெறுமதி கீழுள்ளவாறு அமையும் என்பதோடு, அந்த விலைமனுப் பிணையை பணமாக அரசாங்க அச்சுத் திணைக்களத்திற்கு வைப்புச் செய்து குறித்த பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை குறித்த விலைமனுவுடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலை | விலைமனுப் பிணையின் பெறுமதி |
|---|---|
| பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட அஸ்கொன் காகிதம் (வெள்ளை மற்றும் கலவை) மற்றும் அட்டைத்தாள் மற்றும் மற்றைய நீக்கப்பட்ட தாள்களின் விற்பனை | ரூபா 75,000.00 |

மேலுள்ள வேலை தொடர்பில் மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 4.15 வரை தொலைபேசி இலக்கம் 011 2673311 இனை அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இலக்கம் 118, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 08.**
**2023.12.08**

தொலைபேசி – 011 2673311
தொலைநகல் - 011 2671922
இணையதளம் - www.documents.gov.lk

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ கருத்திட்டம் (CRIWMP)

CRIWMP

## நீர்ப்பாசன அமைச்சு

### (தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்)

**IFB No.: CRIWMP/PMU/PROC/2023/GOODS/16**
**திகதி: 2023.12.12**

**SUPPLY & DELIVERY OF SOLAR SYSTEM WITH WATER PUMP, SHALLOW WELL (MULTI USERS) – 03 UNITS FOR TRINCOMALEE (GOMARANKADAWALA, MORAWEWA AREAS) & PORTABLE SOLAR POWERED WATER PUMPING SYSTEMS FOR MULTI USERS 08 UNITS – (TRINCOMALEE – 04, MANNAR - 01 & ANURADHAPURA - 03)**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது UNDP இன் தரஅங்கீகாரம் பெற்ற முகவராண்மையுடன் பசுமை காலநிலை நிதியத்திலிருந்து காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ கருத்திட்டத்திற்கான ஆகுசெலவிற்காக நிதியமொன்றைப் பெற்றுள்ளதுடன் இந்த நிதியத்தின் பகுதியொன்று மேலேயுள்ள வழங்கலின் உரித்தான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடப்படும்.
2. SOLAR SYSTEM WITH WATER PUMP, SHALLOW WELL (MULTI USERS) – 03 UNITS FOR TRINCOMALEE (GOMARANKADAWALA, MORAWEWA AREAS) & PORTABLE SOLAR POWERED WATER PUMPING SYSTEMS FOR MULTI USERS 08 UNITS – (TRINCOMALEE – 04, MANNAR-01 & ANURADHAPURA -03) ஆகியவற்றின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ கருத்திட்ட பணிப்பாளர் கருத்திட்ட பெறுகைக் குழுவின் தலைவரின் சார்பாக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. SOLAR SYSTEM WITH WATER PUMP, SHALLOW WELL (MULTI USERS) – 03 UNITS FOR TRINCOMALEE (GOMARANKADAWALA, MORAWEWA AREAS) & PORTABLE SOLAR POWERED WATER PUMPING SYSTEMS FOR MULTI USERS 08 UNITS – (TRINCOMALEE – 04, MANNAR-01 & ANURADHAPURA -03) ஆகியவற்றின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தலானது கேள்வியை வழங்கும் திகதியிலிருந்து மூன்று மாதங்களில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
4. விலைமனுக்கள் முதலில் ஆழமாக விலைமனுக்கோரல் ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு தகவுத்திறன் மற்றும் செயன்முறை ஆகியவற்றிற்கமைவாக மதிப்பீடு செய்யப்படுமென்பதுடன் அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட விலைமனுக்கள் போதுமானளவு பதிலிறுக்கக்கூடிய மதிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த விலைமனுவை நிர்ணயிப்பதற்காக ஒப்பீடு செய்யப்படும்.
5. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 0112672223 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் tendercriwmp@gmail.com என்ற மின்னஞ்சலூடாகவும் நீர்ப்பாசன அமைச்சு, CRIWMP, கருத்திட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
7. 2023.12.12 ஆம் திகதியிலிருந்து 2024.01.03 ஆம் திகதியன்று வரையும் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 4,000 இலங்கை ரூபாவைச் செலுத்திய பின்னர், வழங்குநரின் வர்த்தக தலைப்புக்கடிதத்தில் (மூலப்பிரதி) வியாபார பதிவுச் சான்றிதழுடன் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைக் கருத்திட்ட பணிப்பாளர், CRIWMP அலுவலகம், நீர்ப்பாசன அமைச்சு, 12 ஆம் மாடி, இல. 500, T.B. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலம் அந்த அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.
8. விலைமனுக்கள் அவைகளை திறந்த பின்னர் 60 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் (விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் காலமானது 88 நாட்கள்) விலைமனுப் பிணையானது கருத்திட்டப் பணிப்பாளர், CRIWMP, நீர்ப்பாசன அமைச்சு என்ற பெயரில் வழங்கப்பட்டதாகவும் 400,000 ரூபா பெறுமதியான விலைமனு உத்தரவாதத்துடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு உத்தரவாதமானது நிபந்தனையற்ற உத்தரவாதமாகவும் இலங்கை மத்திய வங்கியினால் / இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் / காப்புறுதி கம்பனியொன்றினால் ( வரையறுக்கப்பட்ட கூட்டுறவு காப்புறுதி கம்பனி நீங்கலானது) விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கு அமைவாகவுமிருத்தல் வேண்டும்.
9. விலைமனுதாரரானவர் விலைமனுவின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை இரு உள்ளக தனித்தனியான தபாலுறைகள் மற்றும் ஒரு வெளியக தபாலுறையில் சேர்க்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் விலைமனு இலக்கம் தெளிவாக குறிப்பிடப்பட்டு உள்ளக தபாலுறையில் உரிய முறையில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்படல் வேண்டும்.
10. 2024.01.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் கருத்திட்ட பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம் அல்லது கருத்திட்ட பணிப்பாளரின் அலுவலகத்தை வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் பெற்றுக் கொண்ட விலைமனுக்கள் 7 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் அவைகளை மூடும் நேரத்தின் பின்னர் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
11. விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் மற்றும் செலவினங்களுக்கு கொள்வனவுக்காரர் பொறுப்பேற்க மாட்டார்.

**தலைவரின் சார்பாக,**
**கருத்திட்ட பெறுகைக் குழு,**
**கருத்திட்டப் பணிப்பாளர்,**
**காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ கருத்திட்டம்,**
**நீர்ப்பாசன அமைச்சு,**
**12 ஆம் மாடி, இல. 500, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10.**

# கொழும்பு மாநகர சபை

## 2024ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டம்

### மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252ஆம் அத்தியாயம்) 212(ஆ) ஆவது பந்தியின் கீழான அறிவித்தல்

கொழும்பு மாநகர சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தை பொது மக்களின் பரிசீலனைக்காக 2023 டிசம்பர் மாதம் 13ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 19 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தினுள் கொழும்பு மாநகர சபையின் நகர மண்டப வளாகத்தில் அமைந்துள்ள மாநகர பொருளாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தருகின்றேன்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**கொழும்பு மாநகர சபையின்,**
**மாநகர ஆணையாளரும்,**
**சபையின் அதிகாரங்களை,**
**வேலைகளை மற்றும் கடமைகளை**
**அமுல்படுத்தும் அதிகாரியும்**
**கொழும்பு மாநகர சபை**

**மாநகர ஆணையாளர் அலுவலகம்,**
**நகர மண்டபம்,**
**கொழும்பு 07.**

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.**

**நிரந்தர மேலதிகப்பற்று வசதி இல.80372493.**

**கடன் வசதி தொடர்பு இல.** 80993393,81009277, 81552809, 82826794, 83657242, 86403112, 86403118, 86403134, 86403141, 88250630, 88255046, 88255063, 88255270,

மாத்தளை, வரகாமுர, வாரகந்த எஸ்டேற், இல.07 இல் அமைந்த மாம் பிஸ்கட் லங்கா பிரைவேற் லிமிடெட் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2023 நவம்பர் 17 ஆம் திகதி 2359 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023 நவம்பர் 15 ஆம் திகதி புதன்கிழமை தினகரன், தினமின, மற்றும் டேய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2023 டிசெம்பர் 28ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை.**

1 மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டம் மாத்தளை தெற்கு உக்குவெல பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகப் பிரிவில் கொஹொனசியபற்றுவ இல.E346A பஹலவெல கிராம சேவகர் பிரிவில் பஹலவெலயில் அமைந்த உடகடுவ சிங்கமுணி கெதர வத்த, பத்தேகெதர வத்த, ஏதுனு பில்லாவ, (வரைபடத்தின் படி உடகொடுவ சிங்கமுனிகெதர வத்த, பத்தேகெதரவத்த, மற்றும் ஏதுன்னே பில்லாவ) என அழைக்கும் காணியிலிருந்து மாத்தளை உத்தரவு பெற்ற நில அளவையாளர் M. ராஜசேகரன் தயாரித்த 2013.07.24 திகதியிட்ட வரைபடம் இல.8499 இல் விபரித்த பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணி வடகிழக்கில் பிரதேச சபை பாதையும், வஸீரா, சித்தி சாஹிரா, மற்றும் சமீன், ஆகியோரின் காணியை பிரிக்கும் கினிசீரியா வேலியும், கிழக்கில் ஜாபர் என்பவரின் காணியை(வரைபடத்தின் பிரகாரம் வஸீரா, சித்தி ஸாஹிரா, சமீன், மற்றும் ஜாபர் ஆகியோரின் காணி) பிரிக்கும் கினிசீரியா வேலியும், தெற்கில் பிரதேச சபை பாதையும் மேற்கில் ஹமீட் ஹாஜியார் மற்றும் சேமன் ஹாஜியார் ஆகியோருக்கு சொந்தமான அரிசி ஆலைக் காணியும், வடமேற்கில் மஹரூப் ஹாஜியாருக்குச் சொந்தமான அரிசி ஆலையை பிரிக்கும் உயிர் வேலியும் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடத்தின் படி இரண்டு ஏக்கர்கள், மூன்று றூட்கள் நான்கு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சுகள் (ஏ.2.றூ.3.பே.4.25) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மாத்தளை காணிப்பதிவகத்தில் பக்கம் F84/76 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணி கீழே விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டம் மாத்தளை தெற்கு உக்குவெல பிரதேச செயலகப் பிரிவு மற்றும் உக்குவெல பிரதேச சபை எல்லைகளுள் உக்குவெல கொஹான்சியபற்று இல. E346A பஹலவெல கிராம சேவகர் பிரிவில் பஹலவெலயில் அமைந்த உடகடுவ சிங்கமுணி கெதர வத்த, பத்தேகெதர வத்த, ஏதுனு பில்லாவ, (வரைபடத்தின் படி உடகொடுவ சிங்கமுனிகெதர வத்த, பத்தேகெதரவத்த மற்றும் ஏதுன்னே பில்லாவ) என அழைக்கும் காணியிலிருந்து (மாத்தளை உத்தரவு பெற்ற நில அளவையாளர் M ராஜசேகரன் தயாரித்த 1991.06.28 திகதியிட்ட வரைபடம் இல. 2046 இல் காணித்துண்டு 01 என விபரித்த எல்லை நிர்ணயித்த காணி மேலே காட்டப்பட்ட காணி) மாத்தளை உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.ரஞ்சாகொட தயாரித்த 1991.10.06 திகதியிட்ட வரைபடம் இல.2732 இல் விபரித்த பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு வடக்கில் கம்பி வேலியும் கிராம சபை பாதையும் வரைபடம் இல.2046 இல் காணித்துண்டு 02 மற்றும் 03உம் கிழக்கில் குடியமைப்புக் காணியின் கம்பி வேலியும் காணித்துண்டு 4 மற்றும் எம்.ஏ.சி ஹுசார்தீன் உரிமை கோரும் காணியும் தெற்கில் பாதையும் மேற்கில் எச். எச்.எம் ஹனுன் உரிமை கோரும் காணியின் உயிர் வேலியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடத்தின் பிரகாரம் இரண்டு ஏக்கர்கள் மூன்று றூட்கள் பன்னிரெண்டு தசம் ஐந்து பேர்ச்சுகள் (ஏ.2, றூ.3. பே.12.5) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள், மற்றும் சகலதும் ஆகும்.

**1. பணம் செலுத்தும் முறை.**

விலைக்கு வாங்குபவர் ஏல விலை கூறல் வெற்றியடைந்ததும் பணத்தை பின்வருமாறு செலுத்த வேண்டும்.

1.1 வாங்குபவர் கொள்வனவு விலையில் 10% (பத்து சதவீதம்) உடனே செலுத்த வேண்டும்.
1.2 வற் (VAT) கட்டணம். (ஏற்புடையதாயின்)
1.3 விற்பனை வரி விதிப்பனவாக உள்ளூராட்சி அதிகார சபைக்கு 1% (ஒரு சதவீதம்) செலுத்த வேண்டும்.
1.4 ஏலதார தரகுக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளாக 2.5% (2.5 சதவீதம்) செலுத்த வேண்டும்.
1.5 ஏற்புடையதாயின் விற்பனை செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள்.
1.6 ஏனைய கட்டணங்கள் மற்றும் செலவுகள்.

மேலும் கொள்வனவு விலையில் 10% ஐ ஏல விற்பனைத் திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அத்துடன் விற்பனைத் தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் கொள்வனவு விலையில் மீதி 80% ஐ செலுத்த வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக முத்திரைக்கட்டணம் மற்றும் நொத்தாரிஸ் கட்டணம், விற்பனை நிபந்தனைகள் மற்றும் விற்பனைச் சான்றிதழ் அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ஆகியவற்றை செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்க மறுப்பின் ஏல விலை கூறிய தினத்தில் கொள்வனவாளர் செலுத்திய சகல பணங்களையும் பறிமுதல் செய்யும் அதிகாரமும் ஆதனத்தை மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரமும் வங்கிக்கு உண்டு.

**2. ஆதனத்தை நோக்கிச் செல்லும் வழி முறை.**

கண்டி நகரிலிருந்து அக்குரணை, கட்டுகஸ்தோட்டை நகரங்கள் ஊடாக மாத்தளை ஏ 9 பாதையில் வரக்காமுர பஸார் வரை 22கி.மீ. பயணித்து இடப்பக்கமாக திரும்பி நொரிடெக் போசிலேன் தொழிற்சாலைப் பாதையில் 300 மீற்றர் முன்னோக்கிச் சென்றதும் காணிக்கான பிரவேசப்பாதை சட்டரீதியான மோட்டார் போக்குவரத்துப் பாதையை எதிர்நோக்கியதாக அமைந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட ஆதனங்கள் சம்பந்தமான உரித்துரிமை உறுதிகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் ஏலவிலை கூறுவோர் சுதந்திரமாக பரீட்சிப்பதற்கு தொ.பே.இல. 081-2499398 ஊடாக கட்டுகஸ்தோட்டைக் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பரீட்சிக்கலாம்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**இலங்கை வங்கி,**
**கட்டுகஸ்தோட்டைக் கிளை**

**எஸ்.எம்.ஆர்.எஸ். யாப்பா பண்டார**
**கிளை முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

## ஏலவிற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.**

கடன் வசதி தொடர்பு இல.82333051,86403067, மற்றும் 88255200.

மாத்தளை, வரகாமுர, வாரகந்த எஸ்டேட், இல.07 இல் அமைந்த மாம் பிஸ்கட் லங்கா பிரைவேற் லிமிடெற் ஈடு வைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2023 நவம்பர் 17 ஆம் திகதி 2359 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023 நவம்பர் 15 ஆம் திகதி புதன்கிழமை தினகரன், தினமின மற்றும் டேய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு துசித்த கருணாரத்ன அவர்கள் 2023 டிசெம்பர் 28ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை.**

1.மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டம் மாத்தளை தெற்கு கொஹொன சியபத்துவ மாத்தளை பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் இல. E346A பஹலவெல கிராம சேவகர் பிரிவில் பஹலவெலயில் அமைந்த உடகடுவ சிங்க முணி கெதர வத்த, பத்தேகெதர வத்த, ஏதுனு பில்லாவ, (வரைபடத்தின் படி உடகொடுவ சிங்கமுனி கெதர வத்த, பத்தே கெதரவத்த, மற்றும் ஏதுன்னே பில்லாவ) என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் HHMTR விஜேரத்ன தயாரித்த 2014.05.04 திகதியிட்ட வரைபடம் இல. 2816 இல் விபரித்த காணித்துண்டு 2 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு அதாவது காணித்துண்டு 2 வடக்கில் வரைபடம் இல.8391 இல் காணித் துண்டு Aஉம் அதே காணியின் மீதிப்பாகமும் கிழக்கில் கிராமத்திலிருந்து கண்டி மாத்தளை பாதை வரை கிராம சபை பாதையும், தெற்கில் காணித்துண்டு 3உம் மேற்கில் காணித்துண்டு1 உம் எல்லைகளாகக் கொண்டு பதினைந்து பேர்ச்சுகள் (ஏ.0,றூ.0.பே.15) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும்.

2.மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டம் மாத்தளை தெற்கு கொஹொன சியபத்துவ மாத்தளை பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் இல. E346A பஹலவெல கிராம சேவகர் பிரிவில் பஹலவெலயில் அமைந்த உடகடுவ சிங்க முணி கெதர வத்த, பத்தேகெதர வத்த, ஏதுனு பில்லாவ, (வரைபடத்தின் படி உடகொடுவ சிங்கமுனிகெதர வத்த, பத்தேகெதரவத்த, மற்றும் ஏதுன்னே பில்லாவ) என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் HHMTR விஜேரத்ன தயாரித்த 2014.05.04 திகதியிட்ட வரைபடம் இல.2816 இல் விபரித்த காணித்துண்டு 3 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு 3 மேற்கூறிய வரைபடத்தின் பிரகாரம் வடக்கில் காணித்துண்டு 2 உம் கிழக்கில் கிராமத்திலிருந்து கண்டி மாத்தளை பாதை வரை பாதையும் (பி.ச), தெற்கில் காணித்துண்டு 3உம் அதே காணியின் மீதிப்பாகமும், மேற்கில் காணித்துண்டு 1உம் எல்லைகளாகக் கொண்டு பதினைந்து பேர்ச்சுகள் (ஏ.0. றூ.0, பே.15) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும்.

3. மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டம் மாத்தளை தெற்கு கொஹொன சியபத்துவ மாத்தளை பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் இல. E346A பஹலவெல கிராம சேவகர் பிரிவில் பஹலவெலயில் அமைந்த உடகடுவ சிங்க முணி கெதர வத்த, பத்தேகெதர வத்த, ஏதுனு பில்லாவ, (வரைப்படத்தின் படி உடகொடுவ சிங்கமுனிகெதர வத்த, பத்தேகெதரவத்த, மற்றும் ஏதுன்னே பில்லாவ) என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் HHMTR விஜேரத்ன தயாரித்த 2014.05.04 திகதியிட்ட வரைபடம் இல. 2816 இல் விபரித்த காணித்துண்டு 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு 1 மேற்கூறிய வரைப்படத்தின் பிரகாரம் வடக்கில் அதே காணியின் பகுதியும் வரைபடம் இல. 8391 இல் காணித்துண்டு A உம், கிழக்கில் காணித்துண்டு 2,3 உம், தெற்கில் அதே காணியின் மீதிப்பாகமும், மேற்கில் GNMM பளீல் மற்றும் GNMM நஸார்தீன் உரிமை கோரும் அதே காணியின் பகுதியும் எல்லைகளாகக் கொண்டு பத்து பேர்ச்சுகள்(ஏ.0, றூ.0, பே.10) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும்.

**மேற்குறிப்பிட்ட காணிகள் கீழ் குறிப்பட்ட காணிகளின் மீளளவை ஆகும்.**

1. மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டம் மாத்தளை தெற்கு கொஹொன சியபத்துவ மாத்தளை பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் இல. E346A பஹலவெல கிராம சேவகர் பிரிவில் பஹலவெலயில் அமைந்த உடகடுவ சிங்கமுணி கெதர வத்த, பத்தேகெதர வத்த, ஏதுனு பில்லாவ, (வரைபடத்தின் படி உடகொடுவ சிங்கமுனிகெதர வத்த, பத்தேகெதர வத்த, மற்றும் ஏதுன்னே பில்லாவ) என அழைக்கும் காணியிலிருந்து மாத்தளை உத்தரவு பெற்ற நில அளவையாளர் A .S. M அஸ்வாட் தயாரித்த 2003.02.15 திகதியிட்ட வரைபடம் இல.8391 இல் விபரித்த காணித்துண்டு B1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு B1 மேற்கூறிய வரைபடத்தின் பிரகாரம் வடக்கில் அதே வரைபடத்தில் காணித்துண்டு A உம், கிழக்கில் கிராம சபை பாதையும், தெற்கிலும் மேற்கிலும் அதே வரைபடத்தில் காணித்துண்டு B3உம் எல்லைகளாகக் கொண்டு பதினைந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே. 15) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மாத்தளை காணிப்பதிவகத்தில் F82/04 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2.மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டம் மாத்தளை தெற்கு கொஹொன சியபத்துவ மாத்தளை பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் இல. E346A பஹலவெல கிராம சேவகர் பிரிவில் பஹலவெலயில் அமைந்த உடகடுவ சிங்கமுனி கெதர வத்த, பத்தேகெதர வத்த, ஏதுனு பில்லாவ, (வரைபடத்தின் படி உடகொடுவ சிங்கமுனிகெதர வத்த, பத்தேகெதர வத்த, மற்றும் ஏதுன்னே பில்லாவ) என அழைக்கும் காணியிலிருந்து மாத்தளை உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.S.M. அஸ்வாட் தயாரித்த 2003.02.15 திகதியிட்ட வரைபடம் இல. 8391 இல் விபரித்த காணித்துண்டு B2 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு B2 மேற்கூறிய வரைபடத்தின் பிரகாரம் வடக்கில் அதே வரைபடத்தில் காணித்துண்டு B3 உம், கிழக்கில் கிராம சபை பாதையும், தெற்கில் அதே காணியின் மீதிப்பாகமும் மேற்கில் அதே வரைபடத்தில் காணித்துண்டு B3 உம் எல்லைகளாகக் கொண்டு பதினைந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.15) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மாத்தளை காணிப்பதிவகத்தில் F82/02 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3.மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டம் மாத்தளை தெற்கு கொஹொன சியபத்துவ மாத்தளை பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் இல.E346A பஹலவெல கிராம சேவகர் பிரிவில் பஹலவெலயில் அமைந்த உடகடுவ சிங்கமுனி கெதர வத்த, பத்தேகெதர வத்த, ஏதுனு பில்லாவ, (வரைபடத்தின் படி உடகொடுவ சிங்கமுனிகெதர வத்த, பத்தேகெதர வத்த, மற்றும் ஏதுன்னே பில்லாவ) என அழைக்கும் காணியிலிருந்து மாத்தளை உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.S.M. அஸ்வாட் தயாரித்த 2003.02.15 திகதியிட்ட வரைபடம் இல. 8391 இல் விபரித்த காணித்துண்டு B3 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு B3 மேற்கூறிய வரைபடத்தின் பிரகாரம் வடக்கில் அதே வரைபடத்தில் காணித்துண்டு A உம், கிழக்கில் காணித்துண்டு B1, B2 மற்றும் கிராம சபை பாதையும், தெற்கில் அதே காணியின் காணித்துண்டு B2 அதே காணியின் மீதிப்பாகமும் மேற்கில் அதே காணியின் மீதிப்பாகமும் எல்லைகளாகக் கொண்டு பத்து பேர்ச்சுகள் (ஏ.0.றூ.0, பே.10) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மாத்தளை காணிப்பதிவகத்தில் F82/03 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**1. பணம் செலுத்தும் முறை.**

விலைக்கு வாங்குபவர் ஏல விலை கூறல் வெற்றியடைந்ததும் பணத்தை பின்வருமாறு செலுத்த வேண்டும்.

1.1 வாங்குபவர் கொள்வனவு விலையில் 10% (பத்து சதவீதம்) உடனே செலுத்த வேண்டும்.
1.2 வற் (VAT) கட்டணம்.(ஏற்புடையதாயின்)
1.3 விற்பனை வரி விதிப்பனவாக உள்ளூராட்சி அதிகார சபைக்கு 1% (ஒரு சதவீதம்) செலுத்த வேண்டும்.
1.4 ஏலதார தரகுக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளாக 2.5% (2.5 சதவீதம்) செலுத்த வேண்டும்.
1.5 ஏற்புடையதாயின் விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள்.
1.6 ஏனைய கட்டணங்கள் மற்றும் செலவுகள்.

மேலும் கொள்வனவு விலையில் 10% ஐ ஏலவிற்பனைத் திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அத்துடன் விற்பனைத் தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் கொள்வனவு விலையில் மீதி 80% ஐ செலுத்த வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக முத்திரைக்கட்டணம் மற்றும் நொத்தாரிஸ் கட்டணம், விற்பனை நிபந்தனைகள் மற்றும் விற்பனைச் சான்றிதழ் அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ஆகியவற்றை செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்க மறுப்பின் ஏலவிலை கூறிய தினத்தில் கொள்வனவாளர் செலுத்திய சகல பணங்களையும் பறிமுதல் செய்யும் அதிகாரமும் ஆதனத்தை மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரமும் வங்கிக்கு உண்டு.

**2. ஆதனத்துக்கான பிரவேச வழி.**

கண்டி நகரிலிருந்து அக்குரணை நகரம் ஊடாக மாத்தளை ஏ 9 பாதையில் வரக்காமுர பஸார் வரை சுமார் 21 1/2 கி.மீ தூரம் பயணித்து எஸ்.பி. யாலேகம மாவத்தைக்கு இடப்பக்கமாக திரும்பி சுமார் 300 மீற்றர் பயணித்து உடுபில்லாவைக்குச் செல்லும் பாதைக்கு வலப்பக்கமாக திரும்பி சுமார் 350 மீற்றர் பயணித்து நொரிடெக் தொழிற்சாலை நிலமனை முடிவடையும் போது காணப்படும் சந்தியை அடைந்ததும் சரளைகல் பாதைக்கு (பொரல் பாதை) இடப்பக்கமாக திரும்பி சுமார் 20 மீற்றர் சென்றதும் மதிப்பிட வேண்டிய காணியை அடையலாம். இக்காணிக்கு முன் புறத்தில் இடப்பக்கமாக நேராக தெளிவான சட்டரீதியான மோட்டார்வாகன போக்குவரத்துப் பாதை உண்டு.

“மேற்குறிப்பிட்ட ஆதனங்கள் சம்பந்தமான உரித்துரிமை உறுதிகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் ஏலவிலை கூறுவோர் சுதந்திரமாக பரீட்சிப்பதற்கு தொ.பே.இல. 081-2499398 ஊடாக கட்டுகஸ்தோட்டைக் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பரீட்சிக்கலாம்”.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**எஸ்.எம்.ஆர்.எஸ். யாப்பா பண்டார**
**கிளை முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**கட்டுகஸ்தோட்டைக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு உலக வங்கி தூதுக்குழு பாராட்டு

## அமைச்சால் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு உலக வங்கியின் ஒத்துழைப்பு தொடரும் எனவும் உறுதி





இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள உலக வங்கியின் பிரதானிகளுள் ஒருவரான சரோஜ் குமார் ஜா தலைமையிலான தூதுக்குழுவினர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானை நேற்று (11.12.2023) சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

கொழும்பு, கொள்ளுபிட்டியில் உள்ள அமைச்சில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, இலங்கையில் வாழும் மக்களுக்கு சுத்தமான குடிநீரை பெற்றுக்கொடுப்பதற்கும், தடையின்றி நீரை விநியோகிப்பதற்கும் ஒரு இளம் அமைச்சராக முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் பற்றி அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

அத்துடன், நீர்வழங்கல் தொடர்பான அனைத்து அரச திணைக்களங்கள், அரச நிர்வாக பொறிமுறை மற்றும் தனியார் துறையை ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து தனி அலகொன்றை ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகள் முடிவடையும் நிலையில் இருப்பதாக தெரிவித்த அமைச்சர், அதன் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் சம்பந்தமாகவும் எடுத்துரைத்தார்.

அதேபோல எதிர்கால திட்டங்கள் பற்றியும், அதற்கு உலக வங்கியின் பங்களிப்பு, ஒத்துழைப்பு, ஆலோசனை அவசியம் எனவும் உலக வங்கி தூதுக்குழுவினரிடம் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்தார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நீர்வழங்கல் துறையில் இடம்பெற்றுவரும் மறுசீரமைப்புகளை வரவேற்ற உலக வங்கி குழுவினர், அமைச்சருக்கு பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

உலக வங்கியின் உதவியுடன் நீர்வழங்கல் துறையில் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள், அவற்றின் முன்னேற்றங்கள் பற்றியும் இரு தரப்பினருக்கும் இடையில் கருத்தாடல் இடம்பெற்றது.

ஐ.நாவின் நிலைபேண்தகு அபிவிருத்தி திட்டத்துக்குள் சுத்தமான குடிநீர் இலக்குக்கும் பிரதான இடம் வழங்கப்பட்டுள்ளது. அந்த இலக்கை அடைவதற்கு அமைச்சால் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு உலக வங்கியின் ஒத்துழைப்பு தொடரும் எனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. இந்த சந்திப்பின் போது, அமைச்சின் செயலாளர் எஸ். சமர திவாகர, ஆலோசகர் ஹரித்த விக்கிரமசிங்க, சமூக நீர்வழங்கல் திணைக்கள தலைவர், வசீப் நீர் திட்டத்தின் பொறியியலாளர், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, பணிப்பாளர் லால் பெரேரா, உலக வங்கியின் பிரதிநிதிகள், பிரத்யேக செயலாளர் மொஹமட் காதர் உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




## மண் சரிவில் சிக்கி ஒருவர் உயிரிழப்பு



(அக்குறணை குறூப் நிருபர்)

மத்திய மலைநாட்டில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக அக்குறணை நகரம் அடிக்கடி வெள்ளத்தில் மூழ்கி வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை மண் சரிவில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அக்குறணை பிரதேசத்தில் வெள்ள அனர்த்தம் இவ்வாரம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. இம்முறை அக்குறணை நகர வீதிகளில் சுமார் 11 அடி வெள்ளம் காணப்பட்டது. அதிகமான கடைகள் முற்றாக நீரில் மூழ்கின. நகரிலுள்ள சில கடைகளில் கூரைவரை நீர் மட்டம் காணப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் உட்பட வீடுகள் பலவும் பாதிக்கப்பட்டன. அக்குறணை, தொடங்கொல்ல பிரதேசத்தில் ஒரு வீட்டின் மீது கொங்கிறீட் தடுப்பு மதில் ஒன்று உடைந்து வீழ்ந்ததில் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். அக்குறணை நகரம் வெள்ளத்தில் மூழ்கி இருந்த காரணத்தால் மாற்று வழி ஊடாக தனது வீட்டுக்குச் செல்லும் போதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பொதுமக்கள் கட்டிட இடிபாடுகளை அகற்றி பாதிக்கப்பட்டவரை மீட்டபோதும் அவர் ஏற்கனவே மரணித்து விட்டதாகத் தெரிய வருகிறது. சம்பவத்தில் மரணித்தவர் அக்குறணைப் பிரதேச வர்த்தகர் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பதுளையில் புத்தாக்கத்திறன் கண்காட்சி



பதுளை நகரில் 'ROBOTI KIDS" Academy ஏற்பாட்டில் மாணவர் தம் 'புத்தாக்கத்திறன்' கண்காட்சி நிகழ்வு பதுளை வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. 'ROBOTI KIDS' Academy யின் பொறுப்பாளரும் பதுளை 'OXFORD' சர்வதேசப் பாடசாலையின் கணினி ஆசிரியருமான சமீர் சித்தீக் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பதுளை மாவட்ட காதி நீதிபதியும் "OXFORD" பணிப்பாளருமான அஷ்ஷெய்க் ரிஸான் ஸெய்ன் (நளீமி) கலந்து சிறப்பித்தார்.

மாணவ மணிகள் வரவேற்பு கீதம் இசைத்தனர். மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

## மரக்கறிகளின் விலைகள் அதிகரிப்பு

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

பலாங்கொடை அருகிலுள்ள பிரதேசங்களில் வியாபார நிலையங்களில் மரக்கறி வகைகளின் விலை அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அதேசமயம் மரக்கறி வகைகளின் தட்டுப்பாடும் நிலவுவதாக தெரிவித்த பொதுமக்கள், போஞ்சி ஒரு கிலோவின் விலை 500 ரூபாவாகவும் கத்திரிக்காய் ஒரு கிலோவின் விலை 400 ரூபாவிற்கும் கோவா ஒரு கிலோவின் விலை 400 முதல் 450 ரூபாவிற்கும் தக்காளி ஒரு கிலோவின் விலை 500 ரூபாய் என விலை உயர்வடைந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.



பலாங்கொடை மிரிஸ்வத்தைசுபைர்ஆலிம்மாவத்தையில்அமைந்துள்ளஅல்ஈமான்பாலர் பாடசாலையின் 11வது வருடாந்த கலைவிழாவின் போது சிறார்களின் வினோத உடைப் போட்டியில் மாணவர்கள் இராணுவ அதிகாரி டாக்டர் ஆசிரியராக காணப்படுகின்றனர்.
(படம்:பலாங்கொடை தினகரன் நிருபர்)

# காலி, முஸ்லிம் கலாசார சங்கத்தின் 60ஆவது நிறைவு விழா கொழும்பில்

(அஷ்ரப் ஏ சமத்)





காலி முஸ்லிம் கலாசார சங்கத்தின் 60 வது ஆண்டு நிறைவு வைபவம் வெள்ளவத்தை மெரைன் டிரைவ் ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை (10) வெகுவிமர்சையாக நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் லாபிர் கரீம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம். பௌசி, அலி சாஹிர் மௌலானா, மற்றும் ஆலோசகர் ஹனீப் யூசுப், இல்யாஸ் கரீம் ஆகியோர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

காலி மாநகரில் இச் சங்கம் கடந்த 60 வருட காலமாக சகல சமூகங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறது. சங்கம் மேற்கொண்டு வரும் சமூக சேவைகள் மற்றும் அகதியா பாடசாலைகள், இரண்டு பள்ளிவாசல் போன்ற திட்டங்களை சிக்காப் இஸ்மாயில் இதன் போது விளக்கமாக தெரிவித்தார். அத்துடன் அகதியா பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இதன்போது இடம்பெற்றன. காலி பள்ளிவாசல்கள் பிரதான நம்பிக்கையாளர்களான ரவுப் மற்றும் இஸ்மத் மொஹமட் ஆகியோர்களது சேவையை பாராட்டி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



## கலாநிதி சந்துரு பெர்னாண்டோக்கு அதி விசேட கௌரவம்



சர்வதேச மனித உரிமைகள் தினம் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் (10) நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக போக்குவரத்து மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன கலந்து கொண்டார். முன்னாள் அமைச்சர்கள் , அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கௌரவ அதிதியாக அருட் கலாநிதி S. சந்துரு பெர்னான்டோ கலந்து சிறப்பித்தார். இதன்போது உலகத்தமிழ் கலை பண்பாட்டு கலைக்கூடத்தின் சர்வதேச தலைவர் டாக்டர் எஸ்.எம். ரஷ்மீ ரூமியினால் அருட் கலாநிதி எஸ் சந்துரு பெர்னாண்டோவுக்கு இந்திய தேசிய மக்கள் பேரவை மன்றத்தின் இலங்கைக்கான தூதுவர் நியமனம் வழங்கப்பட்டதுடன் , Dr. ஆபிரகாம் லிங்கன் விருதும் இதன் போது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பேருவளை பாஸியதுல் நஸ்ரியா ஆண்கள் பாடசாலையில் கௌரவிப்பு



பேருவளை மருதானை களு/அல் பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் ஆண்கள் பாடசாலையிலிருந்து இம்முறை தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் 181 புள்ளிகளை பெற்று பாடசாலைக்கு புகழ் சேர்த்த மாணவன் அல்தாப் சிமாஹ் மற்றும் பரீட்சைக்கு தோற்றி சிறந்த புள்ளிகளை பெற்ற ஏனைய மாணவர்களை பாராட்டி பரிசளித்து கௌரவிக்கும் விழா அண்மையில் பாடசாலை அதிபர் திருமதி எம். எப்.எஸ் வெஹ்யா தலைமையில் நடைபெற்றது. பாடசாலை பழைய மாணவர் குழு, அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து இந்த விழாவினை ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் விஷேட அதிதியாக கலந்து கொண்ட பீ.ஆர் வரவேற்பு மண்டப உரிமையாளரும் சமூக சேவையாளருமான முஹம்மத் ரிஸ்வான் 181 புள்ளிகளை பெற்ற முஹம்மத் அல்தாப் மற்றும் 143 புள்ளிகளை பெற்ற மாணவனுக்கும் பணப்பரிசில்களை வழங்கினார்.

அத்தோடு பழைய மாணவ சங்க குழுவினால் கௌரவிக்கப்பட்ட மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் அப்பியாச புத்தகங்கள் இதன்போது கையளிக்கப்பட்டன.

181 புள்ளிகளை பெற்றுக் கொடுத்த முஹம்மத் அல்தாப் மருதானையை சேர்ந்த எம்.கே.எம் சிமாஹ், எஸ்.ரி சப்ரா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவார்.

## LOLC திவிசவிய எதிர்காலத்தை மேம்படுத்துவதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிக்கும்



LOLC இன் திவி சவிய புரட்சிகர கல்வி முயற்சியின் மூன்றாம் கட்டம் ஒரே நேரத்தில் தொடங்கப்படும், இது கிறிஸ்துமஸின் உண்மையான வாழ்க்கைக்கு அர்த்தம் சேர்க்கிறது. நவம்பரில் இரண்டாம் கட்டம் நிறைவடைந்த போது 3000 பாடசாலைகள் என்ற மைல்கல்லை எட்டியதுடன், இந்த கட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் 100 150 மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கும் இது விரிவுபடுத்தப்படவுள்ளது.

பண்டிகைக் காலத்தை உயிர்ப்பிக்கும் வகையில், LOLC திவி சவிய, டிசம்பர் மாதம் முழுவதும் 'எதிர் காலத்தைப் பரிசளித்தல்' என்ற கருப்பொருளின் கீழ் ஒரு சிறப்பு கிறிஸ்துமஸ் வெளியீட்டை வெளியிடுகிறது. பண்டிகைக் காலத்தில் கொடுக்கல் வாங்கல் மனப்பான்மையை ஊக்குவித்து, LOLC குழுமம், தேசத்திற்கு ஒளிமயமான மற்றும் சிறந்த எதிர்காலத்தை உறுதி செய்வதற்காக இளைஞர்களின் மனதில் உண்மையான மாற்றத்தை உருவாக்க உறுதிபூண்டுள்ளது.

இந்த கருத்தின் எதிரொலியாக, நாடு முழுவதும் உள்ள 24 LOLC கிளைகள் பல சிறப்பு நடவடிக்கைகளை மூலோபாய ரீதியாக திட்டமிட்டுள்ளன, இதில் உள்ளூர் பள்ளி மாணவர்கள் பங்கேற்பது, 'பரிசு' கனவுகளின் மதிப்பை வலியுறுத்துகிறது. 2023 பெப்ரவரி மாதத்தில் இல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, LOLC திவி சவிய நிகழ்ச்சித் திட்டம், தரம் 1 முதல் தரம் 13 வரையிலான மாணவர்களுக்கு அத்தியாவசியப் பள்ளிப் பொருட்களை வழங்குவதன் மூலம் தேசத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அதன் அர்ப்பணிப்பை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகிறது.

## வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலை சிறந்த பெறுபேறு

(வெலிகம தினகரன் நிருபர்)



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றின்படி, தென் மாகாண மாத்தறை மாவட்ட தமிழ் மொழி மூல பாடசாலைகளில் மாறை / வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலையிலிருந்து தோற்றிய மாணவர்களுள் அதிகூடியதான மாணவர்கள் வெட்டுப்புள்ளியை தாண்டி மாத்தறை மாவட்டத்தில் சாதனைப் படைத்துள்ளனர். இப் பாடசாலையில் 13 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் பதுஹுர்ரஹ்மான் தெரிவித்தார்.

ஏ.என்.உல்பா மர்யம் (176), என்.ஆர் இப்றாஹீம் (173), எம்.வை. ஆய்ஷா ஹம்தா (166), எம்.எம் அர்கம் (158), எம்.எப்.எம் ஹம்ஸா (157), எம்.எம் அப்துர்ரஹீம் (156) எம்.என். ஷம்மாஸ் அஹ்மது (152), எம்.கே.எம். அர்கம் (152), ஏ.எஸ் பாத்திமா அம்னா (151), ஏ. அப்துர் ரஹ்மான் (149), எம்.எம் அப்துர்ரஹ்மான் (149), அஹ்மது மஹ்மூத் (148), மற்றும் எம்.எப் ஆயிஷா மின்ஹா (147), ஆகியோரே பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். சித்தியடைந்த மாணவர்களுடன் அதிபர் , உப அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்கள் சேர்ந்து எடுத்து கொண்ட படம்.

## அநுராதபுரம் சாஹிரா மாணவி 174 புள்ளிகள்

திறப்பனை தினகரன் நிருபர்



இம்முறை வெளியான 2023 தரம் 05 புலமை பரிசில் பரீட்சையில் அநுராதபுரம் சாஹிரா தேசிய பாடசாலை மாணவி மொஹமட் சியாம் ஷஸ்பா 174 புள்ளிகளைப் பெற்று, பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் மொஹமட் சியாம் ஆசிரியர் அஸ்மினா சுல்தான் பெலிகொம் ) தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியாவார்.

## கிழக்கு பெட்மின்டன் போட்டி: அஸ்பெக் அகடமி சம்பியன்



மைதான திறப்பு விழாவுடன் அஸ்பெக் அகடமி மற்றும் சிராஜ் பெட்மின்டன் கழகம் இணைந்து நடத்திய பெட்மின்டன் சுற்றுப் போட்டியில் அஸ்பெக் அகடமி அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

சிராஜியா அரபிக் கல்லூரி வளாகத்தில் அஸ்பெக் அகடமி பணிப்பாளர் ஏ.எல்.எம். இர்பான் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்ற இந்தப் போட்டியில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்றன. இதில் சிராஜ் பந்து பெட்மின்டன் அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண விளையாட்டு துறை பணிப்பாளர் ரு. சிவராசா கலந்து கொண்டார். சிராஜ் அரபிக் கல்லூரியின் முதல்வர் யு. தாஹிர், கல்லூரியின் கல்விப் பிரிவு தலைவர் ஏ.எல். நைனா முஹமட் ஆகியோரும் பங்கேற்றனர்.



பாணந்துறை கொரே தொடுவ சந்திரசேகர மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற கெரேத்தொடுவ பிரமியர் லீக் சுற்றுப் போட்டியில் சம்பியன் கிண்ணத்தை வென்ற ரோயல் அணி அதற்கான கிண்ணத்தை பெறுவதை படத்தில் காணலாம். போட்டிக்கு பிரதம அதிதிகளாக யுனிவர்சல் பெயின் கம்பனியின் அல்ஹாஜ் பௌசான், கொரே தொடுவ முஸ்லிம் வித்தியாலய அதிபர் எம். முத்தலிப் ஆகியோர் கலந்துகொண்டனர். (படம்: அஷ்ரப் ஏ சமத்)

### இளையோர் ஆசிய கிண்ணம்

# ஐக்கிய அரபு இராச்சியத்திடம் இலங்கை இளையோர் தோல்வி

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிரான 19 வயதுக்கு உட்பட்ட அசிய கிண்ண தொடரின் பி குழு போட்டியில் இலங்கை இளையோர் அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது.

டுபாயில் நேற்று (11) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணி ஆரம்பம் தொட்டு முக்கிய இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது. 3 ஓட்டங்களுக்கே முதல் விக்கெட்டை இழந்த இலங்கை இளையோர் 115 ஓட்டங்களுக்கு அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்த நிலையில் 4 விக்கெட்டுகளை இழந்தது.

மத்திய வரிசையில் தினுர களுபஹன நிதானமாக ஆடி 87 பந்துகளில் 2 பௌண்டரிகளுடன் ஆட்டமிழக்காது பெற்ற 56 ஓட்டங்களுமே அதிகபட்சமாக இருந்தது. அணித் தலைவர் சினத் ஜயவர்தன 65 பந்துகளில் 3 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 49 ஓட்டங்களை பெற்ற நிலையில் ரன் அவுட் ஆனார்.

இதனால் இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 220 ஓட்டங்களை பெற்றது.

ஐக்கிய அரபு இராச்சியம் சார்பில் ஓமித் ரஹ்மான் மற்றும் அயான் அப்ஸால் கான் தலா 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தனர்.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த இலங்கை இளையோர் அணியின் முதல் இரு விக்கெட்டுகளையும் 31 ஓட்டங்களுக்குள் வீழ்த்த கருக செங்கத்தினால் முடிந்தது. எனினும் முதல் வரிசையில் வந்த டனிஷ் சூரி அபாரமாக துடுப்பெடுத்தாடி ஐக்கிய அரபு இராச்சியத்தின் நம்பிக்கையை அதிகரித்தார். 88 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 4 பௌண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் 75 ஓட்டங்களை பெற்றார்.



தொடர்ந்து மத்திய பின் வரிசை வீரர்கள் சிறப்பாக ஆடி ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெற்றியை உறுதி செய்தனர். இதன்மூலம் அந்த அணி 48.2 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 224 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. இதன் போது இலங்கை இளையோர் சார்பில் கருக செங்கத் 3 விக்கெட்டுகளை பதம் பார்த்தார்.

இலங்கை இளையோர் தனது முதல் போட்டியில் ஜப்பான் அணியை வீழ்த்திய நிலையில் அது தொடரின் அரையிறுதிக்கு முன்னேற போராட வேண்டி ஏற்பட்டுள்ளது.

இலங்கை தனது கடைசி குழு நிலை போட்டியில் நாளை (13) பங்களாதேஷ் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

புள்ளிப் பட்டியலில் இரண்டு புள்ளிகளுடன் இருக்கும் இலங்கை அரையிறுதிக்கு முன்னேற இந்தப் போட்டியில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும் என்பதோடு ஐக்கிய அரபு இராச்சியத்தை விடவும் நிகர ஓட்ட வேகத்திலும் முன்னிலை பெறுவது கட்டாயமாகும்.

## ஸாஹிராவை வீழ்த்தி சம்பியனானது அலிகார்



மாளிகைக்காடு குறூப் நிருபர்

பிரிவு 1 பாடசாலை அணிகளுக்கு இடையிலான 20 வயதுக்கு உட்பட்ட 'தி போல் பிளாஸ்டர்' கால்பந்து சம்பியன்ஷிப் தொடரில் கொழும்பு ஸாஹிரா கல்லூரியை ஏறாவூர் அலிகார் கல்லூரி அணி பெனால்டி சூட் அவுட் முறையில் 5–4 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி கிண்ணத்தை கைப்பற்றியது.

கொழும்பு சுகததாச அரங்கில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற இறுதிப் போட்டியின் முழு நேர முடிவின்போது இரு அணிகளும் எந்த கோலையும் பெறாத நிலையில், முடிவைத் தீர்மானிப்பதற்கு பெனால்டி சூட் அவுட் முறை பயன்படுத்தப்பட்டது. இதில் ஸாஹிரா அணி இரண்டாவது முயற்சியில் பந்தை வலைக்குள் செலுத்தத் தவறிய நிலையில் அலிகார் கல்லூரி அணி ஐந்து முற்சிகளிலும் கோல் புகுத்தியது. இலங்கை பாடசாலைகள் கால்பந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த போட்டியில் மொத்தம் 20 அணிகள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

## வொரியர்ஸ் சம்பியன்



பாலமுனை, ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்கள்

மர்ஹூம் ஏ.சீ.எம் சாலிஹ் வெற்றிக் கிண்ண கரப்பந்தாட்டப் போட்டியில் ட்ரை ஸ்டார் வொரியர்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (09) நடைபெற்ற இந்தப் போட்டியில் ட்ரை ஸ்டார் கிங் அணியை எதிர்கொண்ட வொரியர்ஸ் அணி 15–13 என்ற புள்ளிகளால் வெற்றியீட்டியது. கழகத்தின் கரப்பந்தாட்ட இணைப்பாளர் ஐ.எம். ஹம்தான் தலைமையிலேயே இந்தப் போட்டி நடைபெற்றது.

## குடிநுழைவை இறுக்க அவுஸ்திரேலியா முடிவு



அடுத்த இரண்டு ஆண்டுகளில் குடியேறிகளை ஏற்பதை பாதியாகக் குறைக்கப்போவதாக அவுஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது. அதே போன்று அடுத்த ஈராண்டுகளுக்கு, சர்வதேச மாணவர் விசா மற்றும் குறைந்த திறன் ஊழியர்களுக்கான விசா வழங்கும் முறையைக் கடுமையாக்க உள்ளதாகவும் அது கூறியது.

2022ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டுவரை வேலைக்காகக் குடிநுழைந்தோரின் எண்ணிக்கை சாதனை அளவாக 510,00க்கு அதிகரித்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக உள்துறை அமைச்சர் கிளார் ஓ'நீல் அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

குடிநுழைவு எண்ணிக்கை அதிகரித்ததால் அவுஸ்திரேலியா வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்புகளில் நெருக்கடியை சந்தித்துள்ளது.

என்றாலும் அவுஸ்திரேலியாவில் திறன்பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கையில் இன்னும் பற்றாக்குறை நீடிக்கிறது. அவர்களைக் கவர்ந்திழுப்பதில் அவுஸ்திரேலிய அரசாங்கம் கடும் சவாலை எதிர்நோக்கி வருகிறது.

புதிய கொள்கைகளின் கீழ், சர்வதேச மாணவர்கள் உயர்தரத்திலான ஆங்கில மொழித் தேர்வுகளில் தேர்ச்சிபெற வேண்டியது கட்டாயம். மேலும், நீண்டகாலம் தங்க வகை செய்யும் மாணவர்களின் இரண்டாவது விசாவுக்கான விண்ணப்பம் கடுமையாகப் பரிசீலிக்கப்படவுள்ளது.


2025ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள் ஆண்டுக்கு 250,000 குடியேறிகள் மட்டுமே அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கப்படலாம். அது கொவிட் தொற்று காலக்கட்டத்துக்கு முன்பிருந்த எண்ணிக்கையாகும்.

## சர்வதேச செய்திகள்

## பொதுச் சபையில் இன்று வாக்கெடுப்பு

காசாவில் அவசர போர் நீறுத்தம் ஒன்றை கோரும் தீர்மானம் தொடர்பில் 193 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐ.நா பொதுச் சபையில் இன்று (12) வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

அவசர போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் ஐ.நா பாதுகாப்புச் சபை தீர்மானத்தை நிராகரித்து அமெரிக்கா கடந்த வெள்ளிக்கிழமை (8) வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்திய நிலையிலேயே பொதுச் சபையில் அவசரக் கூட்டம் இடம்பெறவுள்ளது.



எனினும் பொதுச் சபையில் கடந்த ஒக்டோபரில் இடம்பெற்ற வாக்கெடுப்பில், "மோதலை முடிவுக்குக் கொண்டுவர வழிவகுக்கும் அவசரமான, நீடித்த மற்றும் நிலையான மனிதாபிமான போர் நிறுத்தம்" ஒன்றுக்கு அழைப்பு விடுக்கும் தீர்மானத்திற்கு 121 நாடுகள் ஆதரவாகவும் 14 நாடுகள் எதிராகவும் வாக்களித்ததோடு 44 நாடுகள் வாக்களிப்பை தவிர்த்திருந்தன.

## சீன முன்முயற்சியிலிருந்து வெளியேறுகிறது இத்தாலி

சீனாவின் பெல்ட் அன்ட் ரோட் முன்முயற்சி திட்டத்திலிருந்து வெளியேறுவதற்கு இத்தாலி முடிவு செய்துள்ளது.

இது தொடர்பில் சீன அரசாங்கத்திற்கு அந்நாட்டு பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி சார்பில் இராஜதந்திரக் குறிப்பொன்றின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.




அக் குறிப்பில், இம்முன்முயற்சியில் இருந்து வெளியேறுகின்ற போதிலும் சீனாவுடன் மூலோபாய நட்பைப் பேண இத்தாலி விரும்புவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெல்ட் அன்ட் ரோட் முன்முயற்சியின் பங்கேற்பை 2019 இல் இத்தாலி அங்கீகரித்தது. அந்த அங்கீகாரம் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் காலாவதியாகக் கூடியதாகும். ஆனாலும் அதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்த முன்முயற்சியில் இருந்து வெளியேறுவதற்கான முடிவை இத்தாலி அறிவித்துள்ளது. இல்லாவிட்டால் அந்த அங்கீகாரம் தானாகவே மேலும் ஐந்து வருடங்களுக்கு புதுப்பிக்கப்பட்டிருக்கும்.

# பணயக்கைதிகளுக்கு எதிராக ஹமாஸ் எச்சரிக்கை: தொடர்ந்தும் கடும் மோதல்

## காசாவில் உயிரிழப்பு 18,000ஐ தாண்டியது



காசாவில் போர் தீவிரம் அடைந்துள்ள கான் யூனிஸில் இஸ்ரேலியப் படை தொடர்ந்து முன்னேற முயன்று வரும் நிலையில் பலஸ்தீன போராளிகளுடன் நேற்று (11) உக்கிர மோதல் நீடித்தது. பணயக்கைதிகள் உயிருடன் திரும்ப மாட்டார்கள் என்று ஹமாஸ் அமைப்பு எச்சரித்ததை அடுத்து இஸ்ரேலின் வான் மற்றும் பீரங்கி தாக்குதல்களும் தீவிரம் அடைந்துள்ளன.

வடக்கு காசாவில் ஜபலியா அகதி முகாம் மீது கடந்த ஞாயிறன்று சரமாரித் தாக்குதலில் குறைந்தது 57 பேர் கொல்லப்பட்டதோடு அன்றைய தினத்தில் மாத்திரம் சுமார் 300 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இதனால் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 18,000ஐ தாண்டியுள்ளது. இதில் சிறுவர்கள் மற்றும் பெண்களே அதிகமாக உயிரிழந்திருப்பதோடு கடந்த இரண்டு மாதங்களுக்கு மேல் நீடிக்கும் மோதல்களில் 49,500 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

கான் யூனிஸ் நகரில் இஸ்ரேலியப் படை படிப்படியாக முன்னேறி வரும் நிலையில் அங்கு கடும் மோதல் நிடிக்கிறது. முன்னர் வடக்கு காசாவில் இருந்து வெளியேறுபவர்களுக்கான பாதுகாப்பு பகுதியாக இருந்த கான் யூனிஸின் மத்திய பகுதி வரை இஸ்ரேலிய டாங்கிகள் வந்திருப்பதாக அங்கிருக்கும் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களால் 2.3 மில்லியன் மக்கள்தொகை கொண்ட காசாவின் 85 வீதமான மக்கள்



தமது வீடுகளை விட்டு வெளியேறி இருப்பதோடு, ஒட்டுமொத்த காசாவும் பாதுகாப்பற்ற பகுதியாக உள்ளது என்று ஐ.நா நிறுவனம் தெரிவித்துள்ளது.

காசாவில் இஸ்ரேல் தரைப்படையை அனுப்பிய பின் முதல் முறையாக அந்தப் பகுதியில் தமது பீரங்கிப் படை செயற்பட ஆரம்பித்திருப்பதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

மறுபுறம் வடக்கு காசா மற்றும் கான் யூனிஸில் பல இஸ்ரேலிய டாங்கிகளை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தியதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. வடக்கு காசாவில் தால் அல் சாதர் பகுதியில் இஸ்ரேலிய டாங்கி ஒன்றின் மீது தாக்குதல் நடத்தும் வீடியோ ஒன்றையும் அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் காசாவில் கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 100ஐ தாண்டியுள்ளது. தெற்கு காசா மோதலில் மூன்று இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு போருடன் தொடர்புபட்ட விபத்து ஒன்றில் மேலும் ஒரு வீரர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறியது.

இதனையடுத்து கடந்த ஒக்டோபர் 27 ஆம் திகதி இஸ்ரேல் தரைவழி தாக்குதலை ஆரம்பித்தது தொடக்கம் கொல்லப்பட்ட துருப்புகளின் எண்ணிக்கை 101 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை கைதிகள் பரிமாற்றம் மற்றும் பேச்சுவார்த்தை மற்றும் தமது கோரிக்கைகளை நிறைவேற்றாத பட்சத்தில் இஸ்ரேல் தமது பணயக்கைதிகளை உயிருடன் பெற முடியாது என்று ஹமாஸ் அமைப்பு எச்சரித்துள்ளது. காசாவில் தொடர்ந்து 137 இஸ்ரேலிய பணயக்கைதிகள் இருப்பதோடு இஸ்ரேலிய சிறைகளில் சுமார் 7,000 பலஸ்தீன கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் காசாவில் புதிய போர் நிறுத்தம் ஒன்றை கொண்டு வரவும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான முயற்சியிலும் கட்டார் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. கட்டாரின் மத்தியஸ்தத்தில் ஏற்கனவே ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையே ஏழு நாள் போர் நிறுத்தம் ஒன்று அமுல்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் காஸாவில் தொடரும் போர் சுகாதாரப் பேரழிவை ஏற்படுத்தி வருவதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. நிரந்தர நோய்ப் பரவலுக்கான அறிகுறிகள் தென்படுவதாக அது எச்சரித்தது.

காசாவில் நிலைகுலைந்து கொண்டிருக்கும் சுகாதாரக் கட்டமைப்பைச் சீரமைக்கப் பெரும்பாலும் வாய்ப்பே இல்லை என்று சுகாதார அமைப்பின் தலைமைச் செயலாளர் கூறினார்.

700 பேருக்கு ஒரேயொரு குளியலறை; 150 பேருக்கு ஒரேயொரு கழிப்பறை என்று காசா மக்களின் துயரத்தை அந்த அமைப்பு சுட்டிக்காட்டியது. மக்கள் நாள்தோறும் உணவுக்காகப் போராடுகின்றனர். பாதிப்பேர் பட்டினியால் தவிக்கின்றனர்.

காசாவில் உள்ள உதவி நிலையங்களில் மக்கள் பல மணி நேரம் கால்கடுக்கக் காத்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு கூறியது.

காசாவில் போர் உச்சமடைந்திருக்கு சூழலில் இஸ்ரேலின் லெபனான் எல்லையில் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்புடனான மோதலும் அதிகரித்துள்ளது. மேற்குக் கலிலியில் உள்ள தனது இராணுவத் தளத்தின் மீது ஹிஸ்புல்லா நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் ஆறு வீரர்கள் காயமடைந்ததாக இஸ்ரேல் கூறியது.

இதனை அடுத்து இஸ்ரேலிய எல்லைக்கு அருகில் இருக்கும் லெபனான் நகர் மீது இஸ்ரேல் சரமாரி தாக்குதலை நடத்தி இருப்பதோடு அங்குள்ள வீடொன்றையும் தகர்த்துள்ளது.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பு கோலன் குன்று பகுதியில் இருந்து ஞாயிற்றுக்கிழமை மாலை தலைநகர் டமஸ்களை நோக்கி இஸ்ரேல் வீசிய ஏவுகணைகளை இடைமறித்ததாக சிரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

மறுபுறம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை பகுதியிலும் பதற்றம் நீடித்து வருகிறது. அங்கு இஸ்ரேல் நேற்று நடத்திய சுற்றிவளைப்பு தேடுதல்களில் இரு பெண்கள் உட்பட 28 பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டனர்.

இஸ்ரேல் மற்றும் காசா போர் வெடித்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் மேற்குக் கரையில் 3,700 பேர் கைது செய்யப்பட்டிருப்பதோடு 270க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.